www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

පක්කම් 20 ரூபா 11/00

දිනමුරසු වාරමලර ஜூலை.14–20,1996

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 161




கூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## இப்போது ஏன் தயக்கம்?

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

"எந்தக் குழந்தையும்
நல்ல குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே!"

அரசியல் வாதிகளும்
அப்படித்தான்!

பதவிக்கு வருவதற்கு முன்
வெளிப்படையாகப் பேசுவார்கள்.
வெட்டொன்று, துண்டுரெண்டாக
பிரச்சனைகளை அலசுவார்கள்.

பதவிக்கு வந்த பின்னர்தான்
கோளாறு ஆரம்பமாகிறது.

1943ல்-
ஜே.ஆர்.ஜயவர்த்தனா,
கட்டாயக் கல்வியாக
'சிங்களம்' வேண்டும் என்றார்.

அது அவசியமேயில்லை
என்று சொன்னவர்தான்
எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா.

அதே பண்டாதான்
1956இல்
தனிச்சிங்களச் சட்டத்தை
சபையேற்றினார்.

ஜே.ஆர்.பாய்ந்தது
எட்டடி;
பண்டாரநாயக்கா பாய்ந்தது
பதினாறடி.
காரணம்-அரசியல்தான்!

இத்தனைக்கும்,
ஜே.ஆருக்கும், பண்டாவுக்கும்
சிங்களத்தைவிட
ஆங்கிலத்தில்தான் அதிக நேசம்!

மொழிப் பற்றும்
இனப்பற்றும்
அவர்களுக்கு துளியும் இல்லை
என்று சொல்ல வரவில்லை.

ஆனால்-அந்தப் பற்றை
வெறியாகக் காட்டியதும்
அதற்கேற்ற சட்டங்கள் வகுத்ததும்
அரசியல் போட்டிகளில்
வெற்றிக்கொடி நாட்டத்தான்!

இன்றும் அதே கதைதான்,
ஜனாதிபதி சந்திரிக்கா
இனப்பிரச்சனை தீர்வு
அடுத்த தேர்தலில் தமக்கு
பிரச்சனைக்குரிய தீர்வாக

மாறிவிடக்கூடாதே என்றுதான்
கவலை மிகக் கொண்டுள்ளார்.

அரசாங்கத் தரப்பு தயங்குவதால்
இனவாத சக்திகளுக்கு-
தங்கள் குரலுக்கு
மரியாதை கிடைப்பதாக மகிழ்ச்சி!
அதனால், முன்பைவிட அதிகமாகத்
துள்ளுகிறார்கள்- துடிக்கிறார்கள்!

எதிர்க்கட்சியோ
மதில் மேல் பூனையாக
அமர்ந்து வேடிக்கை பார்க்கிறது!

எதிர்க்கட்சியின்
ஆதரவு முக்கியமல்லவா?
என்று கேட்டு
தீர்வின் தாமதத்துக்கு
காரணம் சொல்கிறது அரசு!

இது முன்பே தெரியாததா?
எதிர்க்கட்சியின்
நாடித்துடிப்பறிய
இப்போது காத்திருப்பதைவிட
முன்பே ஒரு
காரியம் செய்திருக்கலாம்.

எதிர்க்கட்சியை அழைத்துப் பேசி
ஆளும் கட்சியும்-எதிர்க்கட்சியும்
இணைந்து ஒரு தீர்வுத்திட்டத்தை
முன்வைத்திருக்கலாம்.
லாபத்தில் இரு தரப்பும்
சம பங்கு கொண்டிருக்கலாம்!

அரசாங்கம் தனித்து
தீர்வு யோசனையை முன்வைத்தது.
அரசாங்கத்தின் துணிச்சல் என்று
அதனை விழுந்தடித்து
பாராட்டியவர்கள் பலப் பலர்!

அத்தனை பாராட்டுக்களையும்
ஒரு புன்னகையோடு ஏற்றுவிட்டு
இப்போது எதிர்க்கட்சி
உடன்படமறுக்கிறதே என்று
தயக்கம் காட்டுவது சரியா?

இதுவரை ஆட்சியிலிருந்த
எந்தக் கட்சியும்
செய்யாத ஒன்றைச் செய்ய
முன்வந்தமையால்தான்
ஜனாதிபதியை துணிச்சல்காரர்
என்று பலர் பாராட்டினார்கள்!

இப்போது-எதிர்க்கட்சியின்
நிலைப்பாட்டைக் காட்டி
முன்வைத்த காலை பின்வைத்தால்
இனியெப்போதும்
அரசியல் தீர்வை எட்டும்
ஒரு சந்தர்ப்பம் கிடைக்காது!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## தாகம்

மனிதன் பிறந்ததிலிருந்து இறக்கும் வரைக்கும் ஏதாவது தாகத்தோடுதான் வாழ்கின்றான். இன்னும் இன்னும் ஏதாவது தேட வேண்டும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற தாக உணர்வே மேலோங்கி இருக்கிறது. மாறாக கடவுளின் காரியத்தில் தாகவுணர்வு அற்றவர்களாகவே நாம் வாழ்கின்றோம்.

"எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து வேதவாக்கியம். நிறைவேறத்தக்கதாக: தாகமாயிருக்கிறேன் என்றார்." யோவான்(19:28)

மனிதனை படைப்பின் மகுடமாக படைத்த ஆண்டவர் மனிதனாகிய நாம் கடவுளுக்கு பிரியமற்ற வாழ்க்கையை விட்டு மனந்திரும்பி வாழவேண்டும் என்ற தாகமுள்ளவராக, சிலுவை சுமந்தவாராக, வேதனையோடு, கண்ணீரோடு, குருதி வடிய, தாகமாயிருக்கிறேன் என்று கூறுகின்றதை நாம் காணுகின்றோம். ஆண்டவர் இயேசுவுக்கு இருந்த தாகம் நாம் அநீதியான வாழ்க்கை வாழாது கடவுளுக்கு பிரியமான வாழ்க்கை வாழவேண்டும் என்பதுதான். உலகத்துக்குரிய தாகத்தை விட்டு, ஆண்டவர் இயேசுவின் தாகத்தை தீர்க்கும் நல்ல பானங்களாக நாம் செயற்படுவோம். நமது வாழ்க்கையிலுள்ள தாகம் ஆண்டவர் இயேசுவின் தாகத்தை நிறைவேற்றுவதாக அமையட்டும்.

சகோ. எஸ்.யேசுநாதன், செங்கலடி.

## ஆன்மீகம்



## மு:மினின் முன் ஏற்பாடு

ஒரு முஃமினுடைய நற்செயல்களினால் அவனது மரணத்திற்கு பின் அவனுடன் மண்ணறையில் செல்லக்கூடியவை.

அவன் கற்றுப் பரப்பிய கல்வி, இவ்வுலகிற்காக விட்டுச் செல்லும் ஒரு நல்ல சந்ததி அல்லது அவனுடைய பின் சந்ததிக்காக விட்டுச் செல்லும் குர் ஆன்.

இன்னும் இவன் தொழுகைக்காக ஸ்தாபித்துக் கொடுத்த ஒரு பள்ளிவாசல் மற்றும் வழிப்போக்கர்களுக்கென அவன் கட்டிய தங்குமிடம்.

மேலும் இவனால் வெட்டுவிக்கப்பட்ட தண்ணீர் கல்வாய், இவன் உடல் நலத்தோடு இருக்கும் போது தனது செல்வத்தினால் செய்த தர்மம்.

இவைகளே இந்த முஃமினை அல்லாஹ்விடத்தில் நல்லடியார் கூட்டத்தில் சேர்க்கிறது. நாமும் இவ் விதி முறைகளை கடைப்பிடித்து நாயன் அருள் பெறுவோம்.

எம்.சி.கலீல், கல்முனை-05.

## கவிதைப் போட்டி இல. 158

### பரிசுக்குரிய கவிதை

### நாளை நீயும்

பிறக்கும் போது
வெள்ளைத் தாளாய்
பூமிக்கு வந்தீர்!
யுத்தமும்- பிணக்கும்
கறை பூசி
உம்மைக் காயப்படுத்தும்!
நீரும் நாளை
துவக்கோடு அலைவீர்!

தவவரதன்- தம்பிலுவில்

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

**ஏற்றம்**

அங்கரும்
அமுல்பாலும்
தங்கவிலையடா....
தங்கமே! நீ
தரணியில் கால்
வைத்தநேரமே!

வை. சித்திக்கிருஷ்ணா,
பாண்டிருப்பு-01.

**"பா(ல்)லகன்"**

உன் தந்தையிடம்
எனைக் கொடுத்து
உனை வாங்கினேன்!
மகனே!
பாலகன்-உன்
பசி தீர்க்க
பால் வேண்டும்:
ஏழை நான்
எதை கொடுத்து
அதை வாங்க?!

மகீன் எம். சகீல், மாருகொன.

**குழந்தை**

இரு(வர்) விரல் மீட்ட
(திருமண)வீணையில்
எழுந்த ராகமன்றோ?!

நிட்டம்புவ-கலாயுவன்.



**யார் இவன்?**

சின்னக்கைகள் சிறகடிக்க
வட்டக்கண்கள் படபடக்க
வாஞ்சையுடன் அன்னையிடம்
கொஞ்சித்தான் விளையாடிடும்
சின்னக் கண்ணன் இவன்
சிங்கார வேலவனோ?

ஆனந்தன் ரவிச்சந்திரன்-
கம்கருபுர தொடர்மாடி.

**தேவை....!**

போருக்கு ஆள்தேவை!
விதியெங்கும்
தேடல் நடக்கிறது.
வெள்ளி நிலாவே!
வெளியே வராதே!
இரு தரப்புக்கும்
நீ தேவை!

லக்ஷ்மி ஸ்ரீ-
டபிள்யூ.ஏ.டி. சில்வா மாவத்தை,
கொழும்பு.

**வா புறா**

புறா-புறா
வெண்புறா
விலங்கொடித்து வா புறா!
சட சட வென்று பறந்து வா
சமாதானம் கொண்டு வா!
சமர் நிறுத்த ஓடிவா!

மா. சுலோசனா- கண்டி வீதி,
கம்பளை.

## கவிதைப் போட்டி இல-161



**கவனியுங்கள்**

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- **20.07.1996**

**-முகவரி-**
கவிதைப் போட்டி இல.161
தினமுரசு வாரமலர்
த.பெ. இல-1772
கொழும்பு.

**முடியவில்லை.**

கூனல் விழும் வரை
கூடை சுமந்தோம்!
பருவம் வந்ததும்
பாலகனை சுமந்தோம்!
விலைவாசியும் சுமையானால்,
எப்படிச் சுமப்போம்?!

எம்.எம்.ஸன்பர்- கிண்ணியா-06.

**கவனம்!**

செல்வமே...!
"ஷெல்" வங்களால்தான்
நமக்குச்
சேதம் வரும்;
கவனம்...!

எஸ். பிரபா- கொக்காகல.

**மாளிகை எதற்கு?**

கொளுத்தும் வெயிலிங்கு- என்
குடலைச் சுட்டுப் போட்டாலும்;
கும்பி கொதித்திங்கே
குடிசையிலே வாழ்ந்தாலும்;
கோமகனே நீ இருக்க,
கோபுர மாளிகை எனக்கெதற்கு?

ஹப்புத்தளையூர்- மனோ.

**விதி**

நாடோடி வாழ்வு நம தலைவிதி!
ஓடோடி வரும் எங்கு நிம்மதி?
போராடும் பூமிக்கு ஓர் சங்கதி! -இது
போராடப் பிறந்திருக்கும் சந்ததி!!

அருணா அன்னத்துரை- விபுலானந்த வீதி,
காரைத்தீவு.

**யார் அறிவார்!**

வெள்ளிச் சிறகடிக்கும்
வெண்புறாவை நீ கேட்டால்,
வெதும்பி நிற்கும் தாய்மனதை
யாரறிவார் சொல் மனமே!

உன்னஸ்கிரிய-ஏ.பி.சதாசிவம்,
தெஹிவளை.

**மலையகம் இன்னோர்-யாழ்ப்பாணம்!**

இவன்"கூட்டல்"குறி;
இவனை "கழித்தல்" குறி ஆக்காதீர்!
பின் இவன்
"பிரித்தல்"குறி ஆகிடுவான்!

சுபா வரன்- கண்டி.

**பூரிப்பு!**

போர்த் தேசத்திலிருந்து
தப்பிப் பிழைத்துப் போக
பூரிப்புடன் புறப்படுகிறதோ
பூஞ் சிட்டு?

செல்வன் ஸ்ரீரவி-
வரக்காந்தோட்ட வீதி, இரத்தினபுரி.

## வாசக(ர்) சாலை

தித்திக்கும் தினமுரசே!

உனது ஆறாம் பக்க அபிமான வாசகன் நான். அற்புதன் எழுதும் "அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை" அரசியல் தொடர் சூப்பர். இருளிலே மூழ்கடிக்கப்பட்ட எத்தனையோ உண்மைகளை வெளிச்சத்திற்கு கொண்டுவரும் உனது முயற்சிக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள். தொடரட்டும் உனது பயணம்.

பி.கிறிஸ்ரி அன்ரனி, தாண்டவன்வெளி, மட்டுநகர்.

முரசின் 159ல்...

அப்பாடா!.. சிந்தியா அவர்கள் முதன் முதலில் என் கேள்விக்கு பதில் வழங்கியிருந்ததை படித்து துள்ளிக் குதித்தேன். நன்றி, சபாஷ். "கவுண்டமணியின் ஒரு ஜோடி" எனும் தலைப்பில் செந்தில்-கவுண்டமணி உரையாடல் காட்சியாக 'காதில பூ கந்தசாமி' அவர்கள் வழங்கியிருந்தது உண்மையில் ஒரு திரைப்பட நகைச்சுவை போல் இருந்தது. பாராட்டுக்கள். மேலும் முகப்பில் வினிதா, தேவயாணி ஆகியோரின் புகைப்படத்துடன் கவுண்டமணியின் புகைப் படத்தையும் பிரசுரித்து விட்டு 'சினி விசிட்' டில் விஜயகாந்தின் பெயரை போட்டு குழப்பிவிட்டீர்கள். தவறா?

ப்ரியநேசி. களுத்துறை(தெற்கு).

முரசில் என்னை வியக்கவைத்தவைகள்!
திகில் நிறைந்த தொடர் கதைகள்.
சுவைக்கச் சுவைக்க தெவிட்டாத தேன்கிண்ணம்.
கண்ணைப்பறிக்கும் சினிவிசிட்
சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும் கற்பனைப் பேட்டி..
முரசுக்குப் போட்டி முரசேதான்.

ஜே.யூட் ஹிலேரியன், மட்/தாண்டவன்வெளி.

கொழும்பு- புறக்கோட்டை குண்டுவெடிப்பு சம்பவம் 'ஈரோஸ்' இயக்கத்தால் செய்யப்பட்டது என்றே நினைத்திருந்தேன். அரசியல் தொடர் உண்மையைத் தெரிய வைத்திருக்கிறது. வெளிவராத பல தகவல்களை திரட்டித் தரும் முயற்சி உண்மையிலேயே காலத்துக்கு ஏற்றதாகும்.

பாராட்டுக்கள்.

எஸ்.ஜெயச்சந்திரன், கொழும்பு-11.




அரசியல் தொடரைப் படிக்கும் போது ஒரு பக்கம் பெருமை. நமது போராளிகளும் உலக விடுதலை இயக்கங்களுக்கு சளைத்தவர்களல்ல என்பதால் பெருமை. இத்தனை அரிய முயற்சிகளும், தியாகங்களும், திறமைகளும் ஒற்றுமையின்றி விழலுக்கு இறைத்த நீராயிற்றே என்பதை நினைக்க கவலையாக இருக்கிறது.

மா.சுந்தரேசன், கண்டி.

கார்லோஸ் தனது நடவடிக்கைகளில் கையாண்ட முறைகளை தமிழ் இயக்கங்களும் கையாண்டுள்ளனவே! தம்பதிகள் போல நாடகமாடி குண்டுகள் வைத்தவன் அல்லவோ கார்லோஸ். எல்.ரி.ரி.ஈ., ஈரோஸ் இரண்டும் அதே பாணியில் குண்டுவைத்திருப்பதை அறியமுடிந்தது அரசியல் தொடரில்.

செல்வி.ஜெகதா இராமநாதன், நீர்கொழும்பு.

எக்ஸ்ரே ரிப்போர்ட், அரசியல் அலசல் இரண்டும் வெகு அருமை. அரசியல் விமர்சனங்களில் முரசின் கணிப்புக்களும், கருத்துக்களும் காலத்தால் உறுதிசெய்யப்படுவதுதான் முரசின் தனித்துவத்துக்கு காரணம் என்பது என் கருத்து.

செ.தயானந்தன், சுவிற்ஸர்லாந்து.

நீ! நீயா! கதை மன்னனுக்கு எனது கை குலுக்கல். நீ வாரம் தோறும் தரும் தேன் கிண்ணம் என்னை தித்திக்க வைக்கின்றது. தினமுரசே! உன்பணி தொடர்ந்தும் வர என் வாழ்த்துகள்.

எஸ்.ரி.றமேஸ், அக்கரைப்பற்று-06

**மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவுசெய்யப்பட முடிந்தவர்கள்:**

* இப்திகார் இஸ்மாயில், மடவள பசார்.
* மு.மா.மகேஷ், இறக்குவானை.
* ஏ.சி.சித்தி பாஹிமா, பலாங்கொட.
* மனால் முபாரக், ஹோறாப்பொள.
* திருமதி. சந்திராணி தங்கத்துரை, சவளக்கடை.
* எம்.எம்.முகம்மது லாகிர், சாய்ந்தமருது-01.
* எம்.கனகராஜா, மட்டக்களப்பு.
* ஏ.செபஸ்தியன், உக்குவலை.
* ஆர்.கிட்ணன், இறக்குவானை.
* ரூபினி சோமசுந்தரம், கொட்டகலை.
* ஜி.பாலபவானி, வவுனியா.
* சோ.தனலக்ஷ்மி, பண்டாரவளை.
* அக்குறணை ரஸ்மில், ஹாலிஎல.
* கோ.ரகு, குருமன்காடு.
* நபீலா நல்புள்ளா, கிண்ணியா-06.

என் அன்பு முரசே,

நீ தாங்கிவரும் அனைத்து அம்சங்களும் அருமையிலும் அருமை. முக்கியமாக இலக்கிய நயம், சினிவிசிட், தேன்கிண்ணம், எக்ஸ்ரே ரிப்போர்ட் போன்ற அம்சங்கள் சூப்பர்.

எஸ்.ஜீவநாதன், சின்ன செல்வகந்த.

ரசிகனின் மனித வெடிகுண்டும், ராஜேந்திரகுமாரின் நீ! நீயா! மர்மத் தொடரும், இராஜதந்திரியின் 'கலைஞர் தலைமையில் தமிழகத்தில் புதிய ஆட்சி' எனும் அலசலும் விறுவிறுப்பாக இருந்தன.

எம்.ஏ.எம்.மிஸ்வர், தொட்டவத்தை.



படிப்பகம்

www.padippakam.com

# கிழக்கில் பெண் புலிகள் அணியும் களத்தில்!

## வடபகுதி உறுப்பினர்களும் கிழக்குக்கு அனுப்பப்பட்டனர்

**மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகள் இயக்க அணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. சமீபத்தில் வன்னியில் இருந்து மட்டக்களப்புக்கு வந்துள்ள அணிகளில் பெண்புலிகளும் கணிசமான அளவு காணப்படுகின்றனர். மட்டக்களப்பு நகருக்குள்ளும் புலிகளின் ஊடுருவல் நடைபெற்றிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. அதனையடுத்து மட்டக்களப்பு நகரில் 24 மணிநேரமும் சோதனை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.**

### சொந்தப்பகுதிகளில்

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமது உறுப்பினர்களை அவர்களது சொந்தப் பகுதிகளுக்கு திருப்பியனுப்பியுள்ளார் பிரபாகரன்.

இதனால் கடந்த ஐந்து ஆறு வருடங்களுக்கு முன்னர் இயக்கத்தில் சேர்ந்து வீடுகளைவிட்டு வெளியேறிய பல உறுப்பினர்களை மட்டக்களப்பு மாவட்டத்தில் மீண்டும் காணக்கூடியதாக உள்ளது.

வவுணதீவுப் பகுதியில் பெண்புலிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. அவர்களில் பலர் ஐந்து வருடங்களுக்கு முன்னர் இயக்கத்தில் இணைந்தவர்கள். பயிற்சிக்காக யாழ்ப்பாணம் சென்று அங்கேயே நின்றவர்கள். தற்போதுதான் அவர்கள் தமது சொந்தப் பகுதிகளுக்குத் திரும்பியுள்ளனர்.

தமது வீடுகளுக்கு சென்று பெற்றோரையும் சந்தித்துள்ளனர். கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் ஆயுதமேந்திய புலிகள் இயக்க உறுப்பினர்கள் பெரும் தொகையினர் நடமாடுவதை காண முடிகிறது.

முன்னர் கிழக்கு மாகாண உறுப்பினர்கள் வடபகுதியில் நின்று செயற்பட்டது போல, தற்போது வடபகுதியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பலரையும் கிழக்குக்கு அனுப்பியுள்ளது புலிகளின் தலைமைப்பீடம்.

கிழக்கு மாகாணத்தில் புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகள் தீவிரமாவதற்கான அறிகுறிகள் பரவலாகக் காணப்படுகின்றன.

### நிதி கேட்டனர்

இதேவேளை, சமீபத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகள் இயக்கத்தினரால் கொல்லப்பட்ட பிரமுகர் ஒருவர் தொடர்பாகவும் பல்வேறு தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறிப்பிட்ட பிரமுகர் ஆளும் கட்சியில் உள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி சில தொழில்களில் ஈடுபட்டார். அதனை அறிந்த புலிகள் அவரிடம் நிதி கேட்டிருந்தனர். அதனைக் கொடுக்க மறுத்தபோதே அவர் சுட்டுக்கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அதேபோல் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக புலிகளுக்கு தகவல் கிடைத்தது. அதன் காரணமாகவே குறிப்பிட்ட உறுப்பினருக்கு முதல் எச்சரிக்கையாக ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது.

விரைவில் கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களை பதவி விலகுமாறு புலிகள் கோரலாம் என்றும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு-கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அவ்வாறான கோரிக்கை விடப்படலாம் என்றும் மற்றொரு தகவல் தெரிவிக்கிறது.

### வெடிவிபத்து

இதேவேளை, கடந்த மாத இறுதியில் திருமலையில் பெரும் தாக்குதல் ஒன்றுக்கான ஆயத்தங்களில் புலிகள் இயக்கத்தினர் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது பாரிய வெடிவிபத்து ஏற்பட்டது.

வெடிவிபத்தில் சாள்ஸ் அன்ரனி படைப் பிரிவின் முக்கிய உறுப்பினர்கள் பலியானார்கள். கப்டன் நேசன் (சிங்கராசா கெனடி, நீர்வேலி,யாழ்ப்பாணம்), கப்டன் சுதர்சன் (றெயினோல்ட் அன்ரனி, மூதூர்), கப்டன் பூபால் (அன்ரன் சிங்கராசா, பாசையூர், யாழ்ப்பாணம்), லெப்டினன்ட் கோகுலன் (பாக்கியதுரை ஜீவபரன், மூதூர்) ஆகியோரே வெடிவிபத்தில் பலியானோராவர்.

### பட்டியல்

கிழக்கு மாகாணத்தில் உள்ள அரசியல் வாதிகள் சிலரது பெயர்கள் புலிகளின் கொலைப் பட்டியலில் இருப்பதாக நம்பப் படுகிறது.

இதனையடுத்து அவர்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

வடக்கில் செய்தது போல கிழக்கிலும் சிவில் நிர்வாக அதிகாரிகளின் ஊழல்கள், முறைகேடுகள் தொடர்பாக புலிகள் இயக்கத்தினர் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடும் என்றும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

---

# சொக்ஸியின் யோசனை! தமிழ் கட்சிகள் நிராகரிப்பு!

## ஐக்கிய தேசியக் கட்சிக்கும் உடன்பாடில்லை

'சொக்ஸியின் யோசனைகள்' என்ற பெயரில் பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்பாக நீதியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் சமர்ப்பிக்கும் யோசனைகளை தமிழ்கட்சிகள் பரிசீலனை செய்யப்போவதில்லை. இதனை ஐந்து தமிழ் கட்சிகளின் வட்டாரங்கள் முரசிடம் தெரிவித்துள்ளன.

'ஒற்றையாட்சிக்குள் இனப்பிரச்சனைக்கு தீர்வுகாணமுடியாது' என்பதே தமிழ் கட்சிகளின் உறுதியான நிலைப்பாடாகும்.

அரசாங்கம் முன்வைத்த அரசியல் தீர்வு திட்ட யோசனைகள் தொடர்பாகவும் ஐந்து தமிழ் கட்சிகளும் தமது நிலைப்பாட்டை ஒரே குரலில் முன்வைத்துள்ளன.

இந்நிலையில் ஒற்றையாட்சிக்குள் தீர்வைக் காணமுடியுமா இல்லையா? என்று விவாதிப்பது மீண்டும் புறப்பட்ட இடத்திற்கே திரும்பிச் செல்வது போன்ற பயனற்ற முயற்சியாகும் என்று ஐந்து தமிழ் கட்சிகளும் தெரிவித்துள்ளன.

திரு. சொக்ஸியின் யோசனையை ஐக்கிய தேசியக் கட்சியும் ஏற்றுக்கொள்ளவில்லை. தனது யோசனைக்காக சொக்ஸியும் பொறுப்பு எடுக்கத் தயாராக இல்லை.

இந்நிலையில் 'சொக்ஸியின் யோசனை' என்று முன்வைப்பது வெறுமனே காலம் கடத்தும் செயலாகிவிடும் என்று தமிழ் கட்சிகள் தெரிவிக்கின்றன.

ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈரோஸ், புளொட், ரெலோ ஆகிய ஐந்து தமிழ் கட்சிகளுமே 'சொக்ஸியின் யோசனைகள்' என்ற விடயத்தை பரிசீலிப்பதில்லை என்று முடிவு செய்துள்ள கட்சிகளாகும்.

அரசாங்கம் தனது தீர்வு யோசனைகளில் உறுதியாக இருக்குமானால், அதனை செழுமைப் படுத்தவும், அந்த யோசனைகளின் அடிப் படையில் கருத்தொருமிப்பை ஏற்படுத்தவுமே முயலவேண்டும்.

அதற்கு மாறாக தனது யோசனைகளுக்கு நேர்மாறான புதிய யோசனைகளை கொண்டு வருவது தீர்வுக்கு எதிரான சக்திகள் மேலும் மேலும் குழப்பத்தை ஏற்படுத்தவே ஏதுவாக இருக்கும் என்று தமிழ் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் முரசுக்கு தெரிவித்தார்.

"'சொக்ஸியின் யோசனைகள்' பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு வரும்போது அதனையும் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிக்கப்போவதில்லை. அதொன்றும் சொக்ஸியின் யோசனை கிடையாது. பீரிஸின் யோசனைதான்" என்று ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவைப் பெறவே 'சொக்ஸியின் யோசனைகள்' கொண்டு வரப்படுவதாக அரசாங்க தரப்பில் சொல்லப் படுகிறது. ஆனால் ஐ.தே.கட்சி ஒத்துழையாமையை தொடரும் முடிவில் உறுதியாக இருக்கிறது.

---

# வெளிநாடுகளில் ஆயுதக் கொள்வனவு!

## புலிகள் மீது அமெரிக்கா குற்றச்சாட்டு

அமெரிக்க ராஜாங்கத் துறை அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் எல்.ரி.ரி.ஈயின் புதிய நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்டி கடுமையாகச் சாடியிருக்கிறது.

"1995ல் உலகளாவிய பயங்கரவாதம்" என்று இப்பிரசுரத்துக்குப் பெயர் சூட்டப் பட்டுள்ளது. "எல்.ரி.ரி.ஈ மேற்குலக நாடுகளிலிருந்துவரும் உல்லாசப் பயணிகளை இலக்காக வைத்துத் தாக்குவதை நிறுத்தியிருக்கிறது. வெளி நாடுகளில் வசிக்கும் இலங்கைத்தமிழர் எல்.ரி.ரி.ஈயின் நடவடிக்கைகளுக்காக பணம் திரட்டுவதை அந்நாடுகள் தடைசெய்து விடக்கூடும் என்ற அச்சத்தினாலேயே உல்லாசப் பயணிகளை தாக்குவதை இவர்கள் தவிர்த்துள்ளனர்." என்று அவ்வறிக்கை கூறுகிறது.

கொழும்பிலுள்ள மிருகக்காட்சிச் சாலையிலும் மற்றுமொரு பூங்காவிலும் ஜூலை மாதம் எல்.ரி.ரி.ஈயின் மற்றுமோர் அங்கமான 'எல்லாளன் படை' குண்டுகளை வெடிக்க வைத்தது. இவை பொதுவாக வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் கூடுமிடங்களாகும். இருப்பினும் இக்குண்டு வெடிப்பினால் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை. வெளிநாட்டுப் பயணிகளைத் துன்புறுத்துவது அவர்களுடைய நோக்கமல்ல, உல்லாசப் பயணத்துறை மூலமான வருமானத்தைப் பாதிப்படையச் செய்வதே அவர்களுடைய எண்ணமாகும்.

இக்குண்டுத்தாக்குதல்களைத் தொடர்ந்து எல்லாளன்படை ஓர் எச்சரிக்கையை விடுத்தது. இராணுவம் அப்பாவிப் பொது மக்களை மனித கேடயமாகப் பயன்படுத்துவதை உடனடியாக நிறுத்தாவிட்டால் கொழும்பு மாநகரில் பரவலான குண்டுத் தாக்குதல்களை மேற்கொள்ளப் போவதாகவே அந்த எச்சரிக்கை விடப்பட்டிருந்தது.

எல்.ரி.ரி.ஈ.- உலகத் தமிழ் சங்கம், உலகத்தமிழ் இயக்கம், கனடா தமிழர் சங்கங்களின் சம்மேளனம் மற்றும் எல்லாளன் படை ஆகிய பல்வேறு பெயர்களில் தனது நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

எல்.ரி.ரி.ஈயுடன் தொடர்புடைய பல இயக்கங்கள் ஐ.நா.சபை மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்களுடன் தொடர்பு கொண்டு தனித்தமிழ் நாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவு திரட்டுகின்றன. ஆயுதங்களைக் கொள்வனவு செய்யவும், தொடர்பு சாதனங்களைப் பெறவும், குண்டு தயாரிப்பு நிபுணத்துவத்தைப் பெறவும் எல்.ரி.ரி.ஈ தனது தொடர்புகளை விரிவுபடுத்தியுள்ளது என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

---

# வெண்தாமரை இயக்கப் பிரமுகர்

## குண்டுவெடிப்பில் பலியானார்!

ஜூலை 4ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கரும்புலித் தாக்குதலில் வெண்தாமரை இயக்க முக்கியஸ்தர் ஒருவரும் பலியானார்.

வெண்தாமரை இயக்கத்தின் யாழ் மாவட்ட இணைப்பாளரான சுகந்தன் ராஜகுலேந்திரன் என்பவரே பலியானவராவார்.

குண்டுவைப்புக்கள், படுகொலைகள் மூலம் வெண்தாமரை இயக்கத்தின் செயற்பாடுகளை தடுத்து விட முடியாது என்று அமைச்சர் மங்கள சமரவீர கூறியுள்ளார்.

"பொதுஜன முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளில் ஒரு கட்சி மட்டுமே அரசாங்கத்தின் தீர்வு யோசனைகளை எதிர்த்துவருகிறது. பெரும்பான்மையான கட்சிகளின் கருத்தை அக்கட்சியும் ஏற்றுக் கொள்ளவேண்டும். இல்லையானால் அக்கட்சி பொது ஜன முன்னணியைவிட்டு விலக வேண்டும்" என்றும் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

திருமதி சிறிமானி அத்துலத்முதலி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தொடர்பாகவே அவர் அவ்வாறு காட்டமாகக் குறிப்பிட்டுள்ளார்.

---

# புலிப்பீதி கிளப்பும் எம்.பி

யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்படும் இளைஞர்களும், யுவதிகளும் தென்பகுதிக்குக் கொண்டு வரப்படுகின்றனர்.

அவ்வாறு கொண்டுவரப்பட்ட இளைஞர்களில் 32 பேர் மாத்தறை மாவட்டம் திசமாறகமவில், வீரவில என்ற இடத்தில் உள்ள புனர்வாழ்வு முகாமில் வைக்கப் பட்டுள்ளனர்.

அந்த முகாமில் இருப்பவர்கள் அனைவரும் புலிகள் என்றும், அதனால் வீரவில பகுதியில் உள்ளோருக்கு ஆபத்து ஏற்படலாம் என்றும் சிலர் பீதி கிளப்பியுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சி எம்.பியான நெவில் பெர்ணாண்டோ தனது ஆதரவாளர்களை திரட்டிக்கொண்டு சென்று மேற்படி முகாமை அகற்றுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

---

# அரசாங்கம் மீது குற்றச்சாட்டு

## அரசாங்க எம்.பி.யே சுமத்துகிறார்

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவினைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் உரிய நேரத்தில் உரிய நடவடிக்கையினை எடுக்கத் தவறிவிட்டது என்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் பிரிவு) குற்றம் சாட்டியுள்ளது. இக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான ரவி கருணநாயக்க இக்குற்றச்சாட்டைச் சுமத்தினார். "இப்பொழுது வாழ்க்கைச் செலவைக் கட்டுப் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இது காலம் கடந்த நடவடிக்கையாகும்" என்றார் அவர்.

"அரசாங்கம் கஷ்டமான காலங்களில் விநியோகிப்பதற்காக பொருட்களைச் சேமித்து வைப்பது வழக்கம். இவ்வாறு சேமிக்கப்படும் பொருட்கள் உரிய தருணத்தில்- மக்களின் தேவையை அனுசரித்து விநியோகிக் கப்பட வேண்டும். இவ்வாறு -பொறுப் புணர்ச்சியுடன் அரசாங்கம் நடந்து கொள்ளத் தவறியமையினால் மக்கள் பெரும் துன்பங்களைச் சுமக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள் தள்ளப்பட்டனர்.

எதிர்பாராத சூழ்நிலைகளில் பாவனைப் பொருட்களின் விலை அதிகரிப்பது தவிர்க்க முடியாததுதான். இருப்பினும் நிலமைகளை முன்கூட்டியே அனுமானித்து மக்களுடைய சுமையைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்." என்று அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை சிறிமானி அத்துலத்முதலி பொறுப்பின் கீழ் உள்ள போக்குவரத்து அமைச்சுத்தான் பஸ் கட்டண உயர்வை சிபாரிசு செய்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

# "கரும்புலிகள் வெல்லப்பட முடியாதவர்கள்"

## வன்னிக் கூட்டத்தில் சந்திரிக்கா பேச்சு

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் கரும்புலிகள் தினம் கடந்த ஐந்தாம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது.

வன்னிப்பகுதியெங்கும் கரும்புலிகள் தினம் கடந்த காலங்களைவிட பெரியளவில் இம்முறை அனுஷ்டிக்கப்பட்டது.

கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் கரும்புலிகள் தினக் கூட்டம் நடைபெற்றது.

விடுதலைப் புலிகள் மகளிர் படையணித் தளபதிகளில் ஒருவரான சந்திரிக்கா கூட்டத்தில் உரையாற்றினார்.

"எமது விடுதலைப்போராட்டம் பின்னடைவுகளைச் சந்திக்கும்போது அதனை முன்னோக்கி நகர்த்தியவர்கள் கரும்புலிகள்தான். கரும்புலிகள் வெல்லப்பட முடியாதவர்கள். சிறீலங்கா அரசு தமிழ் மக்களையும், புலிகளையும் பிரிக்கும் நோக்கத்துடன் செயற்படுகிறது. அதன் மூலம் விடுதலைப் போராட்டத்தை தடுக்கப் பார்க்கிறது. இதனை புலிகள் முறியடிப்பார்கள்" என்று அவர் தனது உரையில் தெரிவித்தார்.

வன்னியில் உள்ள பாடசாலைகளிலும் கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு புலிக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன.

வன்னியில் நடைபெற்ற நினைவுதினக் கூட்டங்களில் புலிகள் இயக்க முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டபோதும், புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் காணப்படவில்லை.

---

# வடக்கில் புனரமைப்பு நடவடிக்கை!

## உதவி வழங்கும் நாடுகள் நிபந்தனை!

தொடர்ந்து பல வருடங்களாக யுத்தத்தினால் சின்னா பின்னப்பட்டுக் கிடக்கும் வட பிராந்தியத்தில் புனர் நிர்மாணப்பணிகளுக்காக போடப்பட்ட திட்டங்களை நன்கு பரிசீலனை செய்வதுடன், அப்பணிகள் நிறைவேற்றப்படவிருக்கும் இடங்களை நேரடியாகப் பார்த்த பின்னரே அப்பணிகளுக்கான பணத்தை வழங்குவது பற்றி முடிவெடுக்கவிருப்பதாக பல உதவி வழங்கும் நாடுகள் நிபந்தனை விதித்துள்ளன.

வட பிராந்தியத்துக்கான புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகளுக்கான அதிகார சபையின் தலைவர் சோமபால குணதீர இத்தகவலை வெளியிட்டுள்ளார். இருப்பினும் வேறு சில நாடுகள் நிபந்தனைகள் எதுவுமின்றி உதவ முன் வந்திருப்பதாகவும் அவர் கூறினார்.

தாங்கள் எவ்வளவு தொகையினை உதவியாக வழங்கவிருக்கின்றனர் என்பதனை உதவி வழங்கும் நாடுகள் எவையும் குறிப்பிடவில்லை. இருப்பினும் அந்நாடுகள் உலக வங்கியினூடாகவே தங்கள் உதவிகளை வழங்கும் என்று மேற்கத்தைய இராஜதந்திரி ஒருவர் கூறினார். ஆனால் கொழும்பிலுள்ள உலக வங்கிப் பிரதிநிதியிடம் வினவிய போது, இதுவரை இது தொடர்பாக எந்த ஒரு நாடும் தங்களுடன் தொடர்புகொள்ளவில்லை என்றார்.

---

# மட்டக்களப்பில் கரும்புலிகள் தினம்

(ஏறாவூர் நிருபர்)

கடந்த 05.07.96 அன்று புலிகள் மட்டக்களப்பில் தமது கட்டுப்பாட்டிலுள்ள வாகரை, படுவான்கரை, பதுளை வீதி போன்ற பகுதிகளில் தோரணங்களையும், பதாகைகளையும் கட்டிச் சோடனை செய்து கரும்புலித் தினத்தை அனுஷ்டித்தனர். அதேவேளை படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலும் கூட கரும்புலிகள் தினத்தை அனுஷ்டிக்க முயற்சி மேற்கொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு-கொழும்பு பிரதான வீதி வந்தாறுமூலையில் தோரணங்களும் பதாகைகளும் கட்டப்பட்டிருந்தன. அன்றுகாலை வீதிப் பாதுகாப்பிற்கு வந்த படையினர் அவற்றை அகற்றிச் [illegible]னர். கரும்புலித் தினத்தையிட்டு புலிகள் மட்டக்களப்பில் ஏதாவது நடவடிக்கைகளை முடுக்கி விடலாம் என்பதனால் அன்றையதினம் மக்கள் பதற்றத்துடன் காணப்பட்டனர். சில பகுதிகளில் சன நடமாட்டம் வெகுவாகக் குறைந்திருந்தது.

இதனிடையே திருக்கோணமலை-மூதூர்ப் பகுதியிலுள்ள கல்லாற்றில் சமீபத்தில் இடம் பெற்ற தாக்குதலில் தமது தரப்பில் பலியானவர்களினதும் தாம் கைப்பற்றிய ஆயுதங்களினதும் விவரங்களைப் புலிகள் வாகரையில் வெளியிட்டுள்ளனர். இத் தாக்குதல் சொர்ணம் தலைமையில் நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

---

# ஒரே கல்லில் இரு மாங்காய்!

## நிதியும் நீர்ப்பாசனமும்!

(ஏறாவூர் நிருபர்)

கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக நீர்ப்பாசன இலாகாவினால் துப்புரவு செய்யப்படாது தூர்ந்து போன வாய்க்கால்கள் புலிகளின் வேண்டுகோளுக்கிணங்க அப்பகுதி விவசாயிகளால் சிரமதானஞ் செய்யப் பட்டது.

மட்டக்களப்பு-உறுகாமம் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழுள்ள சில வாய்க்கால்களைக் கட்டாயச் சிரமதானஞ் செய்வதற்கு அப்பகுதியில் 5 ஏக்கருக்கு மேல் செய்கைக் காணி வைத்திருப்போரை புலிகள் அழைத்திருந்ததாகவும், அதன் பேரில் தாம் சிரமதானஞ் செய்து வாய்க்கால்களைத் துப்புரவாக்கியதாகவும் அப்பகுதிக் கமக்காரர்கள் தெரிவிக்கிறார்கள்.

புலிகள் வாய்க்கால் துப்புரவாக்கிய செலவை நீர்ப்பாசன இலாகாவிலிருந்து, ஒரு சதம் கூடக் குறையாமல் பெற்றுக் கொண்டதாகவும் கமக்காரர்கள் தெரிவித்தார்கள்.

சிரமதானஞ் செய்யப்பட்ட குறித்த சில வாய்க்கால்களின் பாசனத்திட்டத்தின் கீழ் புலிகள் செய்கை பண்ணும் ஏராளமான நெற் காணிகள் உண்டு. அவர்கள் கட்டாயப் படுத்தித் தம்மைக் கொண்டு சிரமதானஞ் செய்வித்ததற்கு புலிகளது நெற்காணிக்கு போதிய நீர்ப்பாசனம் கிடைக்க வேண்டுமென்பதும் ஒரு காரணமென்று விவசாயிகள் தெரிவிக்கிறார்கள். சிரமதானத்தின் மூலம் புலிகளுக்கு நிதியும் கிடைத்தது; நீர்ப்பாசனமும் கிடைத்தது என்று சிரமதானஞ் செய்த கமக்காரர்கள் கூறுகிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# ஏறாவூரில் இலங்கை வங்கி அமையும்!

(ஏறாவூர் நிருபர்)

ஏறாவூர்ப் பகுதி மக்களின் கொடுக்கல் வாங்கல்களுக்காகவும், மற்றும் வர்த்தகத் தொடர்புகளுக்காகவும் ஏறாவூரில் இலங்கை வங்கியின் விரிவாக்கல் அலுவலகமொன்று விரைவில் திறக்கப்படவிருக்கிறது.

"இவ்வங்கியின் விரிவாக்கல் அலுவலகத்தை திறப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் அனைத்தும் முடிவடைந்துள்ளன. பணப்பாதுகாப்புப் பெட்டியை கொழும்பிலிருந்து தருவிக்க வேண்டியுள்ளது. அது வரும் வரைக்கும் காத்திருக்கிறோம். அதுவரை இவ்வங்கி அலுவலகத்தில் கடமையாற்றப் போகும் ஊழியர்களை ஏறாவூர்ப் பகுதி மக்களின் வீடுகளுக்குச் சென்று இலங்கை வங்கியின் நன்மைகளை எடுத்துக்கூறி கணக்குகளை ஆரம்பிக்க உதவுமாறு கேட்டிருக்கிறோம்.

ஏறாவூர் மக்களுக்கு இலங்கை வங்கி ஒன்றில்லாதிருந்த நீண்ட காலக்குறை நிவர்த்தி செய்யப்படப் போவதையிட்டும், நாம் எமது அரிய சேவைகளை அம்மக்களுக்கு வழங்கப் போவதையிட்டும் மகிழ்ச்சியடைகிறோம்." என்று மட்டக்களப்புப் பிராந்திய தலைமை இலங்கை வங்கி முகாமையாளர் திரு. ஸ்ரீபத்மநாதன் தினமுரசுக்குத் தெரிவித்தார். இலங்கை வங்கியின் கிழக்குப் பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் ஜனாப் து.மு முஹமட் ஜலீல் ஏறாவூரில் தமது வங்கியின் விரிவாக்கல் அலுவலகம் அமைவதற்கு பெரு முயற்சி மேற்கொண்டிருந்தார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பும் ஏராளமான பணிப்பெண்களும் பெருந்தொகையான வர்த்தகர்களும், மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், விவசாயிகள், வியாபாரிகள், மீனவர்கள் எனப் பல்வேறு தரத்தினர் இவ்வங்கி இங்கு அமைவதால் நன்மை பெறுவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதுவரை காலமும் ஏறாவூர் மக்கள் இலங்கை வங்கி அலுவல்களை செங்கலடியிலுள்ள வங்கிக் கிளையிலேயே முடித்து வந்தனர்.

# மின்சாரத் தடையும் கள்வர் கூட்டமும்

(அக்குறணை நிருபர்)

மின்வெட்டு அமுலாகியிருக்கும் நேரங்களில் கள்வர் கூட்டமும் தனது கை வரிசையைக் காட்டத் தொடங்கியுள்ளது பரவலான செய்தி. அக்குறணை தெல்கஸ்தென்ன பகுதியில் விஷேட தொழில் நுட்ப துப்பாக்கி, கைக்குண்டுகள் சகிதம் வந்த மூவர் தனவந்தர் வீடொன்றில் புகுந்து அங்கிருந்தவர்களை அச்சமூட்டி சுமார் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாய் பெறுமதியான பணம், தங்க நகைகள் என்பவற்றை கொள்ளையடித்துச் செல்வதற்கு முயல்கையில் துப்பாக்கியோடு கொள்ளையரில் ஒருவரை கிராமவாசிகள் மடக்கி பிடித்தனர். பணத்தையும் நகைகளையும் தப்பியோடிய இருவரும் கொண்டுசென்றுள்ளனர். பிடிபட்ட முஸ்லிம் நபர் பொல நறுவை வாசியாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. விசாரணைகளை விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவு மேற்கொண்டு வருகிறது.

மேலும் கண்டி மணிக்கூட்டுக் கோபுர மாத்தளை பஸ் தரிப்பிடத்திலும் 'இருள் கள்வர்' தமது கைத்திறனைக் காட்டி வருகின்றனர். ப்ரீப் கேஸுகள், பணப்பைகளுடன் நிற்கும் பிரயாணிகளைக் கவனித்து அவர்களுக்கு அண்மையில் கண்வைத்தபடி இருந்து குறிப்பிட்ட நேர மின்சார வெட்டு வரும் போது நகரமே இருளில் மூழ்கியவுடன் பணப்பைகளையும் ப்ரீப் கேஸுக்களையும் அபகரித்துக் கொண்டு ஓடிவிடுகின்றனர். முழு இருள் மயத்தில் கள்வரைப்பிடிக்க முடியாமல் பறிகொடுத்த பிரயாணிகள் தமது உடமைகளையும் முக்கிய தஸ்தாவேஜுக்களையும் இழந்து தவிக்கின்றனர்.

மழை தாராளமாக நீரேந்து பகுதிகளில் பெய்தாலும் அரசாங்கம் இறக்குமதி செய்த ஜெனரேட்டர்கள் விற்று முடியும் வரை இப்படியான குறித்த நேர மின் வெட்டும் மக்கள் அவஸ்த்தைகளும் தொடரும் என முரசின் வாசகர் ஒருவர் தெரிவித்ததிலும் உண்மையில்லாமலில்லை.

# 250 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு

(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரியின் அபிவிருத்திக்காக மட்டு. எம்.பியும், பிரதி தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சருமான அல்ஹாஜ் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வின் வேண்டுகோளின் பேரில் சுகாதார, நெடுஞ்சாலைகள், பெருந்தெருக்கள் அமைச்சு 250 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளதென பிரதி, தபால் தொலைத்தொடர்பு அமைச்சு அலுவலகம் தெரிவிக்கிறது.

இந்த நிதியிலிருந்து இவ்வாண்டு வைத்திய சாலையில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படும். அண்மையில் வைத்திய சாலைக்கு திடீர் விஜயம் மேற்கொண்ட பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் வைத்திய சாலையின் தேவைகளை நேரில் பார்வையிட்ட பின்னரே இந்நிதி ஒதுக்கீடு இடம்பெற்றுள்ளது.

நாளாந்தம் ஆயிரக்கணக்கான நோயாளர்கள் சிகிச்சைக்காய்வரும் இவ்வைத்தியசாலையில் பல தேவைகளிருப்பதை பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் அமைச்சர் ஏ.எச்.எம் பௌசியிடம் எடுத்துக் கூறியிருந்தார் என்பது குறிப்படத்தக்கது.

# தீர்வுத்திட்டத்தில் முஸ்லிம்கள் கொழும்பில் மாநாடு

(நிந்தவூர் நிருபர்)

முஸ்லிம் கல்வி, சமூக ஆய்வுகள் நிறுவனம், இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வுத்திட்டத்தில் முஸ்லிம்களின் நிலைப்பாடு குறித்த மாநாடொன்றை கொழும்பில் நடத்தவிருக்கின்றது.

எதிர்வரும் ஆகஸ்ட்மாதம் நடைபெறவிருக்கும் இந்த மாநாட்டில் அரசியல் தலைவர்கள், மதத்தலைவர்கள், கல்விமான்கள், பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர்கள் முதலானோர் கலந்து கொள்ளவுள்ளதாக அமைப்பின் தலைவர் ஜனாப். எச்.எம்.ஹரீஸ் (சட்டபீடம், கொழும்பு பல்கலைக்கலகம்) தெரிவித்தார்.

இதேவேளை மேற்படி முஸ்லிம் கல்வி, சமூக ஆய்வுகள் நிறுவனம் அம்பாறை மாவட்டத்திலுள்ள பாடசாலைகளின் மாணவத்தலைவர்கள், 'மெஸ்றோ' கிளைகளின் உறுப்பினர்களுக்கான தலைமைத்துவப்பயிற்சிப் பாசறை ஒன்றையும் இம்மாதம் (ஜூலை) நடத்தவிருக்கின்றது.

# மின்வெட்டில் ஏன் விதி மீறல்?

(நிந்தவூர் நிருபர்)

நாடெங்கும் ஐந்தரைமணிநேர மின்வெட்டு அமுல் நடத்தப்பட்டு வருகின்ற போதிலும் நிந்தவூர்ப் பகுதியில் அதை விடவும் கூடுதலாகப் பலமணிநேர மின்தடை இருந்து வருகின்றது.

கடந்த சில வாரகாலமாக நிந்தவூர்ப் பகுதியில் நீடித்துவரும் மின்சாரச் சீர்கேடு காரணமாக மின்பாவனையாளர்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

கல்முனை மின் பொறியியலாளர் பிரிவுக்குட்படும் நிந்தவூர்ப் பகுதியில்- குறிப்பாக இரவு வேளைகளிலேயே மின்சாரச்சீர்கேடு படுமோசமான நிலையில் இருந்துவருகின்றது.

பெரும்பாலான நாட்களில் இரவு வேளைகளில் ஏற்படும் மின் தடையும், குறைந்த மின்னோட்ட அவலமும் இரவு முழுவதும் நீடிப்பதால் மின் பாவனையாளர்கள் குப்பிவிளக்குகளையும், மெழுகுதிரி வெளிச்சங்களையுமே நாடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நிந்தவூர்ப்பகுதியில் நீடித்து வரும் மின்சாரச்சீர்கேட்டை உடனடியாக நீக்குவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டுமென மின் பாவனையாளர்கள் கோருகின்றனர்.

கண்கள் திறக்குமா? சீரான மின் ஒளி கிடைக்குமா?

# ஊவா மாகாணத்தில் கருத்தரங்கு

ஊவா மாகாணத்திலுள்ள தமிழ் மொழிமூல பாடசாலைகளில் இருந்தும், தனிப்பட்ட முறையிலும் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு கலை, வர்த்தகப் பிரிவுகளுக்கு தோற்றவுள்ள மாணவர்களின் நன்மை கருதி ஜூன் மாதம் 15ம் திகதி முதல் ஜூலை 30ம் திகதி வரை யுள்ள சனி, ஞாயிறு கிழமைகளில் பொருளியல், புவியியல், தமிழ், அரசியல் விஞ்ஞானம், கணக்கியல், வர்த்தகம், இந்து நாகரிகம், ஆகிய பாடங்களுக்கான இலவச கருத்தரங்குகள் பதினாறு (16)யினை பதுளை இன்டர் நெஷனல் ஸ்ரீலங்கா நிறுவனத்துடன் இணைந்து நடாத்த சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக மலையக ஆசிரியர் பேரவையின் பொதுச்செயலாளரும் ஆசிரியருமான திரு.எஸ்.ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி மேலும் தெரிவிக்கையில், ஊவா மாகாணத்தில் உள்ள க.பொ.த. (உ/த) கலை, வர்த்தக பிரிவுகள் உள்ள தமிழ் மொழிமூல பாடசாலைகளில் போதுமான ஆசிரியர்கள் இல்லாமையும், பெருந்தோட்ட மாணவர்களின் பொருளாதார வசதியின்மை காரணமாகவும் சிறந்த பெறுபேறுகளை பெறமுடியாமல் உள்ளது. அத்தோடு தற்போதைய அரசாங்க தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்புகளை பெறவேண்டுமாயின் க.பொ.த.(உ/த) பெறுபேறுகளே அடிப்படை தகுதியாக கணக்கிடப் படுகிறது.

எனவேதான் பெருந்தோட்ட பிள்ளைகள் சிறந்த பெறுபேறுகளைப் பெறவேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் இக்கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், குறிப்பிட்ட பாடங்களுக்கான கையேடுகளும் இலவசமாக கொடுக்கப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

பதுளை தமிழ் மகளிர் மகாவித்தியாலயத்தில் இக்கருத்தரங்குகள் நடைபெறுகின்றன.

# ஆவெலியாவில் அழகிய கோயில்

ஆவெலியா- நுவரெலியாவில் உள்ள ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய திருப்பணி வேலைகளின் முதற்கட்டம் பூர்த்தியாகியுள்ளது.

9.7.93 இல் அமைச்சர் தொண்டமானால் அடிக்கல் நாட்டப்பட்டு திருப்பணி வேலைகள் ஆரம்பமாகின. மூன்று வருடத்திற்குள் முதல் கட்ட திருப்பணி வேலைகள் நிறைவுற்றுள்ளன. மகா வசந்த மண்டபம், ராஜகோபுர வியான மண்டபம், பரிவார மூர்த்திகளின் கோவில்கள், முருகன் கோவில் ஆகியன கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

திராவிட சிற்ப மரபுக்கேற்ப கலையழகு மிளிரும் வண்ணம் சிற்ப கலாநிதி அராலியூர் மார்க்கண்டு பன்னீர் செல்வம் தலைமையிலான கட்டிடக்கலைஞர்கள் முதல்கட்ட வேலைகளை நிறைவாக்கியுள்ளனர்.

இரண்டாம், மூன்றாம் கட்ட வேலைகளான பஞ்சதல ராஜகோபுரமும், கலாசார மண்டபமும் கட்டும் வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன.

ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர் வரும் 1.9.96 அன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

சுவாமி விஸ்வநாதக் குருக்களின் ஆசியுடன், அடியார்களின் பொருள் உதவியால் ஆவெலியாவில் அழகிய கோயிலாக உருவெடுத்துள்ளது ஸ்ரீமுத்து மாரியம்மன் கோயில்.

# புகார் பெட்டி

## பெற்றோர்கள் கவலை

மட்டக்களப்பில் தாண்டவன் வெளி பெண்கள் பாடசாலையில் கல்வி பயிலும் பெரும்பாலான ஆண்டு 1 மாணவிகளுக்கு கழுத்துப் பட்டி (டை) இன்னும் வழங்கவில்லையாம். கடந்த தை மாதம் பிள்ளைகளைச் சேர்க்கும் போது தலைமை ஆசிரியர், ஒவ்வொரு பிள்ளைக்கும், பெற்றோரிடம் டை தைப்பதற்கு ரூ15/- பெற்றுக் கொள்ளப்பட்டது. மாதங்கள் 6 சென்றுவிட்டன இன்னும் டை கொடுக்கப்படவில்லை, மே மாதத்தில் நடைபெற்ற பெற்றோர், ஆசிரியர் கூட்டத்திலும், இது விடயமாக, பிரச்சனை எழுப்பப்பட்டது. ஒரு வாரத்தில் தைத்து கொடுப்பதாக தலைமை ஆசிரியை வாக்குறுதி கொடுத்தாராம் அதுவும் நடைபெறவில்லை. இதை யார் கவனிப்பது?


## ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 175/=,95/=
தங்க பஸ்பம் கலந்தது 975/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 890/=

ஞான சுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு, கொழும்பு 11,
போன்: 421398

## தேவை

தலைநகரில் பிரபலமான நிறுவன மொன்றிற்கு எழுதுவினைஞர்கள் தேவைப்படுகின்றார்கள். கணக்கியல் துறையில் நல்லறிவும், ஆங்கில மொழியாற்றலும் உள்ளவர்கள் விரும்பப்படுவர்.

விண்ணப்பதாரர்கள் தங்களது தகைமை மற்றும் நற்சான்றிதழ்களுடன் விண்ணப் பிக்கவும். இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

C-AD. 101
C/O. THINAMURASU
P.O.BOX-1772 COLOMBO.

சி-ஏடி 101
C/o பா. தினமுரசு
த.பெ.இல. 1772 கொழும்பு.

## மின்சார வேக மலையாள மாந்திரீக சக்தி



ஆத்மாக்களின் எண்ணங்கள் எண்ணியபடி நிறைவேறினால் மாத்திரமே ஆத்ம திருப்தி அடைகிறார்கள். கேட்டவருக்கு கேட்டவரம் தரும் ஸ்ரீ துர்கா தேவியின் அற்புத அருள் கொண்ட உலக மாந்திரீக சக்கரவர்த்தி திரு.பி.கே.சாமி அவர்களை அணுகினால் கோரிக்கை கொடுக்கும் அன்பர்களுக்கு இத்தனையாம் திகதி இத்தனை மணிக்கு தங்கள் வேலை பூர்த்தியென சான்றிதழ் வழங்கப்படும். அரசாங்கத்தினால் பதிவு செய்யப்பட்டதும் வரையறுக்கப்பட்ட தனியார் லிமிட்டட் கம்பனி இது ஒன்றேயாகும். எத்தனை யெத்தனையோ வெளிநாட்டவருக்கும் உள்நாட்டவருக்கும் எம்மால் வெற்றிபெற்ற சான்றிதழ்கள் ஆயிரக்கணக்கில் உண்டு. சான்றிதழ்களை நேரில் பார்வையிடலாம். எம்மாதமும் 20 முதல் மாதக் கடைசிவரை கொழும்பு ஸ்ரீதுர்கை தேவஸ்தானத்திலும் இதர நாட்களில் நுவரெலியா ஸ்ரீ துர்கை தேவஸ்தானத்திலும் திரு. சாமி அவர்களை சந்திக்கலாம். உள்நாட்டவர் நேரில் சந்திக்க ஆரம்ப அனுமதி கட்டணம். ரூ.250. வெளிநாட்டவர்கள் பிரச்சினைகளை கூறி பிறந்த திகதி மாதம் வருடம் இவைகளை குறிப்பிட்டு அனுப்பி ஆரம்ப கட்டணமாக ரூ.1000 அனுப்பினால் அவர்கள் வேலைக்குரிய கட்டணமும் எண்ணங்கள் பூர்த்தியாகும் திகதியும் கொண்ட கார்டும் அனுப்பப்படும்.

Dr.பி.கே.சாமி (J.D.G.A.N)JP
பி.கே.சாமி அஸோஸியேட் பிரைவட் லிமிட்டட்
இல.162, மே பீல்ட் ரோட், கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13

கொழும்பு தொலை பேசி இல - 01342463-342464-344831-344832
-FAX-00941342464
நுவரெலியா தொலைபேசி இல - 052-2508-3093-3570-3336
-FAX-0094523093

## "மந்திரயோகி" மாந்திரீக மருத்துவம்



காதல், திருமணம், கல்வி, தொழில், வெளிநாட்டுப்பிரயாணம் வேறு காரியங்களிலும் தடைகளும், காதலர்கள் ஒன்றுசேரமுடியாமை, கணவன்-மனைவி குடும்பப் பிரச்சினைகள், வேண்டியவர்கள் வெறுத்தல், பிரிந்து செல்லல், தீயசக்திகளின் தொல்லைகள் தீவினைகளினால் தீராத உடல்-மனநோய்களும் ஏற்படலாம் இவைகளுக்கு இறைவன் அருளி, முனிவர்கள் கையாண்ட, மர்மமான மருந்து, மந்திர ஐந்திர வசிய தாயத்துக்களினால் நிவாரணம் பெற்று இன்பமாக வாழ ஆண்-பெண் ஜனராஜ வசியங்கள், பாதுகாப்பு ரட்சைகள், வேறு நன்மையான காரியங்களுக்கு, வேண்டிய மந்திரம் வசியங்கள் செய்துகொள்ள அரசாங்கத்தினால் பதிவுசெய்யப்பட்ட மலையாளம் புகழ் மஹாசக்தி உபாசகர் மந்திரயோகியிடம் வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் சம்பந்தப்பட்டவர்களினதும், தாய் அல்லது தந்தையர்களினதும் பெயர்களுடன் தங்கள் கோரிக்கைகளை எழுதி 10 ரூபா 50 சத முத்திரைகள், 2 பதிவுத்தபாலில் வைத்து அனுப்பி தெய்வீகமருந்துவ ஆலோசனைகளை பதிவுத்தபாலிலும் இறை பரிகாரப்பொருட்களை (வி.பி.பி) பார்சல்களிலும் பெற்று விருப்பங்களை உடன் நிறைவேற்றலாம். YOGI.DR.SACKTHYANANTHEBABA என்ற பெயருக்கு விரும்பிய குருதட்சணை (மணியோடர்) அனுப்புபவர்களின் விடயங்கள் உடன் கவனிக்கப்படும். விலாசம்:-



YOGI.DR.SACKTHYANANTHEBABA
INDIAN CLINIC, GURUSACKTHY CENTRE
KALLADY-BATTICALOA (P.O)
குருசக்தி நிலையம், கல்லடி-மட்டக்களப்பு.

## விளம்பரப் பகுதி

## மெய்ஞான ஜோதிட சிந்தாமணி

மாதந்தோறும் வெளிவரும் திரு.பி.கே. சாமி அவர்களின் வெளியீடான மெய்ஞான ஜோதிட சிந்தாமணியை பெற முடியாதவர்கள் வருடசந்தா ரூ.240 அனுப்பினால் உங்கள் கை வசம் கிடைக்கப்பெறும். மெய்ஞான ஜோதிட சிந்தாமணி தொடர்பாக விற்பனை பிரதிநிதிகள் உடன் தேவைப்படுகின்றனர். தேவைகளுக்கு:

ஆசிரியர்
இல.162, கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு-13.

## என்றும் சந்திக்கலாம்

எங்களது வாடிக்கையாளர்களின் வீண் சிரமத்தையும் அலைச்சலையும் கருத்தில் கொண்டு திரு.P.K.சாமி அவர்களிடம் நுவரெலியாவிலும் கொழும்பிலும் வரும் வாடிக்கையாளர்கள் நேரடியாக அவரவர் பிரச்சனைகளைக் கூறி தீர்வுக்கான புதுமுறையாக செட்லைட் நெட்வேர்க், T.V. மூலம் திரு.P.K. சாமியுடம் கலந்துரையாடலாம்.

## மாதம் இரு முறை

# பூங்கா



சிறுவர் பத்திரிகை
105-D, 1st Floor, Olcott Mawatha, Colombo 11.
Tel : 440507, 430132 Fax : 423530, 437615

## BRIGHT ன் தபால் மூலம் கல்வித்திட்டம்

மூன்றே மாதங்களில் ஆங்கிலம்/சிங்களம் பேச, எழுத, வாசிக்க கற்றுத்தரப்படும் விபரங்களுக்கு கீழ்காணும் விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க

பெயர்:.................................
விலாசம்:.................................

BRIGHT TRAINING CENTRE
S-27, FIRST FLOOR, P.O. BOX. 162.
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX
COLOMBO 11. TEL: 434770

## காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

ரிஷி. S. மணி

மூலம் அறிய வாருங்கள்
சந்திரன்
144 2/1, காலி வீதி
வெள்ளவத்தை
கொழும்பு 6
T.P : 586218, 078-63611
Fax : 503030

## ஆயுள் கண்ணாடி ஜாதகம்

உங்கள் ஜாதக அமைப்பின்படி எம் வீட்டில் எந்த கிரகம் நிலை பெற்றுள்ளது. அதன் முன் விளைவு பின் விளைவு எப்படி அமையும்? கணவர் மனைவி எப்படி அமைய வாய்புள்ளது? அத்துடன் மாத வாரி பலனுடன் நீங்கள் எழுதி எடுக்க இந்த பாரத்தை பூர்த்தி செய்து ரூ.1500 மணி ஆடர் செய்தால். பிற ஜோதிடர் உதவியின்றி நீங்கள் உங்கள் வீட்டில் இருந்தபடியே ஜாதகத்தை கண்ணாடி போல் தெரிந்து கொள்ளலாம்.

வெளிநாட்டவர்கள் ரூ.2750 அனுப்பவும்

முழுப்பெயர் -
பிறந்ததிகதி -
நேரம்.................. காலை-மாலை.............
பிறந்த மாவட்டம்.....................
ஆணா பெண்ணா..........................
தமிழ், ஆங்கிலம், மலையாளம், சமஸ்கிருதம், தெலுங்கு, ஹிந்தி, அரபு எந்த மொழியில் தேவை.......................

முகவரி: ஜோதிட மாந்திரிக சக்கரவர்த்தி
டாக்டர் பி.கே. சாமி [J.D.G.A.N.]J.P.
பி.கே. சாமி அஸோஸியட் பிரைவேட் லிமிடட்
இல. 162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13
கொழும்பு தொலை பேசி இல. 01-342463-342464-344831-344832
நுவரெலியா தொலை பேசி இல-052-2508-3093-3336-3570




படிப்பகம்

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

# வடக்கில் அடி



# கிழக்கில் பிடி

**நாரதர்**

**ஜூ**லை 5-கரும்புலிகள் தினம். 1987ல் ஜூலை 5ம் திகதி வடமராட்சியில் இருந்து ஆரம்பமான 'ஒப்பரேசன் லிபரேசன்' நடவடிக்கைக்கு எதிராக புலிகளது முதலாவது கரும்புலித் தாக்குதல் நடை பெற்றது.

கரும்புலி மில்லர் சக்கை லொறியுடன் சென்று நெல்லியடி மகாவித்தியாலயத்தில் நிலைகொண்டிருந்த படை முகாமுடன் மோதினார்.

மில்லர் பலியான தினம்தான் கரும்புலிகள் தினமாக புலிகள் அமைப்பினரால் நினைவுகூரப்படுகிறது.

வழக்கமாக கரும்புலிகள் தினம் தொடர்பாக புலிகள் முன்கூட்டியே வடக்கில் அறிவிக்கத் தொடங்கிவிடுவார்கள்.

ஒருவாரத்திற்கு முன்பாகவே புலிகளின் வானொலியில் கரும்புலிகள் தினம் தொடர்பாக நினைவூட்டப்பட்டுவிடும்.

இந்தமுறைமட்டும் ஜூலை 4ம் திகதி வரை புலிகளின் குரல் வானொலி, கரும்புலிகள் தினம் தொடர்பாக மூச்சுவிடவில்லை.

கரும்புலிகள் தினத்தை பெரிதாக கொண்டாடப்போவதாக அறிவித்தால் படையினரும் விழிப்பாக இருப்பார்கள் என்று கருதித்தான் வடக்கில் பரபரப்பு காட்டவில்லை.

புலிகளின் பிரதான நினைவுதினங்கள், தாக்குதல் நடத்த புலிகளுக்கு ராசியான நாட்கள் என்று கருதப்படும் திகதிகளில் படைத்தரப்பு உஷாராக இருப்பது முன்னைய வழக்கம்.

இம்முறை படைத்தரப்பினரும் கரும்புலிகள் தினத்தின் வருகையை வடக்கில் ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை.

அல்லது, புலிகள் யாழ்ப்பாணத்திற்குள் உடனடியாக பாரிய கரும்புலித் தாக்குதலில் அல்லது வேறு தாக்குதல்களில் ஈடுபடக்கூடிய சூழ்நிலை இல்லை என்று படைத்தரப்பினர் அலட்சியமாக இருந்திருக்கலாம்.

யாழ்-குடாநாட்டில் கெரில்லாத் தாக்குதல்களையே புலிகளிடமிருந்து படையினர் எதிர்பார்த்திருக்கின்றனர். அதனால் கரும்புலித்தாக்குதல் நடக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பும். அதற்கேற்ற விழிப்புணர்வும் சற்றுக் குறைந்திருந்தது.

அதனால்தான் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் வாகனத்தை ஒரு பெண் கரும் புலியால் சுலபமாக நெருங்க முடிந்திருக்கிறது.

மோட்டார் சைக்கிள் ரோந்துப் பிரிவினர் இருவர் திடீரென்று சந்தேகப்பட்டு, தமது இரண்டு மோட்டார் சைக்கிள்களாலும் பெண் கரும்புலியைத் தடுத்தனர்.

தடுக்கப்பட்ட இடத்திலேயே கரும்புலி தன்னை வெடிக்கவைத்துவிட்டார். அந்தக் குறுக்கீடு மட்டும் இல்லையானால் வாகனத்தை நோக்கித்தான் பெண் கரும்புலி பாய்ந்து வெடித்திருக்க வேண்டும்.

அப்படி நடந்திருந்தால் அமைச்சர் உயிர் தப்பியிருக்க முடியாது. இப்போதுகூட உயிர்தப்பியது மயிரிழையில்தான்.

தாக்குதல் நடந்து முடிந்த பின்னரே ஜூலை 5 கரும்புலிகள் தினம் என்று வன்னியில் உள்ள புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது.

வழக்கம்போல இம்முறையும் தாக்குதலுக்கு புலிகள் உடனடியாக உரிமைகோரவில்லை.

படையினரின் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மீறி யாழ் நகரின் மத்திய பகுதியில் குண்டுவெடிப்பு நடைபெற்றது என்று மட்டுமே, அதனை ஒரு செய்தியாக அறிவித்தது புலிகளின் குரல் வானொலி.

புலிகளின் வெளிநாட்டுக் கிளைகளும் செய்தியாக கூறினவே தவிர, உரிமைகோரவில்லை. ஆனால் செய்தி சொல்லப்பட்ட, செய்திக் குறிப்பாக வெளியிடப்பட்ட முறையில் 'பார்த்தீர்களா வேலையை' என்ற பெருமிதம் காணப்பட்டது.

யாழ்-குடாநாட்டில் சோதனைச் சாவடிகள் பல அமைக்கப்பட்டுள்ளன. கடும் சோதனைகளும் நடத்தப்படுகின்றன.

அப்படியிருந்தும் புலிகள் எப்படி உள்ளே ஊடுருவித் தாக்கினார்கள்? என்பது தான் பரவலான கேள்வி.

ஆனால், யாழ்குடாநாட்டுக்குள் அல்லது யாழ் நகருக்குள் வெளியே இருந்துதான் வெடிமருந்துகளையோ, ஆயுதங்களையோ கொண்டுசெல்ல வேண்டும் என்று அவசியமில்லை.

யாழ் குடாநாட்டில் எங்கெங்கு இருந்து புலிகள் பின்வாங்கிச் சென்றார்களோ, அங்கெல்லாம் எதிர்கால நடவடிக்கைக்கு தேவையான குறிப்பிட்டளவு ஆயுதங்கள், மற்றும் வெடிமருந்துகளை மறைத்துவைத்துவிட்டே சென்றுள்ளனர்.

இதனை 'டம்ப்' பண்ணிவைத்தல் என்று கூறுவர். புலிகள் 'டம்ப்' பண்ணிவைத்த ஆயுதங்களை கண்டுபிடிக்கவேண்டுமானால் 'டம்ப்' பண்ணியவர்கள் படையினரிடம் மாட்டிக்கொண்டு காட்டிக்கொடுக்க வேண்டும். அல்லது யாழ்-குடாநாடு முழுவதும் தரைப்பகுதியை அங்குலம் அங்குலமாக தோண்டிப் பார்க்க வேண்டும். நடக்கிற காரியமா அது?

ஆக, சமீபத்தில் நடைபெற்ற கரும்புலித் தாக்குதலில்கூட குறிப்பிட்ட பெண்புலி மக்களுக்குள் மக்களாக இருந்திருக்கலாம். உத்தரவு கிடைத்ததும் யாழ் நகருக்குள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்த தற்கொலைத் தாக்குதலுக்கான உடையை பொருத்திக்கொண்டு புறப்பட்டிருக்கலாம்.

யாழ் நகரில் இரண்டு சோதனைச் சாவடிகளுக்கு இடைப்பட்ட பகுதியில் புலிகள் 'டம்ப்' பண்ணிய இடம் இருந்திருக்கலாம். எனவே சோதனைகளில் சிக்கும் வாய்ப்பேயில்லாமல் தனது இலக்கு நோக்கி கரும்புலி செல்ல முடிந்திருக்கும்.

அதுமட்டுமல்ல, யாழ்-குடாநாட்டின் தரை அமைப்பு படையினரைவிட புலிகளுக்குத்தான் அத்துப்படி.

யாழ்-குடாநாட்டை சுற்றி பாதுகாப்பு வேலி போட்டுவைத்திருப்பதாக படைத்தரப்பினர் நினைத்துக் கொண்டிருந்தாலும், எங்கோ ஒரு ஓட்டையைக் கண்டுபிடித்து புலிகள் உள்ளே புகுந்துவிடலாம்.

பெரும் தாக்குதல் அணியாக புலிகள் ஒன்றாகவந்து தாக்குதல் நடத்தினால் படையினர் விழிப்பாக இருந்தால் தடுத்துவிடலாம்.

ஆனால், ஒருவர் அல்லது இருவர் பங்குகொள்ளும் தாக்குதல், மற்றும் தற்கொலைத் தாக்குதல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது நடக்கமுடியாத ஒன்று.

ஒருவர் மட்டுமே பங்குகொள்ளும் நடவடிக்கைக்கு 'வன் மேன் ஒப்பரேசன்' (One Man Operation) என்று பெயர்.

கெரில்லாக்கள் ஒரு குழுவாக செல்ல முடியாத பகுதிகளில் 'வன் மேன் ஒப்பரேசன்' தான் முக்கிய தாக்குதல் முறையாக இருக்கும்.

யாழ் குடாநாடு புலிகளின் தளப்பிரதேசமாக இருந்தது. அது மட்டுமல்ல போதியளவு வெடிமருந்து மற்றும் கைக்குண்டுகள், ஆயுதங்கள் என்பன புலிகளிடம் இருந்தன. புலிகளது ஆட்பலத்துக்கு மேலதிகமாக, அவர்களிடம் ஆயுதங்கள் இருக்கின்றன.

எனவே-குறிப்பிட்டளவான ஆயுதங்கள், வெடிமருந்துகள் என்பவற்றை யாழ் குடாநாட்டில் 'டம்ப்' பண்ணிவிட்டுச் செல்லக்கூடிய வாய்ப்பும் கிடைத்திருந்தது. அதனால் 'வன்மேன் ஒப்பரேசனுக்கு' மேலும் சாதகம் அதிகரித்துள்ளது.

சோதனைச் சாவடிகளைத்தாண்டும் போது சாதாரண நபராக செல்ல வேண்டியது. உள்ளே போய் 'டம்ப்' பண்ணிய ஆயுதத்தை எடுத்து சுடவேண்டியவர்களைச் சுடுவது. பின்னர் மறுபடியும் ஆயுதத்தை அதே இடத்தில் 'டம்ப்' பண்ணிவிட்டு குறிப்பிட்ட சோதனைச் சாவடி வழியாகவே கைகளை வீசிக்கொண்டு சென்றுவிடலாம்.

இந்நிலையில் படையினர் வேறு வழியில்லாமல் தமது அணுகுமுறைகளை கடுமையாக்க வேண்டியிருக்கும்.

ஒவ்வொரு நபரையும் அலசோ அலசென்று அலசிப்பார்த்துவிட்டுத்தான் உள்ளே விடவேண்டியிருக்கும்.

பெண்களும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவதால் பெண்களைக் கண்டாலே உஷாராகி, கடும் சோதனைக்கு உட்படுத்த வேண்டிய நிலை ஏற்படலாம்.

நட்போடு புன்னகை செய்பவர்களைக்கூட சந்தேகமாகவே நோக்க வேண்டியிருக்கும். ஏனெனில் கையசைத்தபடி வந்தே புலிகள் சுட்டுவிட்டு தப்பியோடிவிடுவர்.

பொதுமக்களை வென்றெடுப்பது. அவர்களோடு நட்பாகப் பழகுவது. அதன் மூலம் புலிகளைத் தனிமைப்படுத்துவது என்ற அணுகுமுறையைத்தான் படையினர் தற்போது கடைப்பிடிக்கின்றனர்.

அந்த அணுகுமுறைக்கு வேட்டுவைப்பதும் புலிகளின் நோக்கம்தான்.

'மக்களோடு சிரித்தா பேசுகிறீர்கள்? உங்களை சினக்கவைத்துக் காட்டுகிறோம் பாருங்கள் என்ற சவாலும் மக்களோடு மக்களாக வந்து புலிகள் நடத்தும் தாக்குதல்களின் உள்ளடக்கமாக இருக்கும்.

அமைச்சர் மீதான தாக்குதலின்பின்னரும் படைத்தரப்பினர் முன்னைய காலங்கள்போல நடந்துகொள்ளவில்லை. சிலரை விசாரணைக்காக கைதுசெய்ததோடு நிறுத்திக்கொண்டனர்.

மக்களோடு தம்மை முரண்படவைக்கத்தான் புலிகள் ஆசைப்படுகிறார்கள் என்று படைத்தரப்புக்கு தெரிகிறது. எனவே-கூடுமான வரை மக்களை அனுசரித்துப் போகவே படையினர் முற்படுகிறார்கள்.

ஆனால், 'வன் மேன் ஒப்பரேசன்' தொடரும் போது எந்தளவுக்கு நிதானத்தை கடைப்பிடிக்க முடியும் என்பது கேள்விக் குறிதான்.

யாழ்-குடாநாட்டில் உள்ள மக்களைப் பொறுத்தவரை 'அவர்கள் அனுபவித்து உணரட்டும்' என்ற கொள்கையைத்தான் புலிகள் கைக்கொள்வார்கள். 'தடுக்கத் தடுக்கப் போனீர்களே பார்த்தீர்களா?' என்று கேட்க முடிந்தால் தான் மீண்டும் யாழ் குடாநாட்டு மக்களிடம் தமது சொல்லுக்கு மரியாதை ஏற்படும் என்றே புலிகள் நினைப்பர்.

யாழ்-குடாநாட்டுக்குள் வெகு சாதாரணமாக திறப்புவிழாக்கள், வரவேற்புக் கூட்டங்கள் நடத்தமுடியுமென்று பாதுகாப்பு தரப்பு நினைத்ததுதான் வேடிக்கை. புலிகளின் பலத்தை சரியாக மதிப்பிடத்தவறிவிட்டார்களா? அல்லது பிரசார தேவைகள் கருதி 'ரிஸ்க்' எடுக்கத் துணிந்தார்களா? என்று தெரியவில்லை.

முன்னர் ஒரு காலத்தில் தமிழரசுக் கட்சியும், பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியும் வடக்கே செல்லும் அமைச்சர்களுக்கு கறுப்புக் கொடி காட்டுவதுண்டு. ஹர்த்தால், பகிஷ்கரிப்பு என்பனவும் நடத்தப்படும்.

அது-தந்தை செல்வாவின் பாணி. பிரபாகரன் கறுப்புக்கொடி காட்டப்போவதில்லை. ஹர்த்தால்களில் எல்லாம் அவருக்கு நம்பிக்கையுமில்லை. எனவே "கரும்புலிகளைத்தான் அனுப்பிவைப்பேன்" என்ற செய்தியை ஜூலை 4 தற்கொலைத் தாக்குதல் மூலம் தெரியப்படுத்தியுள்ளார்.

இனிமேல் அமைச்சர்கள் யாழ் குடாநாட்டுக்குச் சென்றால் தவிர்க்க முடியாமல் பாதுகாப்புக்கள் கடுமையாக்கப்படவேண்டி இருக்கும்.

தொலைக்காட்சியிலும், செய்திகளிலும் பெயர் அடிபடவேண்டுமானால் யாழ்ப்பாணம் சென்றுவந்தால் போதும் என்று நினைத்தவர்களும் இல்லாமல் இல்லை. இனிமேல் அவர்களுக்கு யாழ் செல்வதைவிட 'வேறு வேலைகள்' இருக்கக்கூடும்.

"யாழ்ப்பாணத்தை சொர்க்கமாக்கப் போகிறோம்" என்பதுபோல அரசாங்கம் பிரசாரம் செய்கிறது.

"யாழ்ப்பாணம் நரகமாகப் போகிறது. அங்கு திரும்பிச்சென்றவர்கள் என்ன பாடுபடப் போகிறார்கள் பாருங்கள்" என்று புலிகள் வன்னியில் பிரசாரம் செய்கிறார்கள்.

உண்மையாகவே இனிமேல்தான் யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆடு- புலி ஆட்டம் சூடுபிடிக்கப்போகிறது.

ஜூலை 4ம் திகதி நடைபெற்ற தற்கொலைத்தாக்குதல்தான் ஆடு-புலி ஆட்டத்தின் ஆரம்பம்.

'தமிழ் மக்கள் எம் பக்கம்' என்று காட்டிக்கொள்ளக் கூடியதாக, அமைச்சர்களது வரவேற்புகள், மற்றும் அராசாங்க நிகழ்ச்சிகளில் தமிழ் மக்கள் கலந்துகொள்வதை தடுப்பதும் புலிகளின் நோக்கம் என்று தெரிகிறது.

'நந்திக்கொடி' ஏற்றிய இராமலிங்கத்தையும் புலிகள் சுட்டுக்கொன்றுவிட்டனர். சூரியக்கதிர்-1 இன் பின்னர் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்த சிங்கக்கொடி ஏற்றினார். இராமலிங்கம் நந்திக்கொடியை ஏற்றினார்.

புலிகளின் கவிஞர் புதுவை இரத்தினதுரை தனது கவிதை ஒன்றில், இராமலிங்கத்தின் கதை முடியும் என்பதுபோல திட்டித் தீர்த்திருந்தார்.

ஒரு மாதத்திற்கு முன்னர் இராமலிங்கத்தை யாரோ உடைந்த போத்தலால் குத்திவிட்டார்கள். காயத்தோடு தப்பியிருந்தார் என்று தகவல்.

இறுதியாக 6.7.96 அன்று இராமலிங்கத்தை புலிகள் சுட்டுத் தீர்த்துக்கட்டிவிட்டார்கள்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை இது வெட்கப்படவேண்டிய விவகாரம். தமக்கு பொறுத்த நேரத்தில் உதவிய ஒருவரை அரசாங்கத்தால் காப்பாற்ற முடியவில்லை.

இராமலிங்கத்தை தீர்த்துக்கட்டியது மூலம் யாழ்-குடாநாட்டில் அரசாங்கம் தனக்குப் பிடித்தமான, தனக்கு அடக்கமான ஒரு அணியை உருவாக்கும் முயற்சிக்கும் புலிகள் வேட்டுவைத்துள்ளனர்.

மக்கள் வாயைத் திறக்கவே பயப்படும் நிலை தொடரவே செய்யும். அரசாங்கத்தையோ, புலிகளையோ, ஏனைய இயக்கங்களையோ மக்கள் வாழ்த்தப் போவதுமில்லை. வசைபாடப்போவதுமில்லை. வரவேற்கப்போவதுமில்லை. காரணம், மக்கள் தாமுண்டு, தம் பாடுண்டு என்று இருப்பதே மேல் என்று கண்டுகொண்டனர்.

புலிகளின் கட்டுப்பாட்டில் யாழ் குடாநாடு இருந்தபோது அரசாங்கத்தையும் ஏனைய தமிழ்க்கட்சிகளையும் வேண்டுமானால் எதிர்த்துப் பேசும் ஜனநாயக உரிமை மட்டும் மீதியாக இருந்தது. இப்போது அதுவும் இல்லை. மாற்றம் அது மட்டும் தான்.

ஒன்றே ஒன்று மட்டும் உறுதி. இனப் பிரச்சனைக்கு தீர்வு கிடைக்காதவரை யாழ்ப்பாணம் மட்டுமல்ல, இலங்கையின் எப்பாகமும் சொர்க்கமாக முடியாது.

யாழ்-குடாநாட்டில் புலிகளின் குறுக்கீட்டை மீறி புனரமைப்பு மற்றும் அரசாங்கத்தின் அரசியல் நோக்கம் சார்ந்த பணிகளை முன்னெடுப்பது நடக்கக்கூடிய காரியமாகத் தெரியவில்லை.

★★★★

**கி**ழக்கு மாகாணத்தில் உள்ள தமது அணிகளை தட்டிக்கொடுத்து புதிய தாக்குதல்களுக்கு உத்தரவிட்டுள்ளார் பிரபாகரன்.

திருமலைக்கு சொர்ணத்தை அனுப்பியுள்ளது மூலம், கிழக்கில் பிரபாகரனின் கவனம் முழு அளவில் குவிந்துள்ளது என்பதை அறியமுடிகிறது.

புலிகளின் மூத்த தளபதியான சொர்ணம் திருமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர். திரியாய்தான் அவரது சொந்த ஊர்.

திருமலைக்கு சொர்ணத்தை பிரபா அனுப்பி வைத்தமைக்கு அதுவும் ஒரு காரணம்.

திருமலை மாவட்டத்தில் சொர்ணம் தலைமையில் நடைபெற்ற சில தாக்குதல்கள் பாரியளவில் அமைந்திருந்தன.

எனவே-மட்டக்களப்பு தளபதி கருணாவுக்கும் ஒரு நிர்ப்பந்தம். அவரும் தனது தலைமையில் மட்டக்களப்பில் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தியாகவேண்டும்.

எனவே-மட்டக்களப்பில் புலிகளின் பாரிய தாக்குதல் ஒன்றை எதிர்பார்க்கலாம்.

இதேவேளை வடக்கு-கிழக்கு இணைப்புக்கு எதிரான கிழக்கு மாகாண அரசியல் சக்திகள்மீதும் புலிகளின் கவனம் திரும்பியிருக்கிறது.

கிழக்கில் அரசியல், இராணுவரீதியில் தமது பிடியை இறுக்குவதே புலிகளின் நோக்கம். அதனால் கிழக்கு மாகாணத்தில் புலிகளுக்கு எதிரான அரசியல் சக்திகள் பலத்த அச்சுறுத்தலை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

கிழக்கில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி முக்கியஸ்தர்கள் சிலர்மீதும் புலிகள் கடும் கோபத்தில் இருக்கிறார்கள்.

பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுவிப்பதுபோல, புலிகளையும் பாராட்டுவதுபோல பேசிக்கொண்டு. அரசாங்கத்திடமும் மறைமுகமாகப் பல சலுகைகளைப் பெற்றுவரும் சிலர்மீது புலிகளின் பார்வை திரும்பியிருக்கிறதாம்.

கிழக்கில் உள்ள கூட்டணி பா.உக்கள் சிலர் வடக்கு-கிழக்கு பிரிப்புக்கு ஆதரவாக வாதிட்ட விடயம் பிரபாகரனின் காதுக்கு எட்டியிருக்கிறது. அதன்பின்னர் கிழக்குக்கு பிரபா அனுப்பிய உத்தரவின் காரணமாகவே கூட்டணி பா.உ. ஒருவர்மீது கொலை முயற்சி நடந்துள்ளது.

மட்டக்களப்பு பொது ஜன முன்னணி அமைப்பாளரின் சகோதரரும் புலிகளால் கொல்லப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பிலுள்ள ஆளும் கட்சி உறுப்பினர்கள் கட்சியைவிட்டு விலக வேண்டும் என்று கடந்தவருடம் புலிகள் எச்சரிக்கை விடுத்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

படைபல நிலையில் பார்க்கும்போது கிழக்கை படையினர் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவருவது கஷ்டமல்ல. ஆனால் வடக்கையும், கிழக்கையும் ஒரே நேரத்தில் படைத்தரப்பு பூரண கட்டுப்பாட்டில் வைத்திருப்பது சக்திக்கு மீறிய கற்பனைதான்.

எனவே-கிழக்கில் இராணுவரீதியில் இருதரப்புக்கும் வெற்றி தோல்விகள் மாறி மாறி வந்தாலும், புலிகளின் ஆதிக்கம் அரசியல், இராணுவரீதியாக அங்கு தொடரவே செய்யும். யாழ்-குடாநாட்டிலும் நிலைகொண்டபடி கிழக்கில் புலிகளை ஓரம்கட்டுவது படைத்தரப்புக்கு சுலபமல்ல.

வடக்கில் அடி, கிழக்கில் கிடுக்கிப்பிடி என்பதுதான் புலிகளின் தற்போதைய போர்த்தந்திரம்.

## அதிரடி அய்யாத்துரை



**யா**ழ்ப்பாணம் சென்று ஒரு கலக்குக் கலக்க சில தமிழ் புத்தி சீவிகள் திட்டம் போட்டிருந்தவையாம். ரெண்டு எழுத்தாரும் ஓரம்போ. தமிழ் கட்சிகளும் வேண்டாம். நாங்கள் புகுந்து விளையாடிக் காட்டப்போறம் எண்டு கிளம்பினவையாம். சமீபத்திய டமார் சத்தத்தின் பின்வர் புத்திசீவிகள் சிலர் தலைமறைவாம். அடிச்ச துண்டுப் பிரசுரங்களை கொடுத்து விடுவதற்காக அதிகார மட்டம் அவர்களைத் தேடிக் கொண்டிப்பதாகவும் கேள்வி.

தமிழ் கட்சிகள் எதற்கு? நாங்கள் போய் வந்தால்போதும் எண்டு சிலர் ஒடுபட்டுத்திரிஞ்சவை. சம்பத்திய யாழ் சம்பவத்தின் பின்னர் நிலவரம் மாறலாம். "தமிழ் கட்சிகள் தங்கள் ஜனநாயகக் கடமையை நிறைவேற்றும் பொருட்டும், மக்களை மறவாதிருக்கவும் யாழ் செல்ல வேண்டும்" எண்டு இனிமேல் சொல்லப்படலாம். எல்லாம் ஒரு பொது நோக்கம்தான்.

**ச**மாதானம் வருகுதோ இல்லையோ சமாதானம் பேசியவைக்கு பதவி வரும் எண்டு நான் முன்னர் ஒருமுறை குறிப்பிட்டது நினைவிருக்கோ? அதைப்படிச்சுப்போட்டு சம்பந்தப்பட்ட சிலர் என்ன சொன்னவை தெரியுமோ? 'சேச்சே நாங்கள் பதவிக்காக அலைபவர்கள் அல்ல. மக்களின் நலன் விரும்பிகளாக்கும்' எண்டு சொன்னவை. ஆனால் பாருங்கோ அய்யாத்துரை ஒரு தரம் சொன்னா அது ஆயிரம் தரம் சொன்னமாதிரி. சமாதானம் பேசிய பிரபல பழம் பெரும் பிரேமையான எழுத்தாளர் ஒருவருக்கு அரச பத்திரிகையின் கௌரவ ஆலோசகர் பதவி. கைநிறையச் சம்பளம். வானொலி தமிழ் சேவையிலும் பதவியோ பதவி. முற்போக்கு எழுத்தாளருக்கு மேற்படி துறைகள் எப்படி ஒத்துப்போகுது? முற்போக்கு எழுத்தாளர் என்று தங்களுக்கு தாங்களே முத்திரை குத்திக்கொண்டால் மட்டும் போதுமாக்கும். முற்போக்கு என்பதற்கு பல அர்த்தங்கள் இருக்குது. காலம் மாறிப் போச்சு. முந்தியெண்டாலும் மொஸ்கோவுக்கு ஒரு ரவுண்ட் அடிச்சுப்போட்டு வர அந்த முத்திரை உபயோகப்படும்.

**ப**ச்சைக் கட்சியை தமிழ் கட்சிகள் ஐந்தும் கூட்டாக சந்திச்சவையல்லோ. அதிகார தரப்பு விசாரணைக் கமிஷன்களை கைவிட்டால் அரசியல் தீர்வுக்கு ஒத்துழைக்கலாம் எண்டதாம் பச்சைக் கட்சி. ரெண்டு எழுத்தாருடன் தம்மை இணைத்து பிராசரம் செய்யப்படுவதைப்பற்றியும் எதிரணித்தலைவர் விளக்கினவராம். விளக்கும்போது டென்ஷனாகிவிட்டாராம். எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த தமிழ் கட்சி பிரதிநிதிகளுக்கு ஒரே குழப்பம். இனப்பிரச்சனையைத் தீர்க்கிறதோ, இரண்டு கட்சிகளின் பிரச்சனையைத் தீர்க்கிறதோ எண்டுதான் குழப்பமாம்.

**யா**ழ்ப்பாண சனத்தின் சமயோசித புத்தியைப் பாராட்டத்தான் வேணும். யாழிலிருந்து வெளியேறும்போது வீட்டில் இருந்த இரும்புப் பெட்டியை திறந்து போட்டுவிட்டுத்தான் சிலர் போனவையாம். இப்ப திரும்பி வந்து பார்த்தால் இரும்பு பெட்டி ஒரு சேதமும் இல்லாமல் இருக்குதாம். தப்பித் தவறி பூட்டிவைச்சுப்போட்டு போயிருந்தால் என்ன நடந்திருக்கும் தெரியுமோ? உள்ளே ஏதோ பெரிசாக இருக்கு தெண்டு குண்டுவைச்சு உடைச்சுப் பார்த்திருப்பினமல்லோ. அப்படியும் சில இடங்களில் நடந்திருக்குதாம்.

**ரெ**ண்டு எழுத்தாரின் காவல்துறை இருந்தபோது நடுநடுங்கிப்போயிருந்த உள்ளூர்திருடர்கள்பாடு ஒரே கொண்டாட்டமாம். கழுத்து, விரல்கள், கைகள் எல்லாம் நகைகள் மின்னலடிக்க நடமாடுகினமாம். ஓலை குடிசையாக இருந்த சில வீடுகள், இடம் பெயர்வுக்கு பின்னர் இரவோடு இரவாக ஓடுகள் வேய்ந்த வீடுகளாக மாறியிருக்காம். உள்ளூர் திருடர்கள் காட்டில்தான் மழை.

**யா**ழுக்கு உணவு அனுப்புவது எண்டால் தலைநகரில் உள்ள களஞ்சிய சாலையில் உள்ள கல் தோன்றி மண் தோன்றாக் கால அரிசி மூடைகளுக்கு விடுதலை. விடுதலை. விடுதலை! யார் கவனிக்கிறது? யாரிடம் சொல்லியழுவது?

**யா**ழ்ப்பாணத்தில் நல்ல உள்ளி கிலோ நூறு ரூபாவுக்குத்தான் விற்கவேண்டும். எண்டு சிருடையினரின் கட்டுப்பாடு. நெளிவு சுழிவு தெரிந்த வியாபாரிகள் சிருடைக்காரருக்கு. கவனிப்பு செய்துவிட்டு கட்டுப்பாட்டை புறங்கையால் தட்டி விடுகினமாம். பொதுவாக கட்டுப்பாட்டு விலையுள்ள சகல பொருட்களுக்கும் மேற்கண்ட முறையிலான கவனிப்பு உபயத்தில் பல மடங்கு இரட்டிப்பு விலைதானாம்.

**க**விதையைப் பார்த்ததும் யார் எழுதியது என்று ஊகியுங்கள் பார்க்கலாம்.

"யாப்பிருந்தால் கவிதை வரும்.
தோப்பிருந்தால் காற்று வரும்.
நெருப்பிருந்தால் கனல் வரும்.
நினைப்பிருந்தால் காதல் வரும்.
பறித்த பூக்கள் எல்லாம் மணப்பதில்லை.
சிரித்த பெண்கள் எல்லாம் உனை நினைப்பதில்லை.
காதலே ஒரு மாயம்தான்.
காதலுற்றால் நெஞ்சில் காயம்தான்."

யார் தெரிந்ததா? டி.ராஜேந்தரேதான். சரியாக ஊகித்தவர்களுக்கு முதுகில் ஒரு ஷொட்.

www.padippakam.com

**அரசியல் தொடர்** — அற்புதன் எழுதுவது



# — ஷெல்லுக்கு ஷெல் —
# கோட்டைக்குள் மோட்டார் தாக்குதல்!

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## கொழும்பு நடவடிக்கைகள்

கொழும்பில் தங்கியிருந்து தாக்குதல் நடத்துவதைவிட, யாழ்ப்பாணத்தில் இருந்துகொண்டு கொழும்பில் தாக்குதல் நடத்துவது கடினமான காரியம்.

கொழும்பில் தங்கியிருந்து நடவடிக்கையில் ஈடுபட பொருத்தமான ஆட்கள் இல்லையென்பதால் யாழிலிருந்து கொழும்பில் தாக்குதல் நடத்துவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை.

கொழும்பில் அப்போதெல்லாம் இப்போதுபோல தமிழர்கள் எங்கெங்கும் காணப்படும் சூழ்நிலை இருக்கவில்லை.

இப்போதென்றால் கொழும்பில் திரும்பிய இடமெல்லாம் தமிழர்கள் இருக்கிறார்கள். வடக்கு-கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்து வந்த தமிழர்கள் பெருவாரியாக இருப்பதே இதற்கு காரணமாகும்.

எனவே-அந்தக் காலகட்டத்தில் கொழும்பில் இயக்க நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படும் ஒரு உறுப்பினருக்கு மும்மொழிகளிலும் நல்ல பரிச்சயம் இருக்கவேண்டும். குறிப்பாக சிங்கள மொழியில் தேர்ச்சி இருக்க வேண்டும். கொழும்பும் ஓரளவாவது பரிச்சயமாக இருக்கவேண்டும் என்பதெல்லாம் முக்கியமாக இருந்தது.

ஈரோசுக்கும், ஈ.பி.ஆர்.எல்.எஃப் அமைப்புக்கும்தான் கொழும்பில் வசித்து, கொழும்பு நன்கு பரிச்சயமான உறுப்பினர்கள் இருந்தனர்.

ஈழமாணவர் பொதுமன்றம் (G.U.E.S) மூலமாக கொழும்பு தமிழ் பாடசாலைகளிலும் தொடர்புகளை ஏற்படுத்த முடிந்தது.

ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும் கொழும்பில் சிலகாலம் வசித்தமையால் கொழும்பிலும் உறுப்பினர் திரட்டலில் ஈடுபட்டார்.

டக்ளஸ் தேவானந்தா கொழும்பில் கராத்தே வகுப்பு நடத்தி அதன்மூலமாகவும் உறுப்பினர்களை திரட்டினார்.

எனினும் கொழும்பின் அப்போதைய சூழல் காரணமாக இயக்கங்களில் இணைந்து கொண்ட உறுப்பினர்களில் ஒரு சிலர் மட்டுமே இறுதிவரை தாக்குப்பிடித்தனர்.

ஈரோஸ் இயக்கத்தின் கொழும்பு நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகித்தவர் ஐ.பி.ரி.வரதன்.

அவர் கொழும்பில் தொலைத்தொடர்பு நிலையத்தில் முக்கிய அதிகாரியாக பதவி வகித்தார். அந்தப் பொறுப்பில் இருந்துகொண்டுதான் கொழும்பில் குண்டுத்தாக்குதல்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்.

பல நடவடிக்கைகளின் பின்னரே வரதனுக்கும் தொடர்பு இருப்பது பொலிசாருக்கு தெரியவந்தது. பொலிசார் தேடத் தொடங்கியபோது வரதன் யாழ்ப்பாணத்திற்கு பறந்துவிட்டார்.

### குண்டு லொறி

கொழும்பில் ஈரோஸ் இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் தொடர்பான விபரங்களை கைது செய்யப்பட்ட ஈரோஸ் உறுப்பினர்கள் மூலம் பொலிசார் பெற்றுக்கொண்டனர்.

எனவே-யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு நேரடியாக குண்டு லொறியை அனுப்புவது என்று ஈரோஸ் திட்டமிட்டது.

அப்போது எலிஃபன்ற் ஹவுஸ் நிறுவனத்தை அரசாங்கம் பொறுப்பேற்று நடத்திக்கொண்டிருந்தது.

சிலோன் கோல்ட் ஸ்ரோர்ஸ் என்று பெயர் சூட்டப்பட்டிருந்தது.

சிலோன் கோல்ட் ஸ்ரோர்ஸின் மாத வருமானத்தில் ஒரு பகுதி தேசிய பாதுகாப்பு நிதிக்கு வழங்கப்பட்டு வந்தது.

சிலோன் கோல்ட் ஸ்ரோர்ஸில் குண்டு வெடிப்பு நடத்துவதென்று இலக்கை தீர்மானித்தது ஈரோஸ்.

கொழும்பு இராணுவ தலைமையகம் அருகேதான் சிலோன் கோல்ட் ஸ்ரோர்ஸ் இருந்தது.

யாழ்ப்பாணத்தில் சிலோன் கோல்ட் ஸ்ரோர்ஸ் ஏஜண்டாக இருந்தவர் வி.எம். பரமநாதன்.

ஒருநாள் பாவனைக்காக தமக்கு லொறி தேவை என்று லொறியைக் கொண்டுசென்றது ஈரோஸ்.

நெல்லியடிக்கு லொறியைக் கொண்டு சென்று லொறியின் அடிச்சட்ட அளவுகளை எடுத்தனர். லொறியில் குண்டு பொருத்துவதற்கு வசதியாக லொறியில் செய்யவேண்டிய மாற்றங்களைக் குறித்துக் கொண்டனர்.

பின்னர் லொறியை பத்திரமாக கொண்டு சென்று ஒப்படைத்துவிட்டனர்.

பாவனை முடிந்ததும் லொறியை திருப்பித்தந்துவிட்டார்களே என்று லொறி உமையாளருக்கு பரம சந்தோசம்.

அதேவேளை நெல்லியடியில் குறிப்பிட்ட லொறியின் அடிச்சட்டமாக பொருத்த வேண்டிய பாகம் தயாராகிக்கொண்டிருந்தது. பொருத்தப்படும் அந்த அடிச்சட்டத்தில்தான் குண்டுவெடிப்புக்கான சூக்குமம் இருந்தது.

காலியான சோடாப் போத்தல்களை பெட்டிகளில் நிரப்பி ஏற்றிக்கொண்டு லொறி கொழும்புக்கு புறப்பட்டது.

சாவகச்சேரியில்வைத்து லொறியை மறித்து நெல்லியடிக்குக் கொண்டுசென்றது ஈரோஸ்.

முன்கூட்டியே அளவெடுத்து தயாரித்து வைத்திருந்த அடிச்சட்டத்தை லொறியில் பொருத்தினார்கள்.

கொழும்பில் கோல்ட் ஸ்ரோஸில் லொறியில் இருந்து சோடாப்போத்தல் பெட்டிகள் இறக்கப்படும். கடைசிப்பெட்டி இறக்கப்படும்போது குண்டு வெடிக்கும். அதற்கேற்ப மிக நுணுக்கமாக குண்டு தயாரிக்கப்பட்டது.

லொறியை கொண்டுவந்து சாரதியிடம் ஒப்படைத்தனர். சாரதிக்கும், கிளீனருக்கும் சந்தேகம் வந்துவிட்டது.

ஆனால் லொறியில் குண்டு பொருத்தப்பட்டிருப்பதோ, எங்கு அது பொருத்தப்பட்டிருக்கிறது என்பதோ அவர்களுக்கு தெரியாது.

ஏதோ ஒரு காரியம் செய்திருக்கிறார்கள் என்றுமட்டும் அவர்களுக்கு சந்தேகம்.

### ஒருவாரத் தாமதம்

ஆனையிரவு இராணுவ தடைமுகாமில் லொறி மறிக்கப்பட்டது. இராணுவத்தினர் சோதனையிட்டனர்.

சந்தேகப்படும்படியாக எதுவுமில்லை. லொறி தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்டது.

பல தடைமுகாம்களையும், சோதனைகளையும் தாண்டி கொழும்பு நகருக்குள் லொறி வந்து சேர்ந்துவிட்டது.

கொழும்பு கோல்ட் ஸ்ரோஸில் குண்டு வெடித்தது என்ற செய்தியை அறிய ஈரோஸ் காத்திருந்தது.

ஒருவாரமாகியபோதும் குண்டுவெடிப்பும் நடக்கவில்லை. குறிப்பிட்ட லொறி மாட்டியதாகவும் செய்தி இல்லை.

ஈரோசுக்கு ஒரே பரபரப்பு. லொறிச் சாரதிதான் ஏதாவது வம்பு பண்ணிவிட்டாரோ என்று சந்தேகம்.

அதேநேரம் அந்த லொறி கொழும்பில் உள்ள லொறித் தரிப்பிடமொன்றில், தனக்குள் குண்டை வைத்துக்கொண்டு தரித்து நின்றது.

ஒருவாரத்தின் பின்னர் 30.05.86 அன்று தரிப்பிடத்தில் இருந்து லொறி புறப்பட்டது.

'சிலோன் கோல்ட் ஸ்ரோர்ஸ்' களஞ்சியப் பகுதிக்கு லொறி சென்றது.

பெட்டிகள் இறக்கப்பட்டுக்கொண்டிருந்தன. லொறிச்சாரதிக்கு சந்தேகம் மாறவில்லை. லொறியை விட்டுவிட்டு மெல்ல நழுவிவிட்டார்.

கடைசிப்பெட்டி இறக்கப்பட்டபோது குண்டுவெடித்தது.

களஞ்சியப்பகுதி பலத்த சேதமடைந்தது. எட்டுப்பேர் பலியானார்கள். 50க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

குண்டுலொறிக்கு அருகில் நின்ற ஐந்து லொறிகளை காணவில்லை. அத்தனையும் சிதறிப்போய் இருந்தன.

குண்டுவெடிப்பின் சத்தம் சுமார் மூன்று மைல்தூரம்வரை கேட்டது. குண்டுவெடிப்பின் அதிர்வால் பல கட்டிடங்களில் ஜன்னல் கண்ணாடிகள் நொறுங்கின.



அரைமைல தூரத்திலுள்ள கட்டிட கண்ணாடிகளும் சிதறின

கொழும்பில் சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் தொழிற்சாலையில் கோரச் சம்பவம்

லொறியில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்தது எட்டு பேர் மரணம்; 50க்கு மேற்பட்டோர் காயம்

கொழும்பு கொம்பனித் தெருவிலுள்ள 'சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ்' தொழிற்சாலையில் நேற்று பிற்பகல் ஒன்றரை மணியளவில் ஏற்பட்ட பாரிய குண்டு வெடிப்பொன்றில் எட்டு பேர் கொல்லப்பட்டதுடன் ஐம்பதுக்கு மேற்பட்டோர் பெரும் காயங்களுக்குள்ளானார்கள். கொழும்பு நகரைக் கலக்கிய இந்த குண்டுவெடிப் ... லொறி ஒன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டே

### திருமலையில்

திருக்கோணமலையில் உள்ள எலிஃபன்ற் ஹவுஸ் கட்டிடத்திலும் ஈரோஸ் ஒரு குண்டு வெடிப்பை நடத்தியது.

அப்போது திருமலை மாவட்ட ஈரோஸ் நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருந்தவர் தவா.

எலிஃபன்ற் ஹவுஸ் கட்டிடத்துக்குள் குண்டு பார்சலை கொண்டுசென்றுவைத்துவிட்டு வருவதுதான் வேலை.

# யாழிலிருந்து கொழும்பு வந்த குண்டு லொறி

நடவடிக்கையில் ஏற்பட்ட சில தவறுகள் காரணமாக குண்டுவெடிப்பின் போது ஈரோஸ் உறுப்பினர் ஒருவரும் பலியானார்.

கட்டடம் சேதமானது. கட்டடத்தில் இருந்த ஏழுபேர்வரை பலியானதாக ஞாபகம். 15.07.86 இல் நடைபெற்றது.

தம்பலகாமம் பகுதியில் இருந்த மின்மாற்றி ஒன்றையும் 10.9.86 அன்று ஈரோஸ் அமைப்பினர் குண்டுவைத்துத் தகர்த்தனர்.

28.10.86 அன்று திருமலையில் உள்ள தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையத்தில் பார்சல் குண்டொன்று வெடித்தது.

அந்த குண்டுவெடிப்பும் ஈரோஸ் அமைப்பினரால்தான் மேற்கொள்ளப்பட்டது.

குண்டுவெடிப்பு என்றாலே அது ஈரோசின் வேலை என்று கருதப்படுமளவுக்கு தொடர்ச்சியாக பல குண்டுவெடிப்புக்களை நடத்தி முடித்தது ஈரோஸ்.

குண்டுத்தாக்குதல்கள் மட்டுமல்ல வெற்றிகரமான கண்ணிவெடி தாக்குதல்களையும் வடக்கு-கிழக்கில் நடத்தியிருந்தது ஈரோஸ்.

25.06.86 புல்மோட்டையில் ஒரு கண்ணிவெடித்தாக்குதல். படையினர் இருவர் கொல்லப்பட்டனர். எழுவர் காயமடைந்தனர்.

11.08.86 அன்று மட்டக்களப்பு வாகரையில் பாரிய கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றை ஈரோஸ் நடத்தியது.

19 இராணுவத்தினர் கொல்லப்பட்டதோடு, ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

29.08.86 அன்று துறைமுகவீதி திருக்கோணமலையில் ஈரோஸ் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் 4 பொலிசார் பலியானார்கள்.

31.08.86 அன்று மூதூரில் நடைபெற்ற கண்ணிவெடித் தாக்குதலும் குறிப்பிடத்தக்கது. இராணுவத்தினர் தரப்பில் 7 பேர் பலியானார்கள்.

### ஷெல்தாக்குதல்

07.9.86 அன்று யாழ் கோட்டை இராணுவ முகாமில் இருந்து யாழ்நகரை நோக்கி ஷெல்கள் ஏவப்பட்டுக்கொண்டிருந்தன.

இந்தியா ஈரோசுக்கு வழங்கிய மோட்டார் ஷெல்கள் அப்போதுதான் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்திருந்தன.

மோட்டார் ஷெல்களை யாழ் கோட்டை இராணுவ முகாம்மீது, ஏவியது ஈரோஸ்.

யாழ்கோட்டைக்குள் சரமாரியாக விழுந்து வெடித்தன ஷெல்கள். ஒன்பது இராணுவத்தினர் பலியானார்கள். முகாமுக்குள் நின்ற கட்டடங்கள், வாகனங்கள் என்பன சேதமடைந்தன.

யாழ்கோட்டை இராணுவ முகாம்மீதான தாக்குதலில் இராணுவத்தினருக்கு முதலில் ஏற்பட்ட பலத்த சேதம் அதுதான்.

யாழ்ப்பாணத்தில் ஈரோசின் இராணுவ நடவடிக்கைகளுக்கு அப்போது பொறுப்பாக இருந்தவர் சண்.

08.09.86 அன்று முருங்கன் பகுதியில் ஈரோஸ் கண்ணிவெடித்தாக்குதல் ஒன்றை நடத்தியது. ஏழு இராணுவத்தினர் பலியானார்கள்.

14.12.86 அன்று முருங்கனில் ஈரோஸ் வைத்த பொறிவெடியில் சிக்கி இராணுவத்தினர் மூவர் பலியானார்கள்.

### ஜிகாத்மீது நடவடிக்கை

முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்காக என்று ஆரம்பிக்கப்பட்டது ஜிகாத் இயக்கம்.

உண்மையில் ஜிகாத் இயக்கத்தின் பின்னணியில் நின்றது அரசாங்கம்தான். தமிழ்-முஸ்லிம் மக்களிடையே மோதல்களை உருவாக்கிவிடுவது. உளவு வேலைகளில் ஈடுபடுவது போன்ற நடவடிக்கைகளை ஜிகாத் மூலமாக மேற்கொள்வதுதான் அரசாங்கத்தின் நோக்கம்.

மொசாட்டுடனும் உறவு, ஜிகாத் இயக்கத்தையும் வளர்த்துவிடுவது என்ற ஒன்றுக்கு ஒன்று முரண்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டார் அத்துலத் முதலி.

30.12.86 அன்று மன்னார் மாவட்ட ஜிகாத் பொறுப்பாளர் றம்சின் ஈரோஸ் இயக்கத்தால் கைது செய்யப்பட்டார்.

இராணுவத்தினிடம் பயிற்சி பெற்றது. ஆயுதங்கள் கிடைத்தது. பணம் பெற்றது அத்தனையையும் ஒப்புக் கொண்டார் றம்சின்.

பத்திரிகையாளர் மாநாட்டில் றம்சினை கொண்டுவந்து நிறுத்தியது ஈரோஸ்.

பத்திரிகையாளர்கள் முன்னிலையில் அனைத்தையும் ஒப்புவித்தார் றம்சின். 'ஜிகாத்' இயக்கத்தை தடைசெய்வதாக அறிவித்தது ஈரோஸ்.

றம்சினுக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது.

ஜிகாத்மீதான நடவடிக்கையை முஸ்லிம் மக்களுக்கு எதிரான நடவடிக்கையாக பிரசாரம் செய்தது அரசாங்கம்.

இஸ்ரேலிய மொசாட் இலங்கையில் காலடி வைத்தமையால் அரசின்மீது வெறுப்புக்கொண்டிருந்தனர் முஸ்லிம் மக்கள்.

ஜிகாத் இயக்கம் மீது ஈரோஸ் மேற்கொண்ட நடவடிக்கையை பயன்படுத்தி முஸ்லிம் மக்களின் வெறுப்பை திசை திருப்பிவிடப் பார்த்தார் அத்துலத் முதலி.

### காவலரண்மீது தாக்குதல்

திருமலை மாவட்டத்தில் தோப்பூர் இராணுவ முகாம் காவலரண்மீது நடத்தப்பட்ட தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் பலியானார்கள். ஈரோஸ் தரப்பில் எவ்வித இழப்புமில்லை.

10.02.87 அன்று சிலோன் தியேட்டர் குடியேற்றவாசிகள் மீது ஈரோசால் தாக்குதல் நடத்தப்பட்டது.

குடியேற்றத்திற்கு பாதுகாப்பாக ஊர்காவல் படையை உருவாக்கியிருந்தது இராணுவம்.

பயிற்சி முடித்த ஊர்காவல் படையினரின் அணிவகுப்பு நடைபெறப்போவதாக அறிந்தது ஈரோஸ்.

மோட்டார் ஷெல்களோடு சென்று தூரத்தில் மறைந்திருந்தனர். அணிவகுப்பு ஆரம்பமானபோது மோட்டார் ஷெல்கள் ஏவப்பட்டன.

அணிவகுப்பின் மத்தியில் சென்று விழுந்த மோட்டார்ஷெல்கள் பலரைப்பலி கொண்டன.

ஏனைய இயக்கங்களை புலிகள் தடைசெய்தபோதும் ஈரோஸ் இயக்கத்தை தடை செய்யாமல் இருந்தனர்.

ஈரோஸ் இயக்கமும் புலிகளுடன் முரண்டுபிடிக்கும் போக்கை மேற்கொள்ளாமல் செயற்பட்டுவந்தது.

எப்போது வேண்டுமானாலும் ஈரோஸ் இயக்கம்மீதும் புலிகள் பாய்வார்கள். தடை செய்வார்கள் என்றே ஏனைய இயக்கங்கள் எதிர்பார்த்தன.

1987இல் ஈரோஸ் தொடர்பாக புலிகள் இயக்கம் ஒரு நடவடிக்கை மேற்கொண்டது. அது வெளியே தெரியாது.

ஈரோசும் அதைப்பற்றி வெளியே சொல்லவேயில்லை.

அதனை அடுத்தவாரம் பார்க்கலாம்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# யாழில் வெடித்த குண்டு! அரசியல் தீர்வில்லாமல் சாத்தியமாகாத புனரமைப்பு!

அலசுவது- இராஜதந்திரி

யாழ்ப்பாண நகரத்தின் மையத்தில் இடம்பெற்ற பாரிய குண்டுத்தாக்குதலில், அந்த நகரத்தின் பொறுப்பதிகாரியாகவிருந்த மேஜர் ஜெனரல் ஆனந்த ஹமன்கொட உட்பட 21 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் புனரமைப்பு நடவடிக்கைகளும் கடந்த வாரங்களில் முடுக்கிவிடப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணக்குடாநாட்டை முழுமையாகக் கட்டுப்படுத்தும் அதேசமயம் எல்.ரி.ரி.ஈ.யினருக்கெதிராக இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியவர்களாகவும் ஆனால் எல்.ரி.ரி.ஈ.யினர் அரசின் சிவில் நிர்வாகத்தை வடக்கே அனுமதிக்கப்போவதில்லை என்று பகிரங்கமாகவே சூளுரைத்துள்ளனர்.

இக்கட்டத்தில் உறுதியாக புனரமைப்புப் பணிகளை முன்னெடுக்க முடியுமென்று எதிர்பார்க்க முடியாது.

நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மயிரிழையில் உயிர்தப்பியுள்ளார்.

இத்தாக்குதலில் மற்றுமிரு முக்கியஸ்தர்களும் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் யாழ்ப்பாண புனரமைப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான வதிவிட முகாமையாளர் காலைல் டயஸ் மற்றயவர் இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபன தலைவர் ஆர்.கொடமுன ஆவர்.

இவர்கள்தவிர படையினர், பொதுமக்கள் என்று மொத்தம் 21 பேர் யாழ் நகரக் குண்டுத்தாக்குதலில் உயிரிழந்துள்ளனர்.

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையையடுத்து யாழ்ப்பாணக் குடாநாட்டை பூரண கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்துள்ளதாக இராணுவம் அறிவித்தபின்னர் அங்கு நடத்தப்பட்ட மோசமான பெருந்தாக்குதலாகவே கடந்த வாரத்தாக்குதல் விளங்கியிருந்தது.

இத்தாக்குதலின்மூலம் எல்.ரி.ரி.ஈ.யினரது ஊடுருவல்கள் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றிருப்பது புலனாகியுள்ளது. அத்துடன் அரசின் சிவில் நிர்வாக நடவடிக்கைகளுக்கும் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டிருப்பதை அறியமுடிகின்றது.

இருவாரங்களுக்குமுன்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது 'விடுதலைப்புலிகள்' என்ற பத்திரிகையில் யாழ்ப்பாணக் குடாநாட்டினுள் தமது கெரில்லாக்கள் ஊடுருவியிருப்பதாக அறிவித்திருந்தனர்.

ஒரு பெரும் மரபுவழிப் படையெடுப்புக்கு முகங்கொடுக்கமுடியாத நிலையில் இழப்புக்களைத் தவிர்க்கத் தாம் பின் வாங்கியதாகவும், ஆனால் கெரில்லா யுத்த தந்திரங்களை வடக்கே தாம் மேற்கொள்ளப்போவதாகவும், இந்த கெரில்லாப் போர் முறை விரிவுபடுத்தப்படுமெனவும் எல்.ரி.ரி.ஈ.யினர் தமது பத்திரிகை மூலமாகத் தெரிவித்திருந்தனர்.

எனவே யாழ் நகரின் மையத்தில் இடம்பெற்றுள்ள தாக்குதல் எல்.ரி.ரி.ஈ.யினர் அறிவித்திருந்ததை நிரூபணமாக்கியுள்ளது.

அரசபடையினரைப் பொறுத்தவரை வடக்கே காலூன்றுவதற்கு மேலும் படைபலம் தேவைப்படுகின்றதானதொரு நிலையே காணப்படுகின்றது.

சுமார் 50 ஆயிரம் வரையிலான துருப்புக்களே யாழ் குடாநாட்டில் தற்போது நிலை கொண்டுள்ளனர். முழு அளவில் யாழ்ப்பாணத்தை தம்வசப்படுத்த மேலும் பல்லாயிரக் கணக்கான படையினர் தேவைப் படுகின்றனர் எனக்கூறி ஆட்திரட்டும் படையினர் காணப்படுகின்றனர்.

யாழ்ப்பாணக்குடாநாட்டில் படையினரது நடமாட்டம் விரிவடைந்துள்ளது என்பது மட்டும் உண்மை. ஆனால் வடக்கு-கிழக்கில் எல்.ரி.ரி.ஈ.யினரை முழு அளவில் பலவீனமாக்குவதற்கு படையினர் மேலும் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளனர்.

வடக்கே தமது கெரில்லாத் தாக்குதல்களை மும்முரமாக்கியுள்ளதாக எல்.ரி.ரி.ஈ.யினர் அறிவித்துள்ள அதே சமயம், கிழக்கிலும் கெரில்லாத் தாக்குதல்களைத் தாம் தீவிரப்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

கிழக்கில் கெரில்லாத் தாக்குதல்களுக்குப் பொறுப்பாக எல்.ரி.ரி.ஈ.யினரது சிரேஷ்ட தளபதி சொர்ணம் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் யாழ்ப்பாணக்குடாநாட்டில் நிலை கொண்டிருப்பதன் மூலம் வடக்கு-கிழக்கில் தமது கரங்கள் வலுப்பெற்றிருப்பதாக படையினர் கருதினால், அதுவோர் தப்புக்கணக்காகவே இருக்கும்.

தலைநகரான கொழும்பில் முப்படைகளும் உஷார் படுத்தப்பட்ட நிலையிலேயே ஊடுருவல்களை மேற்கொண்டு பலமுக்கிய இலக்குகளை எல்.ரி.ரி.ஈ.யினர் தாக்கியுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து 250 மைல்களுக்கப்பால் இருக்கின்ற கொழும்பிற்குள் ஊடுருவல்களை எல்.ரி.ரி.ஈ.யினரால் மேற்கொள்ள முடியுமானால், ஒருகாலத்தில் தமது கட்டுப்பாட்டின் கீழ் இருந்த யாழ்குடாநாட்டுக்குள் ஊடுருவுவதென்பது எல்.ரி.ரி.ஈ.யினருக்கு அத்துப்படியானதொன்றாகவே இருக்கும்.

வடக்கே புனரமைப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தியிருப்பதாக அரசு அறிவித்து வருகின்றது. அரசின் கட்டுப்பாட்டில் உள்ள தொடர்பு சாதனங்கள் இடையறாது யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் புனர்நிர்மாணப்பணிகள் குறித்துப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றன.

ஜனாதிபதி சந்திரிகாகூட இருவாரங்களுக்கு முன்னர் தமது செயலகத்தில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள், நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து யாழ்ப்பாணத்தின் புனரமைப்புக்கு நிதிஉதவி வழங்கும்படி கோரிக்கை விடுத்திருந்தார்.

பலகோடி ரூபாய்கள் யாழ்ப்பாணத்தின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

புனரமைப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் மீதே 'புலிப்பாய்ச்சல்' இடம்பெற்றுள்ளது. ஆனால் அதிர்ஷ்டவசமாக அவர் அப்பாய்ச்சலினால் ஏற்பட்ட சிறு சீறல்களுடன் தப்பியுள்ளார்.

'சுவர் இருந்தால் மட்டுமே சித்திரம் வரையலாம்' என்றொரு பழமொழி



## சுவர் இருந்தால்மட்டுமே சித்திரம் வரையலாம்

தமிழில் உண்டு.

வடக்கு-கிழக்கில் முற்று முழுதான அமைதி நிலவினால் மட்டுமே அங்கு புனர்வாழ்வு- புனர்நிர்மாணப்பணிகளை மேற்கொள்ளமுடியும்.

மக்களுக்கு உணவை வழங்குவதும், கட்டிடங்களைக் கட்டிக் கொடுப்பதும் மட்டும் புனரமைப்பாக இருந்துவிடாது.

அரசியல் ரீதியாக எட்டப்படும் ஒரு நிரந்தரத் தீர்வின் அடிப்படையிலேயே புனர்வாழ்வு- புனரமைப்புப் பணிகளை முன்னெடுக்கமுடியும்.

யாழ்ப்பாணத்தில் 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கையயடுத்து கிடைத்த வெற்றிகுறித்து அரசு திருப்தியடையலாம். ஆனால் அவ்வெற்றி ஒரு முற்றுமுழுதானதல்ல.

இதனையே சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்த முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெரி டி சில்வாகூடக் கூறியிருந்தார்.

வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கான எந்தவொரு தீர்வும் அரசியல் ரீதியாகவே இருக்கவேண்டுமென்று அவர் திட்டவட்டமாகக் கூறியிருந்தார்.

ஆனால் ஆட்சியாளர்கள் அரசியல் தீர்வுகுறித்து மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் கேலிக்கூத்தானதாகவும், வலுவற்றதாகவுமே இருக்கின்றன.

தமிழ் அரசியல் கட்சிகள் ஜனாதிபதி, மற்றும் தீர்வு முயற்சிகளுக்குப் பொறுப்பான அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோரைக் கடந்த வாரங்களில் சந்தித்தனர்.

அப்போது "ஐ.தே.க.யினர் ஒற்றையாட்சியையே ஆதரிக்கின்றனர்; அவர்களுடன் போய்ப்பேசி தீர்வு முயற்சிகளுக்குரிய சாதகமானதொரு நிலையை ஏற்படுத்துங்கள்" என்று ஜனாதிபதியும், அமைச்சர் பீரிஸும் தமிழ்க்கட்சிகளிடம் கேட்டிருந்தனர்.

இதனையடுத்து தமிழ் அரசியல் கட்சிகள் ஐக்கிய தேசியக் கட்சித்தலைவரையும், அவரது ஏனைய முக்கிய உறுப்பினர்களையும் சந்தித்தனர்.

அப்போது ஐ.தே.க.யினர், ஜனாதிபதி சந்திரிகாவும் அவரது சகாக்களும் அரசியல் தீர்வில் ஆர்வமாக இல்லை. தாம் கூறியது வேறு; அரசு அர்த்தம் கொள்வது வேறு என்றெல்லாம் தமிழ் அரசியல் கட்சிகளிடம் கூறியிருந்தனர்.

இந்நிலையில் இரு அணிகளுக்கிடையே உதைபடும் ஒரு பந்தைப்போன்ற நிலையிலேயே தமிழ் அரசியல் கட்சிகள் இருக்கின்றன.

ஆட்சியாளர்களும், எதிர்க்கட்சியினரும் வடக்கு-கிழக்குப் பிரச்சினையை தமது அரசியல் மேலாதிக்கத்தைக் கட்டி எழுப்பும் வரையில் கையாளுகின்றனவே தவிர, எவ்வகையிலும் வடக்கு-கிழக்குப் பிரச்சினையின் தாக்கத்தை அறிந்து அதனை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்பதில் அவர்கள் ஆர்வமாக இல்லை.

'நீறு பூத்த நெருப்பாக' யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலை காணப்படும்போது, அங்கு புனரமைப்புப் பணிகளை முன்னெடுப்பதே மடமையான ஒரு நடவடிக்கையாகும்.

ஆயுதங்களைக் கைவிட்டு அரசியல் நீரோட்டத்தில் இணைந்துள்ள தமிழ் அமைப்புக்களை நையாண்டி செய்யும் தோரணையில் ஆளுங்கட்சியினரும், எதிர்க்கட்சியினரும் நடந்து கொள்கின்றனர்.

இந்த அமைப்புக்களை அங்குமிங்குமாக அலைக்கழித்து, ஓர் அரைகுறைத் தீர்வை ஏற்கச் செய்யலாம் என்று ஆட்சியாளர்களும், வேறு பேரினவாத சக்திகளும் கருதுவது போலவே தோன்றுகின்றது.

இந்நிலையில் ஒரு முழுமையான ஆயுதப்போராட்ட அமைப்பாகவும், 'அடிக்குமேல் அடியடித்தால் மட்டுமே அம்மியும் நகரும்' என்ற நிலைப்பாட்டில் உள்ள எல்.ரி.ரி.ஈ.யினர் ஆயுதங்களைக் கைவிட்டு அரசியல் நீரோட்டத்தில் இறங்குவார்கள் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

அரசியல் நீரோட்டம் என்பது தெளிந்த நீரோடையாக இருக்கவேண்டும், ஆனால் தற்போதைய அரசியல் நிலபரம் தெளிவுற இருப்பதற்குப்பதிலாக சேறு நிரம்பிய சாக்கடையாகவே இருக்கின்றது.

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு இறுதியும், முடிவுமாக அரசியல் தீர்வே காணப்பட வேண்டுமென்பதே முடிந்த முடிவு.

இதற்கு சேறும், சகதியுமாகவுள்ள அரசியல் நீரோடை சுத்தமாக்கப்பட வேண்டும். அரசியலாளரிடமுள்ள கபடத்தனங்கள், போலித்தனங்கள், கையாலாகாத்தனங்கள் என்பன முற்றிலுமாக அகற்றப்படவேண்டும்.

இத்தகைய சூழ்நிலையிலேயே அரசியல் தீர்வைக்காண்பதற்கான தெளிவான வரையறைகளை உருவாக்க முடியும்.

எல்.ரி.ரி.ஈ.யினர் பேச்சுவார்த்தைகளை நிராகரிக்கவோ அல்லது போர்நிறுத்தமொன்றைத் தட்டிக்கழிக்கவோ இல்லை.

அண்மையில் அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற தமது மகாநாடு ஒன்றிலும் பேச்சுவார்த்தை, போர்நிறுத்தம் என்பவற்றுக்குத் தாம் தயாராக இருப்பதாக எல்.ரி.ரி.ஈ.யினர் குறிப்பிட்டிருந்தனர்.

இந்நிலையில் வடக்கே புனரமைப்பு, புனர்வாழ்வு என்ற நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதில் ஆர்வங்காட்டுவதைவிட அரசியல் நடவடிக்கைகளுக்கே ஆட்சியாளர்கள் முக்கியத்துவமளிக்க வேண்டும்.

உறுதியான அரசியல் தீர்வு என்ற பெருஞ்சுவரிலேயே புனரமைப்பு-புனர்நிர்மாணம் என்ற அழகிய சித்திரங்களைத் தீட்டமுடியும்.

## இளைஞர் கலைஞரின் 70 பதில்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி)



**51. உங்கள் சட்டைப் பையில் எப்போதும் நீங்கள் வைத்திருப்பது என்ன?**
*தாய், தந்தை, அண்ணா மூவர் படங்கள்.*

**52. இன்னொரு பிறவி இருந்தால் யாராக ஆசை?**
*இல்லாதது பற்றி எதற்கு ஆசை?*

**53. நீங்கள் பசிக்கு உண்பவரா? ருசிக்கு உண்பவரா?**
*பசிக்கு.*

**54. உங்களுக்கு மிகப் பிடித்தமான விளையாட்டு வீரர் யார்?**
*அசாருதீன்.*

**55. உங்கள் 'முதுமையில் இளமை' ரகசியம் எது என்று ஒரே வரியில் சொல்வீர்களா?**
*எதையும் தாங்கும் இதயம்.*

**56. உங்களால் சகித்துக்கொள்ள முடியாதது எது?**
*துரோகம்.*

**57. மின்சாரம் இல்லை. தூக்கமும் வரவில்லை. அப்படிப்பட்ட இரவில் என்ன செய்வீர்கள்?**
*வியர்வை-விழிப்பு-சிந்தனை.*

**58. நாடக மேடையில் நீங்கள் பேசிய முதல் உரையாடல் எது?**
*நினைவு இல்லை.*

**59. நீங்கள் அதிக நேரம் பேசிய பொதுக் கூட்டம் எது?**
*எத்தனையோ கூட்டங்கள்.*

**60. இரண்டாயிரம் ஆண்டில் தமிழகம் எப்படி இருக்கும்?**
*வெளிச்சம் வரும் என்று நினைக்கிறேன்.*

**61. உங்களிடம் இருந்து அரசியலைப் பிரித்துவிட்டால் இன்னொரு ஆளுமை என்னவாக இருக்கும்?**
*சமுதாய மேன்மைக்கு கலை இலக்கியமாக இருக்கும்.*

**62. உங்களை மிகவும் கவர்ந்த இலக்கியப் பாத்திரம் எது?**
*மணிமேகலை கையில் இருந்ததாகக் கூறப்படும் அட்சய பாத்திரம்.*

**63. நீங்கள் அடிக்கடி மேற்கோள் காட்டிய புராணக்கதை எது?**
*மகாபாரதம்.*

**64. நீங்களே சமைத்துச் சாப்பிட்ட அனுபவம் உண்டா?**
*இல்லை.*

**65. முதல் தடவை கைதாகி பொலிஸ்காரர்கள் பின்னால் நடந்தபோது என்ன நினைத்தீர்கள்?**
*பொதுவாழ்வில் அடி எடுத்து வைத்ததற்காக 'புண்ணியம்' பெற்றதாக நினைத்தேன்.*

**66. தண்டவாளத்தில் தலை வைத்துப் படுத்தபோது யாரை நினைத்தீர்கள்?**
*தன்மடியில் என் தலையை வைத்துப் பாலூட்டி சீராட்டி வளர்த்த என் தாயை!*

**67. குறளையும் விடக்குறைந்த அளவில்- ஒரு வரியில் ஒரு கவிதை எழுத முடியுமா?**
*குறளை விட சிறந்த முறையில் கவிதை எழுத முடியாதே தவிர; குறைந்த அளவில் எத்தனையோ கவிதை எழுதலாமே!*

**68. பாளையங்கோட்டை சிறையில்-அந்தத் தனிமைச் சிறையில் அனுபவத்தில் மறக்க முடியாதது எது?**
*அண்ணா என்னைச் சந்தித்து கண் கலங்கியது. அது பற்றி அன்று மாலை நடந்த நெல்லைக் கூட்டத்தில் பேசியது.*

**69. எந்தச் செயலைக் கண்டால் 'நெஞ்சு பொறுக்குதில்லையே' என்று குமுறுவீர்கள்?**
*தன்மானப் பாசறையில் பயின்றவர்கள், பதவியில் இருப்போரிடம் பல் இளித்துப் பாதம் தொழுவதை....*

**70. தமிழ் மக்களைப் பற்றி.....?**
*இப்போது விழித்து எழத் தொடங்கி விட்டார்கள்....*

(நன்றி-ஈழகேசரி)



படிப்பகம்

www.padippakam.com

## உலகைக் கலக்கிய மனித வெடிகுண்டு

தருவது ரசிகன்

# கார்லோஸ் கார்லோஸ்தான் 18

கார்லோஸ் இறந்துவிட்டதாக சொன்னது அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. கார்லோஸ் போதைக் கடத்தல் சாம்ராச்சியத்தின் பாதுகாவலனாக மாறினான். அரபு ஷேக் போல வேடமிட்டு சிரியாவில் டமாஸ்கஸில் ஒரு மாளிகையில் வாழ்ந்தான். கார்லோஸின் பெயரில் பல போலி கார்லோஸ்கள் உலவினார்கள். அவர்களில் ஒருவன் கார்லோஸ் விரித்த வலையில் சிக்கினான்.

"நீ கார்லோஸாக இருக்கவே முடியாது.

ஏன் தெரியுமா? நான்தான் கார்லோஸ்!" என்று அரபு ஷேக்போல மாறியிருந்த கார்லோஸ் கூறியதும், தன்னைக் கார்லோஸ் என்று கூறிக் கொண்டவன் அதிர்ந்து போனான்.

கையில் பிஸ்டலோடு இருக்கையை விட்டு எழுந்த கார்லோஸ் கொஞ்சம் புன்னகைத்தான். சட்டென்று புன்னகை மறைந்து முகத்தில் ஒரு கொடூரம் தெரிந்தது.

போலி ஆசாமி மண்டியிட்டு கைகள் இரண்டையும் தலைக்கு மேலே உயர்த்திக் கொண்டு, கார்லோஸின் முகபாவம் மாறுவதைக் கண்டு பயத்தில் உறைந்து போயிருந்தான்.

"நீயெல்லாம் கார்லோஸ்? அதெப்படி நான்தான் கார்லோஸ், எங்கே திருப்பிச் சொல்லு?"

கார்லோஸ் உரத்து நகைத்தான். போலி ஆசாமிக்கு உடம்பு முழுவதும் வெடவெடத்தது.

"இங்கே உன்னை வரவைத்ததும் நான்தான். இப்போது உன்னை அனுப்பி வைக்கப்போவதும் நான்தான்! எங்கே ஒரு தடவை சொல்லு, கார்லோஸ் கார்லோஸ்தான். சொல்லு. சொல்லடா!"

ஆசாமி திணறி.. "கா..கார்.." என்று திக்கினான். கார்லோஸ் நகைத்து, "அதென்ன கா..கா... இந்தா" டாட்டா! விசையை அழுத்தினான்.

சைலன்சர் பொருத்தப்பட்ட பிஸ்டல்; சத்தமில்லாமல் செத்துப் போனான் போலி ஆசாமி.

ஃபிரான்ஸ் சிறையில் இருந்த மகதலேனா தண்டனைக்காலம் முடிந்து விடுதலையானாள்.

நேராக டமாஸ்கஸ் வந்து கார்லோஸுடன் சேர்ந்து கொண்டாள்.

கார்லோஸை கட்டியணைத்தபடி தேம்பித் தேம்பி அழுதாள். முதுகை வருடினான், தலையை ஆறுதலாய் தடவினான். முதுகை வருடிய கரம் பின்னழகுகளில் இறங்கி நின்றது. அழுத்தினான். மகதலேனா தன் இதழ்களை உயர்த்தி 'தா' என்றாள் தாபமாக. எத்தனை வருடத் தாபம். நீண்டகால தாகம். சூடாக இருந்தாள். வேகமாக அவனை நாடினாள். கார்லோஸின் விஷமத்தால் கொஞ்சம் சிணுங்கி அவன் உதட்டைக் கடித்தாள்.

பிரிந்திருந்ததுக்கு கணக்குத் தீர்க்கும் வேகம். கட்டிலறை திறந்தது. மகதலேனாவை கைகளில் ஏந்திக்கொண்டு உள்ளே புகுந்தான் கார்லோஸ்.

கார்லோஸின் பாதுகாப்புத் தேவை என்று அவனைத் தேடி வந்தார்கள் அரபு ஷேக்குகள். உலகின் பிரபல கோடீஸ்வரர்கள்.

மாதம் ஒரு தொகை அவர்களிடம் இருந்து கார்லோஸுக்கு கிடைத்துக் கொண்டே இருந்தது.

கார்லோஸின் நட்பைச் சொல்லியே தமது எதிரிகளை மிரட்டிப் பணியவைத்தார்கள் பல கோடீஸ்வர தொழில் அதிபர்கள்- எண்ணெய் முதலாளிகள்.

"கார்லோஸ் நீ விலகவேண்டும். உன் பெயரைச் சொல்லி மிரட்டுகிறான். நீ தலையிடாதே! உனக்கு எவ்வளவு வேண்டும். அவன் தந்ததைவிட ஐந்து மடங்கு.. யெஸ்.. ஐந்து மடங்கு அதிகமாகத் தருகிறேன். இந்தப் பிரச்சனையில் இருந்து விலகிவிடு."

பேரம் பேசிய தொழிலதிபரை முறைத்தான் கார்லோஸ். "கார்லோஸ் கெட்டவனா, நல்லவனா என்று கேட்டால் அகில உலகமும் ஒட்டுமொத்தமான குரலில் கெட்டவன் என்றுதான் சொல்லும். என் பாதை அப்படி! ஆனால் இது நானாக விரும்பிய பாதையல்ல; நான் தள்ளப்பட்ட பாதை! ஆனாலும் ஒன்று, செல்வது எந்தப் பாதையாக இருந்தாலும் அதிலும் ஒரு கொள்கை வேண்டும். கார்லோஸ் கொலை செய்வான்; குண்டுவைப்பான்; கூட இருந்து குழி பறிக்கமாட்டான்! கார்லோஸ் தன்னை நம்பிவருபவர்களுக்கு உயிரையும் கொடுப்பான்; உயிரையும் எடுப்பான், நம்பிக்கைத் துரோகம் மட்டும் செய்யமாட்டான்! நான் குவிக்காத பிணமுமில்லை, நான் காணாத பணமுமில்லை. புரிகிறதா? ஆசை காட்டி என்னை மோசம் செய்யவைக்க நினைத்தாய் பார், உன்னைக் கொல்லலாம் தப்பேயில்லை. என்ன சொல்கிறாய்?"

வந்தவர் கார்லோஸின் காலில் விழுந்தார். உயிர் பிச்சை கேட்டார். கார்லோஸ் யோசித்தான். பிஸ்டலை எடுத்து உதட்டில் வைத்து முத்தமிட்டு விட்டு, மீண்டும் இடுப்பில் செருகிக் கொண்டு, "பிழைத்துப் போ!" என்று அனுமதித்தான்.

உள்ளேயிருந்து அனைத்தையும் கவனித்துக் கொண்டிருந்த மகதலேனா விசும்பினாள். கார்லோஸ் அவளை நெருங்கி, "ஏன் அழுகிறாய்?" என்றான்.

"போதும், எல்லாம் போதும். விலகி விடுவோம். இந்தப்பாதையிலிருந்து விலகி, எங்களை யாரென்று தெரியாத எங்கோ ஒரு மூலையில் சென்று வாழுவோம். நமக்காக இல்லாவிட்டாலும் நமது குழந்தைக்காக!" என்றாள் மகதலேனா.

"என்ன...?"

"நான் கர்ப்பமாக இருக்கிறேன்! உன் குழந்தை... குட்டி கார்லோஸ் என் வயிற்றில் உதைக்கிறான் அல்லது உதைக்கிறாள்."

சிரியன் எயார் லைன்ஸ் போயிங் 707 விமானம் லிபிய தலைநகரான திரிப்பொலியில் தரை இறங்கியது.

விமானத்தில் இருந்து இறங்கிய பயணிகளோடு, யேமனிய இராஜதந்திரி நாகி அபூபக்கரும், அவர் மனைவி, மகள், மற்றும் இரண்டு பணியாளர்களும் இறங்கினார்கள்.

விமான நிலைய அதிகாரிகளுக்கு அவர்கள்மீது சந்தேகம் ஏற்பட்டது.

நாகி அபூபக்கரின் சூட்கேஸை திறந்தனர். துணிகளுக்கு நடுவே இரண்டு புத்தம் புதிய பிஸ்டல்களும், இரண்டு கிரனேட்டுக்களும் இருந்தன.

அதுதவிர இலட்சக்கணக்கான டொலர் நோட்டுக்கள், நகைகள் என்பனவும் காணப்பட்டன.

நாகி அபூபக்கர் அசரவில்லை. "நாங்கள் பாலஸ்தீனியர்கள். சிரியாவில் இருந்து வெளியேறுமாறு கேட்கப்பட்டோம். லிபியா எங்களுக்கு அடைக்கலம் தரவேண்டும்," என்றார்.

விமான நிலையத்தில் வைத்தே தொடர்ந்து விசாரணை நடந்தது. வீடியோ படங்களும் எடுக்கப்பட்டன. முடிவில், "மன்னிக்கவும். உங்களை ஏற்க முடியாது." என்று விமானம் ஒன்றில் ஏற்றி சிரியாவுக்கே திருப்பி அனுப்பினார்கள்.



கார்லோஸ்

சிரியாவில் டமாஸ்கஸ் விமான நிலையத்தில் அவர்களை கைதுசெய்வதற்குப் பதிலாக அதிகாரிகள் வரவேற்றனர்.

லிபியாவில் நாகி அபூபக்கர் விசாரிக்கப்பட்ட காட்சியை வீடியோவில் பார்த்த உயர் அதிகாரிகளுக்கு அதிர்ச்சி. எடுக்கப்பட்ட படங்களை பல கோணங்களில் பார்த்தனர். இறுதியாக உறுதியாகச் சொல்லினர்:

"நாகி அபூபக்கர் என்ற பெயரில் வந்து சென்றவன் கார்லோஸ்தான். துளியும் சந்தேகமேயில்லை."



அதே நேரம் கார்லோஸ குழுவினரை திருப்பி ஏற்றிச் சென்ற லிபிய விமானம் சிரியாவில் எரிந்துகொண்டிருந்தது. சிரியா அரசாங்கத்தால் தடயமே இல்லாமல் அழிக்கப்பட்டது.

"கார்லோஸ் இங்கே வரவேயில்லை; யேமன் நாட்டுக்கு பறந்திருக்கலாம்" என்று அறிவித்தது சிரியா.

கார்லோஸ் உயிரோடு இருக்கிறான் என்று தெரிந்ததும், கார்லோஸை தேடி வலை விரித்தது சி.ஐ.ஏ.

கார்லோஸின் தந்தையை நோயாளியாக்கி, அவரைப் பார்க்க வரும் கார்லோஸை மடக்கும் திட்டம் முன்னரே தோல்வியடைந்திருந்தது.

ஆயினும் கார்லோஸின் தந்தையின் தொலைபேசி தொடர்ந்து கண்காணிக்கப்பட்டது. அதற்கு பயனும் கிடைத்தது.

வெனிசுலா நாட்டில் இருந்த தனது தந்தையுடன் கார்லோஸ் தானே நேரடியாகப் போனில் பேசினான்.

"அப்பா! உன்னைப் பார்க்கவேண்டும் போல இருக்கிறது." வீட்டில் சந்திப்பது ஆபத்து என்பதால் வெளியே ஒரு இடம் சொல்லி அங்கு வருமாறு கூறினான்.

அவன் கூறிய இடத்துக்கு கார்லோஸின் தந்தை செல்ல முன்னரே சென்று விட்டனர் சி.ஐ.ஏ.ஒற்றர்கள்.

"கார்லோஸ் இன்று தப்பவே முடியாது" என்று அவர்களுக்கு மகா நம்பிக்கை.

ஆனால் குறிப்பிட்ட இடத்துக்கு கார்லோஸ் மட்டுமல்ல, அவனது தந்தையும் வரவில்லை.

குள்ளநரியல்லவா கார்லோஸ்? தந்தையை இடைவழியிலேயே மடக்கி வேறு இடத்துக்கு அழைத்துச் சென்று சந்தித்துப் பேசிவிட்டு அனுப்பிவிட்டான்.

1990 ஆகஸ்ட் 14ம் திகதி ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் பக்தாத் நகரில் ஒரு மாநாடு நடத்தினார். 'உலகப் பயங்கரவாதிகள் மாநாடு' என்று அதனை வர்ணித்த மேற்குலகப் பத்திரிகைகள், அந்த மாநாட்டில் கார்லோஸும் கலந்துகொண்டதாக செய்திகளை வெளியிட்டன.

கார்லோஸை உயிருடன் பிடித்துத்தந்தால் 10 ஆயிரம் ஸ்டர்லிங் பவுண் சன்மானம் என்று 1992 மார்ச் மாதம், அறிவித்தது பிரிட்டிஷ் அரசாங்கம்.

ஃபிரான்ஸ் நாட்டில் கார்லோஸ் இல்லாமலேயே கார்லோஸ் மீதான குற்றச் சாட்டுக்களை 1992 ஜூன் மாதம் ஃபிரான்ஸ் நீதிமன்றம் விசாரித்தது.

ஃபிரான்ஸ் நாட்டில் கார்லோஸ் செய்த கொலைகளுக்காக ஆயுள் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது ஃபிரான்ஸ் நீதிமன்றம்.

கார்லோஸ் தொடர்ந்து தேடப்பட்டான். அதேநேரம் கார்லோஸுக்கு உதவி செய்வதாக கூறிய பல நாடுகள் உலகக் கண்டனத்துக்குப் பயந்து கார்லோஸைக் கைவிட்டன.

கிட்டத்தட்ட 20 வருடங்கள் உலகை கலக்கும் போராளியாக, பயங்கரவாதியாகப் பெற்ற பிரபலம் சலிப்பாக இருந்தது.

1994ல் ஒரு நாள்-மகதலேனாவிடமும், தன் மகளிடமும் சொல்லிவிட்டு புறப்பட்டான்.

"திரும்பிவரநாளாகும், என்னைத் தேட வேண்டாம்."

அவன் சொன்னவிதம் மகதலோனாவுக்கு கவலைதருவதாக இருந்தது. கண் கலங்கினாள்.

மகதலேனாவையும், மகளையும் அணைத்து நெற்றியில் முத்தமிட்டுவிட்டு புறப்படத் தயாரானான்.

"போய்த்தான் ஆக வேண்டுமா?" என்றாள் மகதலேனா.

"சிங்கம் ஓரிடத்தில் இருக்குமா சொல்லு! பயப்படாதே, ஒன்றும் ஆகாது. திரும்பிவந்து விடுவேன்."

"எல்லோரும்தான் உங்களை கைவிட்டு விட்டார்களே. அந்தக் கவலையில் நீங்கள்.."

இடைமறித்து கார்லோஸ் சொன்னான், "கவலையா? எனக்கா? சொந்த நலன் என்று வந்துவிட்டால் கடவுளைக் கூட கைவிடும் உலகம் இது! கார்லோஸை கைவிட்டதுதானா ஆச்சரியம்? நான் ஏன் கவலைப்பட வேண்டும்? ஏன்? கவலைப்பட வேண்டும்?" கேட்டு நிறுத்தி, பின் குரலை உயர்த்திச் சொன்னான்;

"கார்லோஸ் என்ற மனிதன் என்றோ ஒருநாள் சாகவேண்டியவன். இயற்கை விதியை மாற்றமுடியாது! ஆனால் கார்லோஸ் என்ற பெயர் என்றும் சாகாது. வரலாற்றிலிருந்து அந்தப் பெயரை தூக்க முடியாது!"

கார்லோஸ் சென்றுவிட்டான்.

மகதலேனா கண்ணீரில் நனைந்தாள்.

காத்திருந்தாள். காத்திருந்தாள்.....!

கார்லோஸ் வரவில்லை.

கார்லோஸ் கைதுசெய்யப்பட்டு, ஃபிரான்ஸ் சிறையில் வைக்கப்பட்டுள்ளான் என்ற செய்திதான் வந்தது.

**கார்லோஸ் இப்போதும்**
**உயிரோடு இருக்கிறான்.**
**ஃபிரான்ஸ் சிறையில் இருக்கிறான்.**
**கார்லோஸ் நல்லவனா-கெட்டவனா-**
**கெட்ட வல்லவனா?**
**நீங்களே தீர்மானியுங்கள்!**
**ஆனால் ஒன்று-**
**கார்லோஸ்-**
**தானாக உருவானவனில்லை.**
**உருவாக்கப்பட்டவன்.**

கார்லோஸ் கெட்டவன் என்றால்
அவனை உருவாக்கியவர்கள்...?
அவன் உருவாக
காரணமாக இருந்தவர்கள்....?
அவனை ஆயுதமாக பாவித்தவர்கள்....?

(முடிந்தது)

# ஒரு வித்தியாசத் திருமணம்

ஐஸ்லாந்துநாட்டில் ஒரு வித்தியாசத் திருமணம் நடந்துள்ளது. பெண்ணும், பெண்ணும் திருமணம் செய்துள்ளனர்.

ஐஸ்லாந்து நாட்டில் சமீபத்தில் ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆண்களை ஆண்களோ, பெண்களைப் பெண்களோ திருமணம் செய்து கொள்ளலாம் என்று அச் சட்டம் அனுமதி வழங்கியுள்ளது.

புதிய சட்டம் வந்ததையடுத்து இரண்டு பெண்கள் திருமணம் செய்து கொண்டுள்ளனர்.

ஐஸ்லாந்து நாட்டில் வசிப்பவர்களில் 90 சத வீதத்தினர் கிறிஸ்தவர்கள். ஒரே பாலாருக்குள் நடைபெறும் திருமணங்களுக்கு கிறிஸ்தவ ஆலயங்களில் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

ஒரே பாலருக்குள் திருமண உறவை அனுமதிப்பதா, வேண்டாமா என்று ஐஸ்லாந்து பாராளுமன்றத்தில் கடுமையான விவாதம் நடந்தது. அதன் பின்னர்தான் புதிய சட்டத்தை பாராளுமன்றம் அங்கீகரித்தது.



அன்னா சிக்ரிதுர் என்ற பெண்ணும், சோல்விக் மக்னியா என்ற பெண்ணும் தான் கடந்தமாதம் தமது திருமணத்தை கோலாகலமாக நடத்தியுள்ளனர்.

# சாள்ஸ்-டயானா திடீர் சந்திப்பு



பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ்-டயானா இருவரும் பிரிவு என்பது அந்தக் கடவுளே வந்தாலும் தடுக்கமுடியாத சமாச்சாரம்.

விவாகரத்துக்காக டயானாவுக்கு கொடுக்கவேண்டிய சொத்துக்கள் பற்றிய பேரம் நடந்து கொண்டிருக்கிறது. சாள்ஸ் தொடர்பாகவும், பிரிட்டிஷ் அரச குடும்பம் தொடர்பாகவும் தாறுமாறான விமர்சனங்களையும் தொடுத்திருந்தார் டயானா.

இந்த நிலையில் கடந்த மாதம் ஒரு பொது நிகழ்ச்சியில் இருவரும் நேரில் சந்தித்துக் கொண்டனர். விரோதம் காரணமாக முகத்தை திருப்பிக் கொள்வார்கள் என்று பார்த்தால், அதற்கு நேர்மாறாக இருவரும் கட்டியணைத்து கன்னத்தில் மாறி மாறி முத்தம் இட்டுக்கொண்டனர்.

சாள்ஸ், டயானா தம்பதியின் மகனான வில்லியம் படிக்கும் பாடசாலையின் பெற்றோர் தின விழாவில்தான் இந்த திடீர் திருப்பம் ஏற்பட்டது.

கட்டித்தழுவியதும், கன்னத்தில் முத்தம் கொடுத்ததும் சும்மா ஒரு நட்புக்காகத்தானாம். விழா முடிந்ததும் இருவரும் சொல்லிக்கொள்ளாமலேயே தனித்தனி காரில் ஏறி வெவ்வேறு திசைகளில் பறந்துவிட்டனர். விரோதத்தில் ஒரு மாற்றமும் இல்லை. என்ன, ஒரே குழப்பமாக இருக்கிறதா? அவர்கள் நாகரீகம் அப்படி!

# டென்னிஸில் கவர்ச்சி உடை

பாரிசில் நடைபெற்ற ஃபிரான்ஸ் ஓபன் டென்னிஸ் போட்டிகளை நேரிலும் மற்றும் தொலைக்காட்சிகளிலும் பார்த்துக்கொண்டிருந்தவர்களுக்கு அதிர்ச்சியோ அதிர்ச்சி. அதில் இன்ப அதிர்ச்சியும் அடக்கும்.

காரணம்; டென்னிஸ் வீராங்கனை மேரி பியர்ஸ் அணிந்து வந்திருந்த உடை.

ஃபிரான்ஸ் வீராங்கனையான மேரிபியர்ஸ் ஆடுகிறார் என்றாலே போட்டி விறு விறுப்பாக இருக்கிறதோ இல்லையோ அவர் போட்டிருக்கும் ஆடை ரசிகர்களை கொள்ளையிட்டு, தொலைக்காட்சி முன் கட்டிப்போட்டுவிடும். முடியலங்காரம், உடை அமைப்பு விஷயங்களில் கடும் கவனம் எடுத்துக் கொள்வார் மேரி பியர்ஸ்.

ஆனாலும் ஃபிரான்ஸ் ஓபன் டென்னிஸ் போட்டியில் ஒரு ஆடைப் புரட்சியே நடத்திவிட்டார் மேரி பியர்ஸ்.

வழக்கமாக டென்னிஸ் போட்டிகளில் விளையாடும் வீராங்கனைகள் வெள்ளை நிறத்திலோ அல்லது வண்ணத்திலோ டீஷர்ட், குட்டை பாவாடை அணிந்திருப்பர். ஆனால் மேரி பியர்ஸ் கறுப்பு நிறத்தில் தோளில் இருந்து தொடைவரை இணைக்கும் நிச்சல் உடைபோன்ற கவுணை அணிந்துகொண்டு வந்தார். முன்புறமும், பின்புறமும் பெரும் பகுதி தர்ம தரிசனம் கொடுத்துக்கொண்டிருந்தது. தலைமுடி கலைந்துவிடாமல் இருக்க கறுப்பு ரிப்பன் கட்டியிருந்தார்.

மேரி பியர்சின் உடைகுறித்து பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன.

ஆனால் மேரி பியர்ஸ் விமர்சனங்களை 'ப்பூ' என்று ஊதித்தள்ளி ஒதுக்குகிறார்.



"எனக்கு இந்த உடை பிடித்திருக்கிறது. இது மற்றவர்களின் கவனத்தை கவருகிறது என்பதை அறிவேன். எனக்கு இந்த உடை மிகவும் பொருத்தமாக இருக்கிறது." என்றுவிட்டார் மேரி பியர்ஸ்.

பார்வையாளர்களை கலங்கடித்த அளவுக்கு போட்டியில் திறமையைக் காட்டவில்லை. ஃபிரான்ஸ் ஓபனில் தோற்றுவிட்டார் மேரி பியர்ஸ்.



படிப்பகம்

www.padippakam.com



# யானைக்குத் தண்டனை

இந்தியாவில் உள்ள கேரள மாநிலத்தில் பாலக்காடு என்றொரு பகுதி இருக்கிறது. அதன் அருகே காட்டுப்பகுதி உண்டு. பாலக்காட்டில் உள்ள வாழைத்தோட்டங்களை காட்டில் இருந்துவரும் யானைகள் பதம்பார்த்துவிட்டுப் போய்விட்டன. தோட்டக்காரர் ஒருவருக்கு மகாகோபம். தனது தோட்டத்தைச் சுற்றி முள் கம்பி வேலி போட்டு, அதில் மின்சாரத்தை பாய்ச்சிவைத்தார்.

அன்று இரவு மலைபோல அசைந்து வந்து தன் தும்பிக்கையால் கம்பி வேலியைத் தொட்டது ஒரு யானை. மின்சாரம் வேலையைக் காட்டிவிட்டது. யானை தூக்கி எறியப்பட்டு உடல் கருகி, துடித்துத் துடித்துச் செத்துப் போனது.

விஷயம் அறிந்த வனத்துறை அதிகாரிகள் விரைந்துவந்து யானையின் உடலைக் கைப்பற்றி, பிரேத பரிசோதனை நடத்தினார்கள்.

யானையின் வயிற்றை அறுத்தவர்களுக்கு மின்சாரம் தீண்டாமலேயே ஷாக்! செத்தது கர்ப்பிணி யானை! வயிற்றுக்குள் குட்டி!

குட்டியைக் காப்பாற்றலாமா என்று டாக்டர்கள் பரிசோதித்தனர். தாய் இறந்தவுடன் குட்டியும் வயிற்றுக்குள் இறந்துவிட்டது என்று தெரியவந்தது.

யானையை மின்சாரம் பாய்ச்சிக் கொன்றவரை ஊரவர்கள் ஒரு பிடி பிடித்துவிட்டனர்.



## இது சாதலின் சின்னம்



↑ படத்தில் இருப்பது தாஜ்மஹால் என்று நீங்கள் நினைத்திருந்தால் தப்பு! இந்தியாவில் டில்லியில் உள்ள ஆக்ராவில் இருப்பதுதான் தாஜ்மஹால். ஷாஜகான் தனது காதலின் நினைவாக கட்டிய மாளிகை. மொகலய மன்னர் ஔரங்கசீப் தாஜ்மஹாலை பார்த்திருக்கிறார். தனது துணைவியார் திஸ்ராஸ் பானு இறந்தவுடன் தாஜ்மஹாலை அப்படியே உரித்துவைத்ததுபோல ஒரு கல்லறையைக் கட்டுவித்தார் ஔரங்கசீப். இந்தியாவில் அவுரங்கபாத்தில் இந்தக் கல்லறை இருக்கிறது. இது சாதலின் சின்னம்.

↓ கமரா ஒன்று இருக்கிறது. அதனை எப்படி இயக்கினால் படம் எடுக்கலாம் என்பது மட்டும் தெரிந்தால் போதும். புகைப்படக் கலைஞராகிவிடலாம் என்று நினைத்துவிடக்கூடாது. புதுமையான சிந்தனை. சுறு சுறுப்பான உற்சாகம் வேண்டும். எதையும் ஒரேவிதமாகச் செய்து கொண்டிருந்தால் சலிப்புத்தான் மிஞ்சும். அதையே வித்தியாசமாகச் செய்துபாருங்கள் களிப்புத்தான். அப்படித்தான் புகைப்படக் கலையும். படத்தைப் பாருங்கள். வேடிக்கையாகத் தெரிகிறதல்லவா. அட.. என்று மனதில் ஒரு கூவல் கேட்கிறதல்லவா. இந்தப் புகைப்படம் எடுத்தவரின் வித்தியாச சிந்தனையும், வித்தியாச கோணமான படப்பிடிப்பும்தான் உங்கள் வியப்புக்குக் காரணம். நீங்களும் முயலலாமே.


## என்ன சத்தம் இந்த நேரம்?



# தகவல் பெட்டி


↓ தற்போது விதம் விதமான நீர்மூழ்கிக் கப்பல்கள் வந்துவிட்டன. அணுசக்தியால் இயங்கும் முதலாவது நீர்மூழ்கிக் கப்பல் 1954 இல் உருவாக்கப்பட்டது. யு.எஸ்.எஸ். நாட்டிலஸ் என்பது இதன் பெயர். இந்த நீர்மூழ்கி வடதுருவப் பயணத்தை மேற்கொண்டு 6100 மைல்களை கடந்து வெற்றிகரமாக திரும்பியது. வெற்றிகரமாக என்று குறிப்பிடக்காரணம், இந்த நீர்மூழ்கி பயணம் செய்தது நீருக்கு அடியில் அல்ல, பனிக்கட்டிகளுக்கு அடியே பயணம் செய்தது. இங்கிலாந்தில் உள்ள டார்ஷெட் நகரில் உள்ள போர்லாண்ட் துறைமுகத்திற்கு இந்த நீர்மூழ்கி வந்த போது பயங்கரமான வரவேற்பு கிடைத்தது. அப்போது எடுத்த புகைப்படம்தான் இது.

## மேலே பனிக்கட்டி கீழே நீர்மூழ்கி



## யானை கொடுத்த தண்டனை

→ யாரோடும் வம்புக்கும் போவதில்லை, தேடிவரும் வம்பை விடுவதில்லை என்பது நம்மில் சிலரிடம் காணப்படும் குணம். அதே மாதிரித்தான் தமிழ்நாட்டில் மதுரையிலும் ஒரு யானையார். யாரோடும் வம்புக்கு போகமாட்டார். பாலகிருஷ்ணன் என்னும் ஒருவருக்கு போதையில் தலைகால் புரியவில்லை. யானையிடம் வம்புக்கு போனார். தும்பிக்கையில் கைவைத்து சேஷ்டை விட்டிருப்பார்போல் இருக்கிறது. வந்ததே யானைக்கு கோபம். ஒரே உதை. பந்து போல பறந்து விழுந்து பலகிருஷ்ணன் செத்துப் போனார். அக்காட்சிதான் படத்தில். குடித்துவிட்டால் தலைகால் புரியாதவர்கள் இந்தத் தண்டனையைப் பார்த்தாவது திருந்திக் கொள்ளலாம்.





படிப்பகம்

www.padippakam.com

## ※ சுவாதியின் அனுபவம் ※

### குவிகிறது பட வாய்ப்புக்கள்

'தேவா' படத்தின் மூலம் அறிமுகமானவர் சுவாதி. அதைத் தொடர்ந்து 'வான்மதி', 'வசந்த வாசல்' ஆகிய படங்களிலும் நடித்தார்.

'வான்மதி' படத்தில் நடிக்கும்போது அஜித்குமாருடன் காதலாகி, கசிந்துருகி கிசுகிசுக்களில் சிக்கித் திணறினார்.

ஹீரா, தேவயானி போன்ற நடிகைகளோடு அஜித்குமார் நெருக்கமாகியதால் சுவாதி மெள்ள விலகிக் கொண்டார். அஜித்-சுவாதி காதல் முறிந்தது என்று பத்திரிகைகள் கொட்டை எழுத்தில் செய்தி போட்டுக்கொண்டிருக்க, மீண்டும் இருவரும் நகமும் சதையுமாகிவிட்டனர்.

அது ஒரு புறமிருக்க, 'சிவன்' படத்தில் நெப்போலியனுடன் மழையில் கொட்ட கொட்ட நனைந்து படுநெருக்கமாக நடித்திருக்கிறார் சுவாதி. நெப்ஸ் கூட சுவாதியின் தாராள ஒத்துழைப்பால் கதிகலங்கிப் போனாராம்.

ஒரு ஹீரோவோடு மட்டும் இணைத்து பேசப்பட்டுக்கொண்டிருந்தால் ஏனைய ஹீரோக்கள் திரும்பியும் பார்க்கமாட்டார்கள் என்று அனுபவபூர்வமாக உணர்ந்துவிட்டார் சுவாதி. அதனால் தான் நடிக்கும் படங்களில் ஹீரோ யாராக இருந்தாலும் அவர்களை தாராள மனதுடன் அனுசரித்துப் போகிறார்.

இப்போது சுவாதியின் கையில் 'மை இந்தியா', விஸ்வநாத், 'சிவன்' என்று பல படங்கள்.

முரளி கதாநாயகனாக நடிக்கப்போகும் புதிய படம் 'புதிய சக்தி'. முரளிக்கு ஜோடி சுவாதி.

தெலுங்கிலும் கால்வைத்திருக்கிறார் சுவாதி. அவரை தெலுங்குக்கு அழைத்துச் சென்று அங்குள்ள நெளிவு, சுழிவுகளைச் சொல்லிக் கொடுத்திருப்பவர் ஒரு இயக்குநர். அந்த இயக்குநர்மீது இனியில்லை என்றளவுக்கு பிரியமாக இருக்கிறார் சுவாதி.



முகப்பில் வனிதா விஜயகுமார்

படம்:-மாணிக்கம்

ராமராஜன்

படம்:-நம்ம ஊரு ர




வில்லியம் போல்ட்வின்-சின்டி கிராபோட்
படம்: ஃபேயார் கேம்

## சுகன்யாவின் சோகம்

'இந்தியன்' படத்தில் சுகன்யாவின் நடிப்பு எடுபடவில்லை. கிழவியாக நடித் தொலைத்ததால் புதிய பட வாய்ப்புக்களும் நின்றுவிட்டன. முன்னாள் அமைச்சரோடு நெருக்கமாக இருந்ததும் பிரச்சனையாகிவிட்டது. தன் திறமையைக் காட்ட திட்ட மிட்டுள்ளார் சுகன்யா. மலையாளப் படவுலகப் பக்கம் சென்று இப்போது மலையாளப் படவுலகம் பற்றி புகழத் தொடங்கிவிட்டார். அதனால் சம்பளம் குறைவாக இருந்தாலும், "அங்கு திறமையைக் காட்ட வாய்ப்பிருக்கும். மரியாதையும் இருக்கும்" என்கிறார் சுகன்யா.


சந்தன கடத்தல் வீரப்பன் மீது தொடர்ந்த மானநஷ்ட வழக்கு என்னாச்சு? அதைக் கைவிட்டுவிட்டார். கிணறு வெட்ட பூதம் புறப்பட்டால் என்ன செய்வது என்று பயம்.

## பிறந்த நாள்

வில்லனாக அறிமுகமாகி கதாநாயகனாக உயர்ந்திருப்பவர் பிரகாஷ்ராஜ். 'கல்கி', 'சொர்ணமுகி' ஆகிய படங்களில் கதாநாயகனாக நடித்துக் கொண்டிருக்கிறார்.

புதிய படம் ஒன்றிலும் கதாநாயகனாக ஒப்பந்தமாகியுள்ளார். படத்தின் பெயர்; 'பிறந்தநாள்'. பிரகாஷ்ராஜின் ஜோடியாக நடிப்பவர் சங்கீதா. வடிவேலு, மணிவண்ணன், ஜோதிமீனா ஆகியோரும் நடிக்கின்றனர். இசை-தேவா. இயக்கம், பாக்யராஜின் சீடரான கே.பி.ராஜ்.



## திரை உலகில் 'மொடல்' அழகி

விளம்பரப் படங்களில் நடித்தே இலட்சணக்கணக்கான ரசிகர்களை சம்பாதித்த அழகி சன்டி கிராபோட்.

சுண்டியிழுக்கும் அந்த கட்டுடல் அழகிக்கு அழைப்பு விடுத்தது ஹொலிவூட் படவுலகம். கோடி ரூபாய் சம்பளம். மறுப்பாரா சிண்டி. 'ஒ.கே டபுள் ஒகே' என்றார். நடித்தும் முடித்துவிட்டார்.

வில்லியம் போல்ட்வின் கதாநாயகனாக நடிக்க, அவரது காதலியாகவும், சட்டத்தரணியாகவும் சிண்டி கிராபோட் நடித்துள்ள படம்- 'ஃபெயார் கேம்'

ஹொலிவூட்டில் திரையிடப்பட்டு வசூலுக்கு பாதகமில்லாமல் ஒடிக்கொண்டிருக்கிறது.

சட்டத்தரணியான சிண்டிக்கு ஏற்படும் ஆபத்துகளில் இருந்து அவரை மீட்கும் பொலிஸ்காரராக நடித்துள்ளார் வில்லியம் போல்ட்வின். ஆபத்துக்கள், சாகசங்கள் மத்தியில் காதல் மலர்கிறது.

காதல் காட்சிகளில் சிண்டி கிராபோட்டின் கவர்ச்சி ரசிகர்களைக் கவர்கிறது.

சிண்டியின் பிரவேசம் ஹொலிவூட் கவர்ச்சிக் கன்னிகள் பலரை கிடுகிடுக்க வைத்திருக்கிறது.

## முரளியின் படம்

முரளி-சுவாதி நடிக்கும் படம் 'புதிய சக்தி'. திரையரங்கில் வேலை செய்பவராக நடிக்கிறார் முரளி.

மணிவண்ணன், செந்தில், ஆர். சுந்தர்ராஜன், குமரிமுத்து, கிங்காங் ஆகியோரும் நடிக்கின்றனர்.

கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குகிறார் கே.எஸ்.தேவராஜ். இசை; தேவா. சண்டைப் பயிற்சி, தளபதி தினேஷ்.

## இளைஞர்களை இழுப்பேன் நக்மாவின் உறுதி

'காதலன்' படத்தில் ரசிகர்களை சூடாக்கி தனது மார்க்கெட்டையும் சூடாகவைத்திருந்தவர் நக்மா. அதன்பின்னர் பல படங்களில் இந்தக் கவர்ச்சி போதுமா இன்னும் கொஞ்சம் வேணுமா பாணியில் வெளுத்து வாங்கினார்.

நக்மாவின் கவர்ச்சியை பல கோணங்களிலும் கண்டு களித்த ரசிக மகாஜனங்கள், இப்போது ரம்பாவின் பக்கம் திரும்பி விட்டார்கள். 'லவ் பேர்ட்ஸ்' படமும் பப்படமாகியதால் நக்மாவின் மார்க்கெட்டில் சரிவு ஏற்பட்டுள்ளது.

நக்மா சரிவை மறுக்கிறார்.

"தமிழில் 'மேட்டுக்குடி', 'பெரிய தம்பி' உட்பட ஐந்து படங்களில் நடித்துவருகிறேன். மீண்டும் இளைஞர்களை கவர்ந்திழுக்கும் கவர்ச்சி என்னிடம் இருக்கிறது.

நான் ஓய்வதற்கு இன்னமும் காலம் இருக்கிறது. என்னுடைய இடத்தை யாராலும் பிடிக்கவே முடியாது" என்று சொல்லியிருக்கிறார் நக்மா.

## முத்துவுக்கு மரியாதை

ரஜினியின் 'முத்து' படம் அதே பெயரில் தெலுங்கில் மொழி மாற்றப்பட்டது அங்கும் சூப்பர் ஹிட். இப்போது இந்தியில் படுவேகமாக மொழிமாற்றப்பட்டு வருகிறது. அது போதாது என்று இந்தியில் 'முத்து' படத்தை சில மாற்றங்களுடன் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். அதில் அரவிந்தசாமி-ஜூகி சாவ்லா ஜோடியாக நடிக்கிறார்கள்.

மலையாளத்தில் வெளியாகி வெற்றி பெற்ற 'தேன்மாவின் கொம்பத்து' என்ற படத்தின் தழுவல்தான் 'முத்து.' மலையாளப் படத்திற்கு ஏனைய மொழிகளில் கிடைக்காத மவுசு 'முத்து' படத்திற்கு கிடைத்துள்ளது. எல்லாம் ரஜினியின் ராசி.

## மினி + சினி

* கமல் ... பணிபுரியும் 'விக் ... நடிக்கும் படத்திற்கு ச ... அமிதாப்புடன் விஜயசாந் ...

* சில வருடங்களுக்கு மு ... நின்று போன 'பத்ரகா ... பெயரில் திரைக்குக் கொ ...

* அரவிந்தசாமி-நக்மா ... மாற்றி வெளியிடவிருக்கி ... வைக்கப்பட்டுள்ளது.

* 'மகாபிரபு' ஏ. வெங்கடே ... நடிக்கும் விஜய், 'சிக்கல் ... பாடியுள்ளார்.

* விஜயசாந்தி இரட்டை ... படங்களில் நடித்து வரு ... தெலுங்குப் பெயர் என்ன ...

* ஹொலிவூட் இயக் ... பார்க்' படத்தைத் ... இப்போது 'த ... மொழிமாற் ...

* கே. பா ... கவிஞர் ... இயக்கி வரு ... என்பவர் ...

* 'தேடிவ ... அடுத்த ... என்று ... 'தேடிவந்த ...

* 'ரங்கீல ... தெலுங்கு ... ஊர்மிளா ... பட்டுக்கொ ...

* அன்ன ... 'புத்தம் பு ... படங்களி ... பதிவு செ ...



ராஜ்கிரண்-மன்சூர் அலிகான்
படம்: மாணிக்கம்



படிப்பகம்




## ஊர்மிளாவுக்கு உபசாரம்!

பம்பாயில் மன்னிக்கவும் மும்பாயில் திரையுலக நட்சத்திரங்கள் உட்பட பெரும் புள்ளிகள் மது அருந்துவதற்கு என்றே தனியான பார்கள் இருக்கின்றன. விலை உயர்ந்த வெளிநாட்டு மதுவகைகள் அங்கு கிடைக்கின்றன. விலை தான் அதிகம்.

நடிகைகளுக்கு ஒரு வசதி. மது அருந்தவரும் பெரும் புள்ளிகள் தமது செலவிலேயே வாங்கிக் கொடுத்து வழிவார்கள்.

ரங்கீலா புகழ் ஊர்மிளாவுக்கு சமீபத்தில் பலத்த உபசரிப்புக் கிடைத்ததாம். உபசரித்தவர் மும்பாயில் பிரபலமான ஒரு அரசியல்வாதியின் மகன்.

உபசரிப்புக்கு பதிலாக ஊர்மிளாவிடம் பெரிதாக எதிர்பார்த்தார் அந்தப் புள்ளி. நன்றி மட்டும் சொல்லிவிட்டு நடையைக் கட்டிவிட்டாராம் ஊர்மிளா.

## டிம்பிளின் காதல்

இந்திப்படவுலகில் ஒருகாலத்தில் கொடி கட்டிப்பறந்தவர் டிம்பிள் கபாடியா. நடிகர் ராஜேஷ் கன்னாவை திருமணம் செய்து கொண்டவர். பின்னர் விவாகரத்து.

ராஜேஷ் கன்னாவும், டிம்பிளும் பலருடன் கிசு கிசுக்களில் அடிபட்டவர்கள். இப்போது டிம்பிளுக்கு 40 வயது. உடலையும், மனதையும் இளமையாக வைத்திருக்கிறார். அதனால் இப்போதும் சன்னிதியோலை துணிச்சலாக காதலிக்கிறார்.

இளம் ஹீரோவான சன்னிதியோலுக்கு 30 வயது. டிம்பிள்மீது அவரும் பைத்தியமாக இருக்கிறார்.

டிம்பிள் கபாடியா முன்னர் கமலுடனும் நெருக்கமாக இருந்தவர்.




## யார் அந்த ஜோடி?

மும்பாயில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் நீச்சல் குளம் அருகே கட்டியணைத்தபடி காட்சி தந்தது ஜோடி. அவர்கள் சூழலை மறந்து போனாலும் ஒரு நிருபருக்கு அவர்களை அடையாளம் தெரிந்து விட்டது.

ஓடோடிச்சென்று தனது பத்திரிகையில் செய்தி போட்டு விட்டார். நீச்சல் குளமருகே தழுவிக்கொண்டிருந்த ஜோடி அக்ஷய் குமாரும், ஐஸ்வர்யாராயும்தான்.

முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யாராய் பற்றி மற்றொரு செய்தி, ரஜினியின் புதிய படத்தில் அவர் நடிப்பது அநேகமாக உறுதிசெய்யப் பட்டுவிட்டதாம்.

ஏற்கனவே தமிழில் 'ஆனந்தம்' படத்தில் ஐஸ்வர்யாராய் நடித்துக் கொண்டிருக்கிறார்.

## ஐரோப்பாவில் நக்மா

பாக்யராஜ் கதை, வசனம் எழுதி இயக்கும் படம் 'வேட்டிய மடிச்சுக்கட்டு.'

பாடல் காட்சிகளை ஐரோப்பிய நாடுகளில் படமாக்க நக்மாவோடு பறக்கப் போகுறார் பாக்யராஜ். நக்மாவுக்கும் வெளிநாட்டு பயணம் என்றால் அல்வா சாப்பிடுவது மாதிரியாம். அதனால் வேறு படங்களில் நடிப்பதற்கு கொடுத்திருந்த தேதிகளை மாற்றி பாக்யராஜ் படத்திற்கு வழங்கிவிட்டார்.

நக்மாவின் ஒத்துழைப்பை மறக்காமல் அவரைப் பிரமாண்டமாக காட்டப்போகிறாராம் பாக்யராஜ்.

# மும்பாய்

## இரண்டும் சறுக்கல்

அர்ஜுன் நடித்த 'ஆயுத பூஜை' 'செங்கோட்டை' இரண்டுமே எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை. 'ஏனைய இயக்குநர்கள் படங்களில் நடிக்காதே தலைவா' என்கிறார்களாம் ரசிகர்கள்.

அர்ஜுன் இயக்கி நடித்துவரும் படம் 'தாயின் மணிக்கொடி'. அந்தப் படம் வெளியானதும் தற்போது ஏற்பட்ட தோல்விகளை சரிக்கட்டி விடலாம் என்று நம்பியிருக்கிறார் அர்ஜுன். விஜயசாந்திதான் ஜோடி.

'தாயின் மணிக்கொடி' படத்தில் புதிய நடிகை ஒருவரும் அறிமுகமாகிறார். பெயர், நிவேதிதா. இவர் பெங்களூர் மொடல் அழகி.

## "அம்மாபோல் நடிக்கமாட்டேன்"

'ரிக்ஷாக்காரன்' படத்தில் எம்.ஜி.ஆர் ஜோடியாக குட்டைப் பாவடையுடன் நடித்து அப்போதே கலக்கியவர் மஞ்சுளா. மஞ்சுளா என்றால் கவர்ச்சிக்கு பஞ்சமா? என்று கேட்கவைத்தவர். எம்.ஜி.ஆரோடு நெருக்கமாக நடித்தவர்களில் ஒருவர்.

அந்த மஞ்சுளாவின் மகள்தான் வனிதா விஜயகுமார். (இந்தவார முகப்பில் சிரிப்பவர்) "அம்மாவைப் போல கவர்ச்சியாக நடிக்க மாட்டேன். ஒரு சாவித்திரி, ஒரு ரேவதி மாதிரி நல்ல பாத்திரங்களில் நடிக்கவே விரும்புகிறேன்.

அதற்காக கவர்ச்சியாக நடிக்கவே மாட்டேன் என்று நினைத்து விடாதீர்கள். நல்ல பாத்திரமாக இருந்தால் கொஞ்சம் காட்டலாம் கவர்ச்சி" என்கிறார் வனிதா. ரொம்பத்தான் குழப்புகிறார்.

நடிகர் விஜய் நல்ல நண்பரே தவிர, காதலர் அல்ல என்றும் சொல்லியிருக்கிறார் வனிதா. கார் ஓட்டக் கற்றுத்தந்து விட்டாரா வனிதா?

## ஷில்பாவின் பொழுது போக்கு

ஷில்பா ஷெட்டியின் பொழுதுபோக்கு ஒரு வாரத்திற்கு ஒரு காதலரை மாற்றிக் கொள்வது.

ஷில்பா இன்றைய திகதியில் தீவிரமாக லவ்வுவது சல்மான்கானை. இருவரும் நீ பாதி, நான் பாதியாகியுள்ளனர்.

தொப்புள் அழகைக் காட்டியே நம்பர் வன் இடத்தைப் பிடிக்கலாம் என்று கணக்குப் போட்டவர் ஷில்பாஷெட்டி. கணக்குப் பொய்த்துவிட்டது.

படவுலகில் போதியவாய்ப்பு இல்லாவிட்டாலும் பொழுதை ஜாலியாகப் போக்குகிறார்.




## சிஷ்யை வருத்தம்

பாரதிராஜாவின் 'சிகப்பு ரோஜாக்கள்' படத்தில் அறிமுகமானவர் வடிவுக்கரசி. அதன்பின்னர் பாரதிராஜாவின் பல படங்களில் நடித்தார்.

'கிழக்கு சீமையிலே' படத்திலும் வடிவுக்கரசி நடிப்பதாக இருந்தது. பின்னர் அவரை ஒதுக்கிவிட்டார் பாரதிராஜா.

இப்போது பாரதிராஜாவை சந்திக்க அலைந்து கொண்டிருக்கிறார் வடிவுக்கரசி. "சிஷ்யை தப்பு செய்வதும், குரு கண்டிப்பதும் சகஜம் தானே." என்கிறார் வடிவு. அப்படி என்ன தப்பு செய்தீர்கள் வடிவுக்கரசி?

## மணி போதுமா?

'கவுண்டமணியைப் போட்டால்தான் படம் ஓடும் என்பதெல்லாம் வெறும் பொய்' என்கிறார் ஒரு தயாரிப்பாளர். கவுண்டமணி ஹீரோவாக நடித்த 'கிளி ஜோஸ்யம்' படத்தை மிகவும் குறைந்த விலை சொல்லியும் கூட ஒரு விநியோகஸ்தரும் வாங்க முன்வரவில்லை. கடைசியாக அந்தப் படத்தைத் தயாரித்த திருமால் என்பவரே சொந்தமாக வெளியிடவுள்ளார்.



படங்களில் சண்டைப் பயிற்சியாளராகப் ...தர்மா, முதன் முறையாக அமிதாப் பச்சன் ...டைப்பயிற்சி அளிக்கவுள்ளார். இப்படத்தில் இணைந்து நடிக்கிறார்.

...ாண்டியராஜன்-ஐஸ்வர்யா நடித்து பாதியிலே ...மைந்தன்' படத்தை 'பூவாடைக்காரி' என்ற ...டு வரவுள்ளனர்.

...்த 'மௌனயுத்தம்' படத்தை இந்தியில் மொழி...கள். இந்தியில் இதற்கு 'மௌன்' என்று பெயர்

...் இயக்கும் 'செல்வா' படத்தில், கதாநாயகனாக ...ாரே, சிக்கன் காரே....' என்ற பாடலைப்

...ங்களில் தமிழ்-தெலுங்கு ஆகிய இரு மொழிப் ...டம் 'அபூர்வ சகோதரிகள்'. இந்தப் படத்தின் ...தரியுமா? 'ஆட தொங்கா நாக கன்யா'

...் ஸ்ரீபன் ஸ்பீல்பேர்க் இயக்கிய 'ஜுராஸிக் ...மிழில் மொழிமாற்றி வெளியிட்டிருந்தார்கள். ...க்' என்ற ஆங்கிலப் படத்தை 'முகமூடி' என்று வெளியிடவுள்ளார்கள்.

...ந்தரின் படங்களில் எல்லாப் பாடல்களையும் ...ழுந்து எழுதுவது வழக்கம். ஆனால் பாலச்சந்தர் ...கல்கி'யில் எல்லாப் பாடல்களையும் இளந்தேவன் ...துகிறார்.

...ராசா' ஓரளவு வெற்றி பெற்றதைத் தொடர்ந்து ...திற்கும் அதே பாணியில் 'நம்ம ஊரு ராசா' வைத்துள்ளார் ராமராஜன். கதாநாயகியும் ...ாசா' நாயகி தான். சங்கீதா.

...க்குப் பின்னர் ராம்கோபால் வர்மா இயக்கிய ...டம் 'அனகனக ஒக ரோஜீ' சக்கரவர்த்தி-...டித்துள்ள இப்படம் தமிழில் மொழிமாற்றப் ...டிருக்கிறது.

...் 'பாரதப் பறவை', 'மிஸ்டர் பிரைம் மினிஸ்டர்', ...தேசம்', 'தேசியக்கொடி' ஆகிய தலைப்புக்களை, ...பயர்களைப் பதிவு செய்யும் ஃபிலிம் சேம்பரில் ...்ளார்கள்.

## இயக்க வருகிறார் உஷா

டி. ராஜேந்தர் அரசியலில் குதித்து சட்டசபை உறுப்பினராகிவிட்டார். அதனால் முன்னர் போல பட வேலைகளில் மும்முரமாக ஈடுபட முடியவில்லை. அதனால் அவரது மனைவியும், முன்னாள் நடிகையுமான உஷா ராஜேந்தர் படவுலகில் மீண்டும் குதிக்கப்போகிறார்.

ஒரு தலை ராகம், புதிய வார்ப்புக்கள் போன்ற படங்களில் நடித்தவர் உஷா. உயிருள்ளவரை உஷா என்று அவரைக் காதலித்து கைபிடித்தார் ராஜேந்தர். நடிப்புக்கு ஒரு பெரிய கும்பிடு போட்டார் உஷா.

இப்போது நடிகையாக அல்ல, இயக்குநராக வரப்போகிறார். 'ரோஜாவே என்னைக் காதலி' படத்தை இயக்கப்போகிறார். ஏற்கனவே அதற்கு கதை, வசனம் எழுதி வைத்திருக்கிறார் டி.ராஜேந்தர். அவர்தான் இயக்குவதாக இருந்தது. அரசியலில் பிஸியாகிவிட்டதால் உஷாவுக்கு பதவி உயர்வு. ஒரு நடிகை இயக்குநராகிறார்.

## கர்ப்பமானார் குஷ்பு

"எனக்கொரு மகன் பிறப்பான்" என்று பூரிப்பில் இருக்கிறார் குஷ்பு. அவரைத் தலையில் தூக்கி வைத்து ஆடாத குறையாக மகிழ்ச்சியில் துள்ளுகிறார் கணவர். ஒரே கொண்டாட்டம்தான் போங்கள்.

இக் காட்சி இடம்பெறும் திரைப் படம் 'எனக்கொரு மகன் பிறப்பான்'. ராம்கியும், குஷ்புவும் ஜோடியாக நடிக்கின்றனர். நீங்கள் வேறு ஏதாவது கற்பனை பண்ணியிருந்தால் நாமா பொறுப்பு?

## "விஜய் ஜாலியான ஆள்"

'வசந்தவாசல்' படத்தில் விஜயின் இரண்டு ஜோடிகளில் ஒருவராக நடித்தவர் ஜீவா. தற்போது 'மனசு' படத்தில் நடித்துக்கொண்டிருக் கிறார்.

'வசந்தவாசல்' படத்தில் நடித்த போது பாடல் காட்சியில் நடிக்க கூச்சப்பட்டாராம். விஜய்தான் தட்டிக் கொடுத்து நடிக்க வைத்தாராம். ஜீவா சொல்வதைக் கேளுங்கள்.

"முதன் முதலாக நடித்தபோது ரொம்ப டென்ஷனாக இருந்தது. எனக்கும், விஜய்க்கும் முதல் சந்திப்பே ஒரு பாடல்தான். "ராத்திரியிலே.." என்று தொடங்கும் பாடல்.

நான் டென்ஷனாக இருக்கிறதைப்பார்த்து விஜய் என்னிடம் வந்து, "ஹாய் ஜீவா, என்ன இது? டேக் இட் ஈஸி என்று கல கலப்பாகப் பேசி என்னை இயல்பாக நடிக்கவைத்தார். அது மட்டுமல்ல ஷூட்டிங் முடியும்வரை என்னுடன் கல கலப்பாகவே இருந்தார். விஜய்யின் கல கலப்பும், ஜாலியான குணமும் இன்று நினைத்தாலும் சந்தோசமாக இருக்கிறது." என்கிறார் ஜீவா.

தாராளமாக நடிப்பது பற்றியும் தயங்காமல் சொல்லியிருக்கிறார் ஜீவா.

"படத்திற்கு தேவையான கவர்ச்சியாக நடிப்பதில் தவறில்லை. தேவையற்ற செக்ஸ் காட்சிகளில் நடிக்க மாட்டேன். நல்ல கதைக்கு செக்ஸ் தேவையானால் நான் தயார்." என்கிறார் ஜீவா. பிழைக்கத் தெரிந்தவர்.

## உல்லாச வேகம்

கோடம்பாக்கத்தில் திரைப்படத் தொழிலாளர்களின் ஸ்ட்ரைக் முடிவுற்றதும் மும்முரமாகத் தொடங்கப் பட்டுள்ள தமிழ்ப்படம் அமிதாப் பச்சனின் 'உல்லாசம்'. இந்தப்படத்தில் ஒரு ஹீரோவுக்காக சூப்பர் அக்டர் கமலஹாசனையே பின்னணி பாட வைப்பதில் வெற்றி கண்ட டைரக்டர்கள் நடிக நடிகையர் தேர்விலும் படு உஷாராக இருக்கிறார்கள்.

இந்தப்படத்தில் நடிக்க நக்மாவின் தங்கை ரத்திகா, குஷ்புவின் சகோதரர் அப்துல்லா இருவரும் வாய்ப்புக் கேட்டு தங்கள் புகைப்படத்தை அனுப்பி வைத்திருந்தார்களாம். 'இருவருமே வெளி மாநிலத்தினர் போல் இருப்பதால் இந்தப் படத்தில் நடிக்க வாய்ப்புக் கொடுக்கவில்லை', என்கிறார்கள் இயக்குநர்கள் ஜோடி.



www.padippakam.com
படிப்பகம்

எவ்வளவுதான் பெண்கள் கவர்ச்சியாகத் தோற்றமளித்தாலும் தங்கள் உடலுக்கேற்ற ஆடைகளை அவர்கள் முறையாகத் தேர்ந்தெடுத்துக்கொள்ளாவிட்டால் அவர்கள் அழகு எடுபடாமலேயே போய்விடுகிறது. சொல்லப்போனால் மிகவும் சராசரியாகத் தோன்றும் பெண்கூட பொருத்தமான உடைகளைப் போட்டுக்கொண்டு, அதற்கேற்றபடி மேக்-அப் செய்து கொள்ளும்போது சட்டென்று பிரமிக்க வைக்கிறாள்.

அடுத்தது மொடேர்ன் ஆடைகள் என்றாலே விலையுயர்ந்த விஷயம் என்கிற

கடையில் பார்க்கும்போது சற்று சுமாராக இருக்கும் உடைகூட நம் உடம்பில் ஏறியவுடன் தான் கிளப்பும். அட்டகாசமான ஆடைகள் தோழிகளிடத்தில் நம் மானத்தை வாங்கும் அளவுக்கு வெறுப்பேற்றலாம். கவனம்.

சாதாரணமாகப் பல பெண்களுக்கு மேலே வெள்ளை பிளவுசும், கீழே கறுப்பு ஆடையும் எப்பவுமே நன்றாகப் பொருந்தும். மிகவும் டீஸன்டானது என்று பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வெற்றி ஜோடி இது.

அணியும்போது தங்க நிற பட்டன்களைப் பொருத்தமான இடங்களில் வைத்துத் தைத்துக்கொள்வது, அழகான ஸிப்பை வைப்பது போன்ற சின்னச் சின்ன வேலைகள் உங்களுக்கு மேலும் பளபளப்பை ஏற்றும்.

கலர், டிசைன், தரம் ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக கச்சிதமாக உங்கள் உடல் அளவுக்கு ஏற்ற உடையாகத் தேர்ந்தெடுப்பது அவசியம். மூச்சுவிட முடியாதபடிக்கு உடம்பை இழுத்துப் பிடிப்பது போன்ற உடைகளை அவசரப்பட்டு வாங்கி விட்டு அவஸ்தைப்படும் பெண்கள் நிறைய உண்டு.

# ஐடியா இருந்தால் போதும்

## ஆயிரம் ஃபாஷனில் ஆடைகள்

அபிப்பிராயம் நமது பெண்கள் சிலரிடையே உள்ளது. இன்று விசேஷமான உடை தயாரிப்பில் சர்வதேச கொம்பனிகளுக்கிடையே பெரும் போட்டி நடந்து கொண்டிருந்தாலும் நடுத்தர வர்க்கத்தினரும் வாங்க முடியும் அளவிற்கு விலைகளை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.



### தள்ளுபடி விலைகள்

பத்திரிகைகளில் வரும் 'தள்ளுபடி' செய்திகளையும் உன்னிப்பாகக் கவனித்தால் பலன் கிடைக்கும். இப்படி விசேஷ காலங்களில் தள்ளுபடி கிடைப்பதைப் பயன்படுத்திக் கொள்ளும்போது எது வாங்க வேண்டும் என்பதைத் தெளிவாக முடிவு செய்து கொண்டு கடைக்கு நடையைக் கட்ட வேண்டும். சில பெண்கள் கடைக்குள் நுழைந்தவுடன் முதலில் கண்ணில் தென்படும்-தங்களுக்குத் தேவையில்லாத-உடைகளை எல்லாம் வாங்கி விடுவார்கள். கடைக்குள் ஒரு 'ரவுண்ட்' வந்து தேவையானவற்றைப் பார்க்கும் போது வாங்கக் கை துடிக்கும். ஆனால் காசு இருக்காது.

ஒரே மாதிரியான இரண்டு ஆடைகளுக்கு இரண்டு விலை இருந்தால் கொஞ்சம் விலை அதிகமாக உள்ள உடையைத் தேர்ந்தெடுப்பதே சிறந்தது. நிச்சயம் அதில் சற்றுத் தரம் கூடுதலாக இருக்க வாய்ப்புள்ளது.

எப்போதுமே அழுத்தமான கலர் உள்ள, அதே சமயம் தெளிவான ஷேப் இருக்கும் உடைகளைத் தேர்ந்தெடுப்பதே நல்லது. கலர் தேர்ந்தெடுக்கும் போது தனக்கு அது பொருந்துமா என்பதை மனதுக்குள் தெளிவாக யோசனை செய்து கொள்வது முக்கியம்.

### ஜிகினா வேலைகள்

சரியான 'கொம்பினேஷன்' என்பது மிக முக்கியமான விஷயம். உடையைப் பிரமாதமாகத் தேர்ந்தெடுத்து போட்டுக்கொள்வதோடு விஷயம் முடிந்து விடுவதில்லை. அத்தோடு செய்து கொள்ளும் சின்னச் சின்ன ஜிகினா வேலைகளே நமது ஸ்டைலுக்குப் புதிய பரிமாணத்தைக் காட்டும். உதாரணமாக முழுக்க முழுக்க கறுப்பு ஆடைகளைப் போட்டுக் கொள்வதாக வைத்துக் கொள்வோம். இடுப்பில் பாம்பு தோல் போன்ற டிசைனிலான பளபளக்கும் பட்டையான பெல்ட் மற்றும் பொருத்தமான காதணிகளையும் போட்டுக் கொள்ளுங்கள். அல்லது அழகான முத்துமாலையை அணியுங்கள். உங்கள் ஆளுமையைத் தூக்கி நிறுத்தும்.

சற்று விலையுயர்ந்த பிளவுசுகளை அதுவும் ஒரு முறை தோய்த்தவுடன் இன்னும் கொஞ்சம் சுருங்கி விட்டால் கேட்கவே வேண்டாம். உடம்பிலிருந்து சில கிலோக்களை இறக்கி வைத்தாலொழிய உடையை மேலே ஏற்ற முடியாது. மொடேர்ன் உடையைப் போடும்போது பெண்கள் தங்கள் வயதையும், உடம்பு வாகையும் மறந்துவிடக்கூடாது. முப்பது வயதைக் கடந்து கொஞ்சம் பெருகும் சரீரம் உள்ள பெண்கள் கண்டிப்பாக முழங்காலுக்குக் கீழே சிறிது தொங்கும்படி உடைகளைப் போடுவது கௌரவம்.

### ஆளுக்கு ஏற்ற ஆடை

வயசுப் பெண்களைப் போன்று இருப்பதாகக் காட்டிக் கொள்ள நினைத்து மினிஸ்கேர்ட் போட்டுக் கொண்டால் இரண்டும் கெட்டானாகத் தெரியும். சற்று உயரம் குறைவான பெண்கள் குட்டையான உடைகளை அணிந்தால் 'சிக்' கென்று இருக்கும். பழைய ஆடைகள் இப்போது பொருந்தாவிட்டாலும் கொஞ்சம் மூளையைக் கசக்கினால் பழையதில் சில பகுதிகளைப் பிரித்து விட்டு வேறு ஷேப்புகளை உருவாக்கலாம்.

துணி மிகவும் நைந்து போய் உயிர் துறக்கும் நிலையிலிருந்தால் இருக்கவே இருக்கிறது- கைக்குட்டை, ரிபன், தலை ஸ்கார்ஃப் என்று ஏதாவது ஒன்றாக மாற்றிக் கொள்ள வேண்டியதுதான்.

ஆக ஃபாஷன் என்பது ஏதோ படித்த மேல் தட்டு மக்களுக்கு மட்டுமே சாத்தியம் என்றில்லை. அதற்கு எக்கச்சக்கமாகப் பணம் வேண்டும் என்பதும் இல்லை. உங்களுக்குப் பொழுது கிடைக்கும் போது நிறைய கடைகளில் ஏறி இறங்குங்கள். ஏகப்பட்ட விஷயங்கள் புரியும். நீங்களே ஃபாஷனை உருவாக்கலாம். ஐடியா உள்ளவருக்கு ஆயிரம் ஃபாஷன்!

# உங்கள் குழந்தைகளும் நல்ல புத்தகங்களும்!

உங்கள் குழந்தைகளுக்கு நல்ல நண்பர்கள் அமைய வேண்டும் என நீங்கள் விரும்பினால் அவர்களுக்கு நல்ல புத்தகங்களைக் கொடுங்கள்.

மனிதனை முழுமனிதனாக ஆக்குபவை புத்தகங்களே.

இளம் பிராயத்திலேயே புத்தங்களைப் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டி வளர்த்து விட்டீர்கள் எனில், உங்கள் குழந்தை சீரும், சிறப்பும் பெறும் என்பதில் ஐயமில்லை.

ஆனால் பெற்றோரில் பெரும்பாலானோர் இவ்விஷயத்தில் கவனம் செலுத்துவதில்லை. ஏதோ பள்ளிக்கூடப்புத்தகங்களை வாங்கிக் கொடுத்துப் பொதி சுமக்க வைத்து விட்டால் அதுவே பெரிய சாதனை என்கின்ற நினைப்பில் அவர்கள் காலம் ஓடிக்கொண்டிருக்கிறது.

இப்படிச் சொல்வதால் பள்ளிக்கூடப் பாடப்புத்தகங்கள் கல்வி போதிக்கவில்லை என்று அர்த்தமில்லை. அவை மட்டும் போதாது என்பது தான் உண்மை.

குழந்தையின் கற்பனை சக்திக்கும், படைப்பாற்றலுக்கும், துடிப்பிற்கும் தீனி போடும் புத்தகங்கள் அவர்களுக்குத் தேவைப்படுகின்றன. இந்த தேவை நிறைவு செய்யப்படும்போது அவர்களது உள்ளமும் சிந்தையும் விரிந்து மலர்கிறது.

நிச்சயமாகக் குழந்தைகளுக்கெனவே தனியாகப் புத்தகங்கள் படைக்கப்படுகின்றன. கருத்துக்களைச் சுமையாகத் திணிக்காமல்,



சுலபமாக ஊட்டுவதே குழந்தைகளுக்கான படைப்புகளின் இலக்கு. இவற்றின் தனித் தன்மைகளாவன:

* எளிய நடை.
* குறைவான உரை நடை
* தெளிவான, பெரிய அச்செழுத்துக்கள்.
* அதிகமான படங்கள்-குறிப்பாக வண்ணப்-படங்கள்.
* தரமான தாள்.
* நல்ல பைண்டிங்.
* மிக அதிகமான பக்கங்கள் இல்லாமல் இருத்தல்.

# லேடீஸ் ஸ்பெஷல்

சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது - சுகந்தினி

## ஃப்ரூட் கேசரி

தேவையான பொருட்கள்:

ரவை - 1/4 கிலோ
சீனி - 1 கிலோ
நெய் - 100 கிராம்
மார்ஜரின்- 1/4 கிலோ
முந்திரிப்பருப்பு - 50 கிராம்
பால் - 1/2லீட்டர்
அப்பிள் - 1
அன்னாசிப்பழம் - 1
பச்சை வாழைப்பழம் - 1
திராட்சைப்பழம் - 50 கிராம்
எசென்ஸ் - அளவாக
கேசரிப் பவுடர் - அளவாக
தண்ணீர் - 1 லீட்டர்.

செய்முறை:

முதலில் அப்பிளையும், அன்னாசிப் பழத்தையும் தோல் சீவி சிறு சிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும். வாழைப் பழத்தை உரித்து, சிறு வில்லைகளாக நறுக்கி, திராட்சையையும் உதிர்த்து சேர்த்து வைத்திருக்கவும். ஒரு வாணலியில் நெய் முழுவதையும் ஊற்றி முந்திரிப்பருப்பு, ரவை இரண்டையும் வறுத்துக் கொள்ளவும். பிறகு மார்ஜரினைப் போட்டுக் கொதிக்க விடவும். அத்துடன் ரவைக் கலவை, சீனி, கேசரிப்பவுடர் சேர்த்து பாதி வெந்ததும் பழங்களையும், எசென்சையும் விட்டு நன்றாகப் பதம் வரும் வரை வேக வைத்து இறக்கி வைக்கவும். இதுவே ஃப்ரூட் கேசரி. இது சுவையானது மட்டுமன்றி சத்தானதும் கூட.

# வீட்டுக் குறிப்புகள்

* வெள்ளைத் துணிகளுக்கு நீலம் போடும்போது திட்டுத் திட்டாகப் படிந்து விடுகிறதா? கவலைப்படாதீர்கள். ஒரு சிட்டிகை சுத்தமான உப்பை நீலத்துடன் கலந்து போட்டுப் பாருங்கள். ஒரே சீராக இருக்கும்.
* தோலில் செய்யப்பட்ட பொருட்களை பாலில் நனைத்த துணியால் துடைத்தால் அது புதிது போல ஆகிவிடும்.
* நரம்புத்தளர்ச்சி உள்ளவர்கள் தினசரி காலையிலும், மாலையிலும் பசும்பாலில் இரண்டு தேக்கரண்டி தேன் கலந்து குடித்தால் நரம்புகள் உறுதிபெறும். திடகாத்திரமாகத் திகழலாம்.



* பற்கள் பளபளக்க பற்பசை மட்டுமல்ல உங்கள் பிரஷ்ஷும் கூடத் துணை செய்யும். பற்பசை கொண்டு பல் துலக்கும் முன் உங்கள் பிரஷ்ஷை சில நிமிட நேரம் எலுமிச்சைச் சாற்றில் ஊற வைத்து விட்டு அதன் பின் பசையை அதில் படிய வைத்து பல் துலக்கினால் பற்கள் பளபள ஒளி பெறும்.
* ரசம் அல்லது குழம்புக்கு அவசரமாகப் புளி கரைக்கும் போது வெந்நீரில் கரைத்தால் விரைவில் கரைத்து விடலாம் என்பதைப் பலரும் அறிவர். அதே போல குளிர்ந்த ஐஸ் தண்ணீரில் கரைத்தாலும் விரைவில் புளி கரைந்து விடும்.

# மருத்துவ யோசனைகள்!

### ▶ செருப்பு வழுக்குகிறதா? ◀

சிலருக்கு உள்ளங்கால் வியர்த்து அடிக்கடி செருப்பு ஈரமாகி நடக்கும் போது வழுக்கிவிடும். அப்படிப்பட்டவர்கள் இரவில் படுக்கைக்கு செல்லும் முன்னர் கை கால்களை வெது வெதுப்பான நீரில் கழுவி, (சோப் போட்டுக் கழுவுதல் நலம்) சுத்தமாகத் துடைத்து, சற்று நேரம் காற்றில் உலர்த்திக் கொள்ள வேண்டும். அஸ்பிரின் மாத்திரை தினசரி மூன்றுவீதம் பத்து நாட்களுக்கும், பின்னர் தினசரி ஒன்று என்ற கணக்கில் 15 நாட்களுக்கும், சாப்பிட்டால் குணம் தெரியும். செலவே இல்லாத சிக்கன வைத்தியம் இது.

முக்கிய குறிப்பு:- வயிற்றுத் தொல்லை ஏதேனும் இருப்பின், அது தீர்ந்த பின்னரே அஸ்பிரின் சாப்பிடத் துவங்க வேண்டும்.

### ▶ கொட்டாவி ஏன்? ◀

கொட்டாவி வந்துவிட்டால் தூக்கத்தின் அறிகுறி என்று நினைப்பது தவறு. உடலில் உள்ள ஒக்ஸிஜன் குறைந்துவிட்டது என்பதன் அறிகுறியே கொட்டாவி.

உடலில் ஒக்ஸிஜன் குறையும்போது நுரையீரல் வாயை இயக்கி கொட்டாவி விடச் செய்கிறது. அதன்மூலம் அதிக காற்றை உள்ளே இழுத்து தேவையான ஒக்ஸிஜனைப் பெற்றுக்கொள்கிறது.

அதனால் கொட்டாவிவிடும் நேரங்களில் நன்கு திறந்தவெளியில் நின்று, மூச்சை உள்ளிழுத்து சற்று நேரம் உள்ளிருத்தி, பின்னர் வெளியேற்றுங்கள்; சோர்வு தானாகவே நீங்கிவிடும்.

### ▶ கொசுவர்த்தியால் பாதிப்பா? ◀

நுளம்பை விரட்ட கொசுவர்த்தி சாதனங்களை பயன்படுத்தும் வழக்கம் அதிகமாகி விட்டது. கொசுவர்த்தியில் இருந்துவரும் புகையை சுவாசிப்பது தவிர்க்க முடியாதது. இதனால் நுரையீரலுக்கு நிச்சயம் பாதிப்புத் தான். எனினும் மருத்துவர்கள் இதனைக் கடுமையாக ஆட்சேபிக்கவில்லை. ஏனெனில்; கொசுக்கடியால் நேரும் துன்பத்தைவிட இது அதிகம் இல்லை என்பதால்தான். கொசு வர்த்தி பாவிப்பதைவிட கொசுவலை பாவிப்பது நல்லது. குறிப்பாக குழந்தைகளுக்கு நல்லது.



### ▶ சென்ட் தலைவலியா? ◀

சென்ட் வாசனை மட்டுமல்ல, பொதுவாகவே பலருக்கு பல்வேறு வாசனைகள் அலர்ஜியாக இருப்பது இயற்கையே. சிலருக்கு பெற்றோல் வாசனை வயிற்றைக் குமட்டும். வேறு சிலருக்கு புளித்த தயிர் வாசனை பிடிக்காது. அப்படிப்பட்ட நிலையில் அந்த வாசனைகளைத் தவிர்ப்பது நல்லது.

'சென்ட்' விசயத்தில் ஒரு உண்மையை மறக்கக்கூடாது. தன் வியர்வை வாசனையால் பிறரை முகஞ்சுழிக்கச் செய்வதை விட, அலர்ஜி தராத 'சென்ட்' பாவிப்பது நல்லது.

### ▶ உதட்டோரம் புண்ணா? ◀

விட்டமின் பி2 சத்துக் குறைந்து போவதால் சிலருக்கு உதட்டோரம் வெடிப்பு ஏற்பட்டு புண்ணாகிறது. எனவே அவர்கள் விட்டமின் பி2 மாத்திரைகளை சில நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வரலாம். இந்த நாட்களில் முகத்துக்கு சோப்போட்டு கழுவுவதைத் தவிர்க்க வேண்டும்.

புண் உள்ளபோது உதட்டுக்கு தேங்காய் எண்ணெய், ஒலிவ் எண்ணெய் தடவலாம். கண்ட கண்ட ஒயின்மெண்டு (கிரீம்பு)களைத் தடவக்கூடாது.

### ▶ காது குடையலாமா? ◀

காது குடைவது என்பது சிலருக்கு ஒரு பலவீனமான கெட்ட பழக்கம். அதுவும் தீக்குச்சி போன்றவற்றால் காது குடைவது ஆபத்தானது.

காதுக்குள் இருக்கும் அழுக்கு என்பது சற்று இறுகிய மெழுகு. அதில் தீக்குச்சியின் மருந்துப் பாகம் உரசியபோது ஒருவருக்கு காதுக்குள் தீப்பற்றிவிட்டது. அந்த தீப்புண் ஆறுவதற்கு நீண்ட காலம் பிடித்தது.

எனவே காதை சுத்தம் செய்ய கூர்மையற்ற குச்சி நுனியில் பஞ்சை சுற்றி அதன் மூலம் மிகமெதுவாகக் குடையுங்கள்.

### ▶ தயிரும் குளிர்தான் ◀

தயிர் உடலுக்கு சூடு மோர்தான் குளிர்ச்சி என்று பொதுவாகக் கூறுவார்கள். ஆனால் தயிரும் வயிற்றுக்கு குளிர்ச்சியானதே.



வயிற்றுக்கு மட்டுமல்ல, உங்கள் முகத்துக்கும் குளிர்ச்சி தருகிறது.

ஒரு ஸ்பூன் தயிர் எடுத்துக் கொள்ளுங்கள். கொளுத்தும் வெயில் நாளில் பிற்பகலில் உங்கள் முகத்தில் தடவிக்கொள்ளுங்கள். பத்து,பதினைந்து நிமிடம் கழிந்த பின் குளிர்ந்த நீரில் முகத்தைக் கழுவுங்கள்.

புத்துணர்வு மட்டுமல்ல, உங்கள் முகமும் பளபளவென்று காணப்படும்.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? கல்பிட்டி வாசகிக்கு அதிஷ்டம்

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான். | நழீரா நிசார்தீன். |
| | இல. 11, யூ.எம்.யூ. வீதி, கல்பிட்டி. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** Y

பெயர்:..........................
முகவரி:..........................
..........................
கையொப்பம்:..........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி:20-07-1996

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

www.padippakam.com

# அந்த நாள் ஞாபகம்



அந்தக் கால காதல் மன்னன் ஜெமினி கணேசன், ஜெயலலிதா, ஒரு மூலையில் மெலிதிலும் மெலிதான கமலஹாசன்.



'பதினாறு வயதினிலே' படத்தின் படப்பிடிப்பில், ஸ்ரீதேவி, இளையராஜா, அருகே குளோசப்பில் பாரதிராஜா.



[illegible]



'காதல் வாகனம்' படத்தில் எம்.ஜி.ஆர், ஜெயலலிதா, நாகேஷ்.

## உன் நிழலிலாவது!

என் ஜீவனே!
பேசு....
பேசிக்கொண்டே இரு!

மௌனம்
என்னைக் கொல்கிறது:
உன் பார்வை
என் உணர்வுகளில்
சங்கமிக்கின்றது!

ஜாடையில்
இருக்கும் சுகம்,
வாய் மொழியில் இல்லை
என்கின்றாயா?

கணம்..
அந்த ஒருகணம்....
என் இதயம்
இயங்கவில்லை.
உன் பார்வை
கதிர் வீச்சைவிட
மோசமானது.
என் உணர்வுகளையே
ஊடறுக்கிறதே!

நீ கள்ளன்....!
என் உள்ளத்தை,
உணர்வை,
உயிரையே
கொள்ளை அடித்துவிட்டாயே!
உன்னை மன்னிக்கவே
முடியாது!

முகத்தில் தோன்றும்
சிந்தனை ரேகை,
மூக்கினில் பூக்கும்
வியர்வைத்துளி,
அரும்பு மீசை,
அலட்சியப் பார்வை,
விரிந்த நெற்றி,
வீறு நடை!

நிறம் பார்க்கவில்லை- நான்
உளம் பார்த்தேன்....!
கொற்றவனே!
குற்றுயிராகிவிட்ட
இந்த ஜீவனையும்
இணைத்துக் கொள்!

உன்
விரிந்த மார்பும்
வீங்கிய புஜங்களும்-என்
விரல்கள் விளையாடும்
மைதானமாக வேண்டும்!

உன் நிழலி லாவது
இடம் கொடுத்துவிடு:
அது போதும்
இந்த ஜென்மத்துக்கு!

உருத்திரகுமாரி, இணுவையூர்.

## தேன் கிண்ணம்

## நீ எனக்கு...!

நட்சத்திரங்களுக்கு நடுவில்
தண்மதி போல் நீ எனக்கு!
மின் வெட்டின் போது
பெரு மழைபோல் நீ எனக்கு!

பேசும் போது தித்திக்கும்
செந்தமிழ் போல் நீ எனக்கு!
ஆயிரம் முரசுகளில் தின
முரசு போல் நீ எனக்கு!

ஓராயிரம் முத்துக்களில்
வைர முத்து போல் நீ எனக்கு!
சிகரங்களுக்கு மத்தியில்
எவரெஸ்ட் போல் நீ எனக்கு!

மொத்தத்தில்....
காதலி நான் உனக்கு!
காதலன் நீ எனக்கு!

கல்முனை நௌசானா.

## தொலைந்த அடையாள அட்டை

பெயர்:
காதலி.

வேறு பெயர்:
மாயக் கிளி.

பிறப்பு:
காதல் ஊற்றின்
முதல் நாள்.

வயது:
பதினெட்டின
பள்ளிப் பருவம்.

முகவரி:
காமன் இல்லம்,
காயமடைந்த
இதய வீதி,
காத்திருப்பு முனை.

தொழில்:
காதல்.

கண்டெடுத்தவர்
காற்றிடம்
சொல்லிவிடவும்.

சா. காந்தன்,
சென்றல் கேம்ப்.

## நெஞ்சிலே தைத்த முள்

சொல்லி விட்டுப் போ-
காதலி....!
•••
நான்
தூங்க வேண்டும்!
•••
உன் காலடியில்
இந்த ஊமத்தம் பூவின்
அர்ச்சனை
நிராகரிக்கப் பட்டு விட்டதா?
•••
உன்னையே ஆராதிக்கிறேன்....!
ஏன் இந்த மௌனம்?
•••
தம்மை ஈன்ற
மரத்தையே சுமக்கும்
விழுதுகளாய்-
உன் நினைவையே சுமக்கிறேன்!
•••
இன்னுமா
நீ பேசமாட்டாய்.....?
•••
உன்னை நினைத்துக் கொண்டிருந்தால்
எறும்பின் இதயம் துடிப்பதும்
கேட்கிறதே....
என் இதயத்தின் ஒப்பாரி
கேட்குமா உனக்கு?
•••
மௌனப் பாசையிலாவது
உன் மனதை
சொல்லிவிடு!
•••
கொளுத்திய தீக்குச்சி நீ!
ஆனால்-
எரியவில்லை!
எரிந்து கொண்டிருப்பது
என் இதயம்தான்!
•••
சுவாசத்தை துறந்துவிட்டு
எனக்கு-
செத்துப் போகவும் தெரியும்!
•••
அன்றிலிருந்து....
எனக்காக
என் கல்லறைப் பூக்கள்
சுவாசிக்கும்!

சி.பி.எம்.ஐ.எம்.நகீம்,
பொத்துவில்-02.

## எச்சரிக்கை....!

கைது செய்வதற்கு
நாங்கள்
தோட்டாக்காரன்களல்ல:
தோட்டக்காரன்கள்!
**
உழைப்பினால்
பலம்பெற்ற
பலசாலிகள்தான்!
பயங்கரசாலிகளல்ல.
**
பச்சை இலைகளுக்குப்
பக்கத்தில் படுத்துறங்கி
செடிகளுக்காகச்
செத்துப்போகும்
எங்களிடமா...
"சயனைட்" இருக்கும்?
**
அழும் கூரையின் கீழ்
அமர்ந்து கொண்டு
அழிக்கும் திட்டங்களை
எப்படி
உருவாக்க முடியும்...?
**
கைது செய்வதற்கு
நாங்கள்
தோட்டாக்காரன்களல்ல;
தோட்டக்காரன்கள்!
**
மேனிக்குள்
மச்சங்கள்-கீறல்கள்
பயிற்சியால் வந்தவையல்ல;
நிர்வாகம் படுத்திய
பாடுகளால் வந்தவை!
**
சுதந்திரதாகம்
எங்களுக்கு முண்டு!
தேவையான
நேரத்தில் மட்டும்
திரண்டெழுவோம்!
இதற்காக நாங்கள்
தீவிரவாதிகளா...?
**
புதை குழி
வெட்டத்தெரியும்தான்...!
"பங்கர்"
வெட்டத்தெரியுமென்று
வீணாக
பயப்படாதீர்கள்!
**
தயவுசெய்து.....
கன்று
வைக்கிறவர்களை
"குண்டு"
வைக்கிறவர்களென்று
குற்றப்படுத்தாதீர்கள்!!!

எஸ்.பிரபா.

## அம்மா என்னை அழவிடு!

அம்மா என்னை அழவிடு!
கொடுமைகள் நிறைந்த
இப்பூமியில்
என்னைப் பெத்துப்
போட்டதற்காய்,
மனம்விட்டு
அழவிடு!

எழுதினோம்- எழுதினேன்
ஜனநாயகம்
மனிதாபி மானம் என்று
இன்னும் ஏதேதோ
எல்லாம்!

மனிதர்களே இல்லா
ஓர் இடத்தில்,
இருட்டறையில் என்னை
பூட்டி வைத்து,
அழவிடு!

அம்மா
மீண்டும் நான்
ஓர் குழந்தையாய்.....
இளைஞன் என்ற எண்ணமே

இப்போ
என்னிடமில்லை;
நம்பிக்கை
ஒரு துளியேனும்
இல்லை!

இனி அழுவதை விட
எதைச் செய்வேன்

பின்னால் யாரோ துரத்த,
முன்னால் யாரோ மறிக்க,

வால் அறுந்த பட்டமாய்
இனி எந்த மூலைக்குச்
செல்லேன்?

சாகும் வரை அழவிடு
என் உணர்வுகள்
கண்ணீராய் வெளியேறி,
அடங்கும் வரை
அழவிடு அம்மா!
என்னை அழவிடு!!

அருலியா.

## இந்த வாரம் உங்கள் பலன்

( 14.07.96 முதல் 20.07.96 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மிதுனம் | - சூரியன், வெள்ளி, செவ்வாய், புதன். |
| கன்னி | - இராகு. |
| தனு | - வியாழன். |
| மீனம் | - சனி, கேது. |

சந்திரன்- மிதுனம், கர்க்கடகம், சிம்மம், ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மேடம்: (சுப நேரம்)

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, பொருள் வரவு. | காலை 7 | மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 12 | மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, பணச் செலவு. | மு.ப. 9 | மணி |
| புதன்- பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. 1 | மணி |
| வியாழன்-இனசன நன்மை, முயற்சி பலிதம். | காலை 10 | மணி |
| வெள்ளி- பொருள் வரவு, உறவினர் பகை. | பி.ப. 2 | மணி |
| சனி- காரிய சித்தி, பொருள் விரயம். | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4

### இடபம்: (சுப நேரம்)

([illegible])

| | | |
|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், உயர்ந்த நிலை. | பி.ப. 2 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, காரியானுகூலம். | மு.ப. 9 | மணி |
| செவ்வாய்- மனக் கசப்பு, பணச் செலவு. | பகல் 12 | மணி |
| புதன்- துயர் நீங்கும், முயற்சி வெற்றி. | காலை 8 | மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- வீண் முயற்சி, செலவு மிகுதி. | காலை 7 | மணி |
| சனி- மனக் கலக்கம், தூரஇடப் பிரயாணம். | பி.ப. 1 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மிதுனம்: (சுப நேரம்)

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- செய்தொழில் வெற்றி, பணச்செலவு. | பி.ப. 1 | மணி |
| திங்கள்- புதிய முயற்சி, உயர்ந்த நிலை. | மு.ப. 9 | மணி |
| செவ்வாய்- வீண் கவலை, இனசன நன்மை. | பகல் 12 | மணி |
| புதன்- அந்நியர் உதவி, கௌரவ நிலை. | பி.ப. 2 | மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், பணவரவு. | காலை 7 | மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, உறவினர் பகை. | பி.ப. 3 | மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, மனக்கவலை. | காலை 8 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### கர்க்கடகம்: (சுப நேரம்)

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. 2 | மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், பெரியோர் உதவி. | பகல் 12 | மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | மு.ப. 9 | மணி |
| புதன்- மன மகிழ்ச்சி, பண வரவு. | பகல் 11 | மணி |
| வியாழன்- இனசன நன்மை, பண நெருக்கடி. | காலை 7 | மணி |
| வெள்ளி- பெரியோர் பகை, மனக் கலக்கம். | பி.ப. 2 | மணி |
| சனி- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்: (சுப நேரம்)

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- வெளியிடப் பயணம், அந்நியர் உதவி. | பி.ப. 1 | மணி |
| திங்கள்- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | மு.ப. 9 | மணி |
| செவ்வாய்- பலவித பேறு, தொழில் சிறப்பு. | பி.ப. 3 | மணி |
| புதன்- மனக் கலக்கம், இனசன விரோதம். | பகல் 12 | மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, பெரியோர் நட்பு. | காலை 7 | மணி |
| வெள்ளி- கௌரவம், செல்வாக்கு மிகுதி. | பகல் 12 | மணி |
| சனி- துயர் நீங்கும், காரியானுகூலம். | பி.ப. 2 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-3

### கன்னி: (சுப நேரம்)

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | பி.ப. 1 | மணி |
| திங்கள்- பிரயாண மிகுதி, பணச் செலவு. | மு.ப. 10 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, கௌரவம். | காலை 7 | மணி |
| வியாழன்- புதிய முயற்சி, உயர்ந்த நிலை. | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பணக் கஷ்டம். | மு.ப. 9 | மணி |
| சனி- அந்நியர் உதவி, மனக் கலக்கம். | பி.ப. [illegible] | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### துலாம்: (சுப நேரம்)

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் மேன்மை, முயற்சி பலிதம். | காலை 7 | மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, உறவினர் உதவி. | பி.ப. 2 | மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், பணவரவு. | காலை 7 | மணி |
| புதன்- தொழில் மந்தம், பணச் செலவு. | பகல் 12 | மணி |
| வியாழன்- பிரயாண மிகுதி, மனச் சோர்வு. | காலை 6 | மணி |
| வெள்ளி-காரியானுகூலம், கௌரவம். | பி.ப. 2 | மணி |
| சனி- துயர் நீங்கும், முயற்சி வெற்றி. | பி.ப. 1 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-1

### விருட்சிகம்: (சுப நேரம்)

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- காரியானுகூலம், பண வரவு. | பி.ப. 1 | மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | மு.ப. 9 | மணி |
| செவ்வாய்- பயனற்ற செயல், கடன் தொல்லை. | பகல் 12 | மணி |
| புதன்- காரியத் தடை, மனக்கலக்கம். | பி.ப. 1 | மணி |
| வியாழன்- வீண்குறை கேட்டல், அந்நியரால் தொல்லை. | காலை 8 | மணி |
| வெள்ளி- மனப்பயம், உயர்ந்த நிலை. | மு.ப. 9 | மணி |
| சனி- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### தனு: (சுப நேரம்)

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, உயர்ந்த நிலை. | பி.ப. 2 | மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | மு.ப. 9 | மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், அந்நியர் உதவி. | பகல் 12 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, மனக் கலக்கம். | பி.ப. 2 | மணி |
| வியாழன்- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. 3 | மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | காலை 7 | மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பி.ப. 2 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### மகரம்: (சுப நேரம்)

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி. | மு.ப. 9 | மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. 2 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, உயர்ந்த நிலை. | காலை 7 | மணி |
| புதன் - பயனுள்ள செயல், தொழில் விருத்தி. | மு.ப. 9 | மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், வெளியிட வாழ்க்கை. | பி.ப. 1 | மணி |
| வெள்ளி- துயர் அதிகம், செலவு மிகுதி. | மு.ப. 9 | மணி |
| சனி- பொருள் வரவு, மனமகிழ்ச்சி. | பி.ப. 3 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: (சுப நேரம்)

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், மனக்கவலை. | பி.ப. 1 | மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, கௌரவம். | மு.ப. 10 | மணி |
| செவ்வாய்- பொருள் வரவு, இனசன நன்மை. | பி.ப. 2 | மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், புதிய முயற்சி. | மு.ப. 9 | மணி |
| வியாழன்- காரியானுகூலம், தொழில் மேன்மை. | பி.ப. 1 | மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | மு.ப. 10 | மணி |
| சனி- தொழில் நிலை மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 1 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### மீனம்: (சுப நேரம்)

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)


| | | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, பண வரவு. | பி.ப. 2 | மணி |
| திங்கள்- தொழில் மந்தம், உயர்ந்த நிலை. | பகல் 12 | மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 2 | மணி |
| புதன்- இனசன நன்மை, முயற்சி பலிதம். | மு.ப. 10 | மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், பிரயாண மிகுதி. | மு.ப. 9 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பண வரவு. | மு.ப. 10 | மணி |
| சனி- மனமகிழ்ச்சி, காரியானுகூலம். | பி.ப. 2 | மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7



படிப்பகம்





## யானை

கரிய நிறத்து யானைக்கு
கால்கள் தூணைப் போலிருக்கும்!
பெரிய கொம்பன் யானைக்கு
பானை போல வயிறிருக்கும்!

தும்பிக்கையும் நீண்டிருக்கும்
தடித்த மரத்தைப் பெயர்த்தெடுக்கும்!
கொம்பு நீண்டு வளைந்திருக்கும்
குட்டியை அழைக்க பிளிறி விடும்!

வெஞ்சா மரம்போல் காதிருக்கும்
விசிறிக் கொண்டே
அசைந்திருக்கும்!
அஞ்சும் வடிவம் கொண்டிருக்கும்
அரசன் போல நடந்து வரும்!

அம்மன் ஊர்வலம் வரும்போது
அலங்கரித்து முன்னே வரும்!
தின்னப் பழங்கள் அளிப்போர்க்கு
துதிக்கை தூக்கி ஆசி தரும்!

எஸ்.குரு

பொய்சொல்லக் கூடாது பாப்பா!
-என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா!
தெய்வம் நமக்குத் துணை பாப்பா!-ஒரு
தீங்கு வர மாட்டாது பாப்பா!
–சுப்பிரமணிய பாரதியார்.

### பாப்பா முரசு சிறுகதை

# செய்யுளுக்கு என்ன பொருள்?

மகான் ஒருவர் மன்னனிடம் வந்தார். சமஸ்கிருதச் செய்யுள் ஒன்று எழுதப்பட்ட ஓலை ஒன்றை அவனிடம் கொடுத்தார்.

மன்னனுக்கு சமஸ்கிருதம் படிக்கத் தெரியாது.

"இது என்ன?" என்றான்.

"இது ஓலை. இதில் செய்யுள் எழுதப்பட்டுள்ளது. இதன் பொருளை உன்னால் ஒரு வருடத்தின் பின்னர் தான் புரிந்து கொள்ள முடியும்," என்று கூறி விட்டு அவர் போய்விட்டார்.

உடனே அரசன், மகான் சொன்னது உண்மையா எனச் சோதிக்க விரும்பினான்.

புலவர்களை வரவழைத்தான். ஓலையைக் காட்டினான். அவர்கள் அதைக் கையில் வாங்கியதுமே, படித்துப் பொருள் கூறி விட்டனர்.

'அந்த மகான் இதன் பொருளைப் புரிந்து கொள்ள ஒரு வருடம் ஆகும் என்றல்லவா கூறினார். இவர்கள் ஓலை நறுக்கைப் பார்த்ததுமே பொருள் கூறுகிறார்களே...? எனவே, நிச்சயம் இவர்கள் கூறும் பொருள் தவறாகத் தான் இருக்கும்,' என்று நினைத்தான் மன்னன்.

இப்படி எண்ணியவன் செய்யுளுக்குப் பொருள் கூறிய அத்தனை புலவர்களையும் சிறையில் அடைத்து விட்டான்.

சில நாட்களின் பின் ஒரு பெரும் புலவர் அரசனிடம் வந்தார். அரசன் அந்த ஓலையை அவரிடம் கொடுத்து,

"இந்தச் செய்யுளின் பொருளை உங்களால் கூற முடியுமா?" என்று கேட்டான்.

"ஓ...முடியுமே..." என்ற புலவர், "ஆனால்...." என்று பின்வாங்கினார்.

"ஒன்றுமில்லை...இதன் பொருளைக் கூற, எனக்கு ஓராண்டு அவகாசம் வேண்டும்," என்றார் புலவர்.

அதைக் கேட்டதும், அரசனுக்கு இந்தப் புலவரிடம் நம்பிக்கை ஏற்பட்டு விட்டது.

"சரி....அப்படியானால் அந்த ஓராண்டு முழுவதும் இந்த அரண்மனையிலேயே இருந்து, என் குருவாகச் செயற்படுங்கள்.." என்றும் வேண்டிக்கொண்டான்.

புலவரும் அதற்குச் சம்மதித்தார்.

அரண்மனையில் அரசன் தனியாக இருக்கும்போது, புலவர், சில சமஸ்கிருத எழுத்துக்களைச் சொல்லிக்கொடுத்தார். பிறகு சொற்களைக் கற்பித்தார்.

பின்னர் சிறுசிறு வாக்கியங்கள், அதன் பிறகு இலக்கண விதிகள்....கடைசியாகச்



சில சமஸ்கிருதப் புத்தகங்களைப் பயிற்றுவித்தார்.

இவ்விதம் ஒரு வருடகாலம் மெல்ல மெல்லக் கடந்து, கெடு முடியும் நாள் வந்தது. அப்போது புலவர் மன்னனிடம்,

"எங்கே அந்தச் செய்யுள் எழுதப்பட்ட ஓலை நறுக்கு?" என்றார்.

"இதோ" என்றவாறு அரசனே போய் எடுத்து வந்தான்.

"அதில் உள்ள செய்யுளுக்கு நீங்களே பொருள் கூறிப்பாருங்கள்," என்றார் புலவர்.

அரசன் நறுக்கைப் படித்தான். உடனே அவனுக்கு அச் செய்யுளின் பொருள் புரிந்து விட்டது.

"இதற்கு முன்பு எல்லாப் புலவர்களும் கூறிய அதே பொருள்தானே எனக்கும் தோன்றுகிறது. அப்படியானால், அவர்கள் எல்லாம் கூறியதை ஏற்காமல் அவர்களைச் சிறையில் தள்ளி விட்டேனா?" என்றான் புலவரிடம்.

"ஆம் மகாராஜா," என்ற புலவர், "எந்தச் செயலும் மெல்ல மெல்லத்தான் நிறைவேறும். ஒரே நேரத்தில் எல்லாமாக எதுவும் நிறைவேறாது. அதாவது, ஒவ்வொரு படியாகக் கடந்து ஏறினால் தான் வீட்டின் மேல்மாடியை அடைய முடியும்," என்றார்.

புலவர் சொன்னதை அரசன் நன்கு புரிந்து கொண்டான்.

அவன் தான் செய்த தவறை உணர்ந்து திருந்தினான். சிறையில் இருந்த புலவர்களை விடுதலை செய்து, அவர்களுக்குப் பொன்னும், பொருளும் வாரி வழங்கி அனுப்பி வைத்தான். ●

## வாரம் ஒரு நாடு

### நெதர்லாந்து



**தலைநகர்–** ஆம்ஸ்டர்டாம்.
**அரசாங்க இருப்பிடம்–** தி ஹேக்
**பரப்பு–** 41,160 சதுர கிலோமீட்டர்.
**மக்கள் தொகை–** 1.53 கோடி
**மொழி**–டச்சு
**எழுத்தறிவு**–99%
**சமயம்–** கிறிஸ்தவம்
**நாணயம்–** கில்டர்
**தனிநபர் வருமானம்–** 21,030 டொலர்

**அமைவிடம்:–**
நெதர்லாந்து மற்றும் அன்டிலீஸ் ஆகியன இணைந்தது. சமநிலமுடையது. மிகுந்த நிலப்பரப்பு கடல் மட்டத்திலிருந்து தாழ்ந்ததாக இருப்பதால் 2400 கிலோமீட்டர் நீளமுள்ள தடுப்புச் சுவர்களால் பாதுகாக்கப்படுகின்றது.

**வரலாறு:–**
மிகப் பழமையான நாடு. முற்கால நெதர்லாந்து என்பது ஹொலண்ட், பெல்ஜியம் மற்றும் பிளான்டர்ஸ் என்னும் நாடுகள் சேர்ந்ததாகும். 1830ல் பெல்ஜியம் இதிலிருந்து பிரிந்தது. முடியாட்சியின் கீழுள்ள பாராளுமன்ற ஜனநாயக நாடு ஆகும்.

**பொருளாதாரம்:–**
விவசாயம் இயந்திரமயமாக்கப்பட்டுள்ளது. முக்கிய தொழில் உணவுப் பொருள் தயாரிப்பு, பால் பண்ணைப் பொருட்கள். இரசாயனப்பொருள் உற்பத்தி, தாதுகளில் இருந்து உலோகம் பிரித்தல், இயந்திரங்கள், மின்சாதனங்கள் தயாரித்தல் பிறமுக்கிய தொழில்களாகும். ஆம்ஸ்டர்டாம் வைர உற்பத்தி, கலைச் செல்வங்கள், மதிப்பு மிக்க உலோகங்கள் ஆகியவற்றிற்கு உலகச் சிறப்புப் பெற்றுள்ளது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 20.07.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 149
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 147


பரிசுக்குரியவர்:
கே. ராமச்சந்திரன்,
தெஹியோவிட்ட த.மா.வி., தெஹியோவிட்ட.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| சிவநேசராசா வியூரகன், மட்/ சிவானந்த வித்தியாலயம், கல்லடி. | செல்வி டி.கே.என். ரிஷாதா, தமிழ் மகளிர் மகா வித்தியாலயம், பதுளை. |
| ஆர். கிருஸ்ணவேனி, கு/சரஸ்வதி, த.வி. முலான்கந்த, மாவத்தகம. | செல்வன் ஈ.சஞ்ஜீவன், ஜானகி வீதி, கொழும்பு-04. |
| பி. ரெபேக்கா பொன்மலா க/வெஸ்ட்ஹோல் தமிழ் வித்தியாலயம், கெட்டபுலா. | பி. அன்ரு ராஜன், புனித அந்தோனியார் கல்லூரி, வத்தளை. |
| எஸ்.எம்.ஏ. பாத்திமா குசைனா, மட்/அறபா வித்தியாலயம், ஏறாவூர். | இ. நரேஷ், சூரியமல்புர தொடர்மாடி, கொழும்பு-12. |
| எஸ். அனஸ் மொஹமட், அரசினர் த.ம.வித்தியாலயம், ஹல்தும் முல்லை. | பாதிமா மிப்ராஸ் வபா, முஸ்லிம் வித்தியாலயம், நாங்கல்ல, துல்ஹிரிய. |

## காண்டாமிருகம்

நிலத்தில் வாழும் மிகப்பெரிய மிருகங்களில் காண்டாமிருகமும் ஒன்று. ஐந்து வகைக் காண்டாமிருகங்கள் உள்ளன. அவற்றில் மூன்று வகை ஆசியாவிலும், இரண்டு வகை ஆபிரிக்காவிலும் உள்ளன. இந்தியாவில் வசிக்கும் ஒற்றைக் கொம்புக் காண்டாமிருகம் ஆசிய வகைக் காண்டாமிருகங்களில் மிகப் பெரியது. நேபாளம், இந்தியாவில் உள்ள மேற்கு வங்கம், அசாம் ஆகிய காடுகளில் மட்டும் தான் இவை காணப்படுகின்றன.



காண்டாமிருகங்களுக்கு மிகப்பெரிய உடலும், சிறிய கால்களும் உள்ளன. அவற்றிற்கு ஒன்று அல்லது இரண்டு கொம்புகள் உண்டு. இதன் தோல், மடிப்பு, மடிப்பாகக் காணப்படும்.அவை ஐந்தடி உயரம் வரை வளரும். இதைப்பார்க்கும் போது காண்டாமிருகங்கள் கவச உடை அணிந்தது போல இருக்கும். அதன் தோல் மிகக் கடினமானதாக இருக்கும். எனினும் துப்பாக்கிக் குண்டோ, கத்தியோ பாய்வதை இதனால் தடுக்க முடியாது.

பயங்கரமாகத் தோற்றமளிக்கும் இந்த மிருகம் ஒரு சைவப்பிராணி. புல், இலை, வேர், பழங்களை இரவில் சாப்பிடும், பகலில் ஓய்வு எடுக்கும். தண்ணீரிலோ, சகதியிலோ படுத்துக் கிடக்கும். இதன் தோலில் வியர்வைச் சுரப்பிகளே கிடையாது.

கடுமையாக வேட்டையாடப் பட்டுவருவதால் காண்டாமிருக



எண்ணிக்கை வேகவேகமாகக் குறைந்து வருகிறது. காண்டாமிருகத்தின் ஒவ்வொரு பகுதியும் மருத்துவ சக்தி கொண்டது என்பதால் இவை கடுமையாக வேட்டையாடப்படுகின்றன. ●

## அமில மழை

**● அமிலமழை என்றால் என்ன?**

உலகத்தில் சில இடங்களில் பெய்யும் மழை நீர் அமிலத்தன்மை உடையதாக இருக்கும். அந்த மழைக்குத்தான் அமில மழை என்று பெயர்.

**● மழை நீர் எப்படி அமிலத்தன்மை உடையதாக இருக்கும்?**

வீடுகள், தொழிற்சாலைகள், வாகனங்களில் நிலக்கரி, பெற்றோல், மண்ணெண்ணெய், டீசல் ஆகியவற்றைப் பயன்படுத்தும் போது அவற்றில் இருந்து வெளிப்படும் கந்தக ஒட்சைட், நைதரசன் ஒட்சைட்டுகள் காற்றில் கலக்கின்றன. கந்தக டை ஒட்சைட் மழைநீருடன் சேர்ந்து கந்தக அமிலத்தையும், நைதரசன் ஒட்சைட் மழைநீருடன் சேர்ந்து நைட்ரிக் அமிலத்தையும் உற்பத்தி செய்வதால் மழைநீர் அமிலத்தன்மை அடைகிறது.

**● இந்த அமில மழையால் ஆபத்து உண்டா?**

ஆம். இந்த அமில மழையால் பயிர்கள், காடுகள் மற்றும் கடல் வாழ் உயிரினங்களுக்கு அழிவுகள் ஏற்படும். சில வேளைகளில் இந்த அமில மழை கட்டடங்களைக் கூடச் சேதப்படுத்தி விடும்.

**● இந்த அமில மழையால் எந்த நாடுகள் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கின்றன?**



ஜெர்மனி, கனடா, நோர்வே, சுவீடன், ஃபின்லாந்து மற்றும் அமெரிக்கா.

**● இந்த அமில மழை எமது நாட்டில் பெய்துள்ளதா?**

இல்லை. ஆனால் எமது அண்டை நாடான இந்தியாவில் மும்பாயில் (பம்பாயில்) உள்ள செம்பூரில் அமில மழை பெய்தது. இருப்பினும் அதில் அமிலத்தன்மை மிகவும் குறைவாகவே இருந்தது.

## ஒரு வரிச் செய்திகள்

* சீன அரிச்சுவடி 214 எழுத்துக்களைக் கொண்டது.
* உலகில் செப்பு அதிகமாகக் கிடைக்கும் இடம்- சிலி.
* கோழிக்குஞ்சுக்கு 8000 சிறகுகளுக்கு மேல் வளரும்.
* கடைசியாகக் கண்டறிந்த கிரகம்- புளூட்டோ
* மிக உயரத்தில் பறக்கும் பறவை- டெர்ன்.
* பிலிப்பைன்ஸ் 7000 தீவுகளைக் கொண்டது.
* சிப்பியில் முத்து விளைய 15 ஆண்டுகள் ஆகும்.
* இளகும் தன்மை அதிகம் கொண்ட உலோகம்- தங்கம்.
* டில்லியின் பழைய பெயர்- ஹாஜகானாபாத்.
* உலகின் அகலமான பாலம்- 'சிட்னி ஹார்பர்' பாலம்தான்.
* ஆறுகளே இல்லாத நாடு- சவுதி அரேபியா.
* மெர்குரி விளக்கு 1912ல் கண்டுபிடிக்கப்பட்டது.

www.padippakam.com

"ஹாய் கீத், குட் ஈவினிங்."
"தப்பு. ஈவினிங் தாண்டியாச்சு."
"ஸாரிம்மா, பெட்ரோல் ட்யூப்பிலே அடைப்பு. முக்கால் மணி நேரம் சாப்பிட்டுடிச்சி ஸ்கூட்டர். இல்லைன்னா சொன்னபடி வந்திருப்பேன். ரொம்ப நேரமாச்சா?"
"நூத்தி இருபது நிமிஷங்கள்."
"டபுள் ஸாரி. கும்புட்டாச்சா?"
"எத்தனை தடவை கும்புடறது? கோயிலுக்கு வர்றவங்கள்லாம் முறைச்சி முறைச்சி பார்த்தாங்க."
"ரைட். இப்ப என்ன செய்யட்டும்? வா கடற்கரை போய்டலாம்."
"நேரமாச்சு மதன். எட்டரைக்கு வீட்ல இருந்தாகணும் ரெண்டு பஸ் மாறனும்."
"மணி ஏழுதான். நான் ட்ராப் பண்றேன் தெரு முனையிலே வா."
"மதன்."
"ம்..?"
"மனசுக்குப் பிடிச்சவங்களோட இப்படி கடற்கரை மணல்ல கைகோர்த்து நடக்கிறது எவ்வளவு சந்தோஷம்!"
"இன்னும் நிறைய இருக்கு கீத்."
"கடல் பத்தி ஒரு புதுக்கவிதை சொல்லுங்களேன்."
"மணியார்டர் பாரத்திலே கீழே ஸ்பேஸ் ஃபார் கம்யூனிகேஷன்னு இடம் இருக்கும் பாரு. அதிலே செய்தி எழுதறதுக்குக்கூட யோசனை செய்யணும் எனக்கு. என்னைப் போயி..... நீ சொல்லு ரசிக்கிறேன்."
"சொல்லட்டுமா? மூன்று ஷிஃப்ட்களில் அலைகள் உற்பத்தி செய்யும் அற்புத தொழிற்சாலை. நேத்து படிச்சது இது."
"இந்தக் காத்தை அனுபவிச்சிக்கிட்டு, கடலைப் பார்த்துக்கிட்டு, உன் மடியில் தலையை வச்சிக்கிட்டு இப்படியே இருந்துடலாமான்னு தோணுது. உக்காருவமா?"
"எதுக்கு மடியில் தலை வைக்கிறதுக்கா? மதன், கோயிலை விட்டு ரொம்ப தூரம் வந்துட்டோம் திரும்பிடலாமா?"
"கீத்து என்ன இப்போ? என்ன பயம்?"
"பயம் இல்லை. டயம் இல்லை."
"உக்காரலாம் கீத். சும்மா பத்து நிமிஷம்."
"இருங்க கர்சீப் தர்றேன். வெள்ளைப் பாண்ட் அழுக்காய்டும்."
"பரவாயில்லை. மணல்தானே? தட்டினா உதுர்ந்துடும். ஏய், இப்படி பக்கமா வந்து உக்காரு."
"ரொம்ப இருட்டா இருக்குங்க. உங்க முகம் கூட தெரியலை சரியா. வாங்க, வெளிச்சத்துக்குப் போய்டலாம்."
"மண்டு. இருட்டு தான் வசதி."
"ஏய்.... கையை எடுங்க."
"நான் இல்லேம்மா. நண்டு ஏதாச்சும் ஊர்ந்திருக்கும்....கீத்."
"ம்?"
"நிஜமாவே மடியிலே படுத்துக்கறேனே.... ப்ளீஸ்."
"ஆம்பிளைங்க கெஞ்சினா அசிங்கம் மதன்."
"சரி. கெஞ்சலை. உத்தரவா சொல்லட்டுமா?"
"அதுக்கு மேல விஷமம் எதுவும் செய்யக்கூடாது. சரியா?"
"அதென்ன விஷமம்? சொல்லித் தர்றியா? உள்ளுக்குள்ளே சதையா, இல்லை இலவம் பஞ்சா கீத்? இவ்வளவு மெத்னு இருக்கு. உன் கையைக் கொடேன்."
"எதுக்கு?"
"என்ன நீ எல்லாத்துக்கும் கேள்வி கேக்கறே? ஜோசியம் பார்க்கறதுக்கு."
"அதெப்படி இருட்ல ஜோசியம்?"
"தொடுகுறி ஜோசியம். தான்னா தரமாட்டே, முரட்டுத்தனம் செஞ்சாதான்....."
"ஆ! மதன், ரெண்டு வளையல் உடைஞ் சிடுச்சி. ரொம்ப மோசங்க நீங்க."
"குத்திடிச்சா? ரத்தம் வருதா?"
"அதெல்லாம் ஒண்ணுமில்லை. நேத்து தான் புதுசா வாங்கினது."
"கண்ணாடி தானே? ஏன் இப்படி புலம்பறே, ரெண்டு டஜன் வாங்கித் தர்றேன். ஆமாம் எனக்கொரு சந்தேகம்."
"ரொம்ப மோசமான சந்தேகமா கேப்பீங்களே....."
"சேச்சே. நல்ல சந்தேகம். தலையிலே வச்சிருக்கியே மல்லிகைப் பூ, இதோட வாசம் என்னைத் தூக்குது. எங்கேயோ கொண்டு போய் நிறுத்துது. என்னென்னமோ செய்யச் சொல்லுது. இதே பாதிப்பு இந்த பூ உனக்கும் ஏற்படுத்துமா?"
"ம்கூம், பேச்சு யோக்கியமாய் போற மாதிரி தெரியலை."
"நாலு பூ பிச்சித் தா கீத்."
"எதுக்கு?"
"என் டைரில அப்படியே பாடம் பண்ணி வைக்கணும்."
"என்னதிது பைத்திக்காரத்தனமா....."
"நீ தரமாட்டே. நானா பிச்சிக்கிறேன்."
"அய்யோ விடுங்க. ஏற்கனவே பாதி பூ. பாதி நார்தான் இருக்கு. சரியான முரடுப்பா நீங்க. அய்யோ எலிகடிச்ச மாதிரி பண்ணிட்டிங்க. இதை வச்சிக்கறதும் ஒண்ணுதான். எறியறதும் ஒண்ணுதான். போலாமா?"
"கீத், நீ ஏன் எழுதின லெட்டருக்கெல்லாம் பதிலே போடமாட்டேங்கிறே?"
"அதான் நேர்ல பேசறமே. அப்புறம் எதுக்கு லெட்டர்?"
"நேர்ல விட லெட்டர்ல அன்பை அழுத்தமா சொல்லலாம் கீத்."
"என்ன அழுத்தம்! நாலு வரிக்கு ஒரு தடவை அசடு வழியிறிங்க."
"என் லெட்டர் எல்லாம் பத்திரமா வச்சி வை."
"ஏன்?"
"நாளைக்கு நம்ம பிள்ளைகிட்டே காட்டத் தான்."
"சரிதான். நான் அப்பப்போ டாய்லெட்ல வச்சி எரிச்சிடுவேன்."
"கீத் நிஜமாவா?"
"பின்னே? எங்கப்பா கைக்கு கிடைச்சா என்ன ஆகும்?"
"என்ன ஆகும்!"
"பேசிக் காட்டட்டுமா? கீத்! வா இங்கே. யார் இந்த மதன்? என்னோட காதலர் டாடி. பல்லைக் கழட்டிடுவேன் படவா, காதலர்! என்ன தெரியும் உனக்கு? காதலாம். என் தப்புடி. உன்னை படிக்க வைக்கணும்னு காலேஜுக்கு அனுப்பறேன் பாரு.... என்னை சொல்லணும். யார் இந்த அயோக்கியன்? சொல்லு. அப்பா, அவர் ரொம்ப நல்லவருப்பா. விவேகானந்தருக்கு அப்புறம் இவரைத்தான் சாந்த சொரூபின்னு சொல்லணும். இந்த கதையெல்லாம் வேணாம். என்ன செய்றான்? என்னைக் காதலிக்கிறார். தொழில் என்ன செய்றார்? இனிமேதான் செய்யப்போறார். இப்போதைக்கு வெட்டிப் பயல்! அப்படித்தானே? இங்க பாரு. நம்ம அந்தஸ்த்து என்ன? நினைச்சிப் பார்த்துக்கோ. நாளையிலேர்ந்து நீ காலேஜுக்குப் போகலை. வர்ற முகூர்த்தத்திலேயே ஒரு பணக்கார மாப்பிள்ளை உன் தாலில கழுத்தைக் கட்றான். ஸாரி– கழுத்திலே தாலி கட்றான். இதை மீறினா இந்த வீட்ல ஒரு கொலை நடக்கும். இல்லைன்னா தற்கொலையாவது நடக்கும்."
"கீதா!"
"என்ன மதன், சும்மா கற்பனை தானே! உங்களை வெட்டிப் பயல் அது, இதுன்ன சொல்லிட்டேன். ஸாரிங்க. கோபமா?"

# அசத்தல் 1

வித்தியாசகரமாக இக்கதையை எழுதியுள்ளார் பட்டுக்கோட்டை பிரபாகர். என்ன வித்தியாசம் என்று நீங்களே கண்டுகொள்ளுங்கள். வித்தியாசம்-புதுமை அதனால் படுவேகமாகச்சென்று இறுதியில் திருப்பமாகும் கதை இது.





## தமிழக கிரைம் கதை மன்னன் பட்டுக்கோட்டை பிரபாகர்

# தா!

"கீத். தயவுசெஞ்சி இனிமே இப்படி எல்லாம் கற்பனை செய்யாதே போவமா?"
"சரி, எந்திரிங்க என்ன தேடறீங்க?"
"என் செருப்பு. ஒண்ணு கிடைச்சிடுச்சி. ஒண்ணைக் காணோம்."
"இனிமே இல்லை ஹேண்ட்பாகிலே ஒரு சின்ன டார்ச் வச்சிருக்கணும். கிடைச்சிடுச்சா?"
"இன்னும் இல்லை. பக்கத்திலேதான் போட்டேன் கீத்."
"நல்ல இடத்துக்கு வந்தோம் பாருங்க. இனிமே இங்கே எல்லாம் வரமாட்டேன் நான். திடீர்னு யாராச்சும் வந்து கத்தி காட்டி மிரட்டினாலும் உதவிக்கு வர யாருமில்லை."
"கீத். இரு. கைல என்னமோ தட்டுப்படுது. இது.... இதுகூட கத்தி மாதிரிதான் இருக்கு. பிசு பிசுங்குது."
"ஏதாச்சும் எலும்பு துண்டா இருக்கும். போடுங்க. கடல்ல கை கழுவுங்க. செருப்பு கிடைச்சிடுச்சா இல்லையா?"
"கிடைச்சிடுச்சி. இரு கை கழுவிட்டு வந்துடறேன்."
"பார்த்து. தண்ணில விழுந்துடாதீங்க."
"ரைட். அப்புறம்? மறுபடி எப்போ எங்கே சந்திக்கிறோம்?"
"ஞாயித்துக்கிழமை இந்த இடம் வேணாம். மெரினா போய்டலாம்."
"சரி. இப்போ உன்னை ட்ராப் பண்ணிட்டு நான் ரூமுக்குப் போறேன்."
"உங்க ஃபிரெண்டோட ஓட்டை ஸ்கூட்டரை நம்பி நான் வரமுடியாது. ஏற்கனவே ரெண்டு தடவை பட்டுருக்கேன். ஒரு தடவை டயர் பனால். ஒரு தடவை என் சேலையை கிழிச்சிடுச்சி. ஒரு ஆட்டோ பிடிச்சி நான் போய்கிறேன்."
"என்ன பண்றது? ஓட்டை வண்டிதான். ஓசில அதாச்சும் கிடைக்குதே. அதோ உனக்குன்னு நிக்கிது பாரு ஆட்டோ. ராத்திரி நேரம். நம்பர் பார்த்துக்கோ, டி.டி.ஓ. 1688. சரி போய்ட்டு வா, குட் நைட்."
"குட் நைட் மதன்."

"என்னங்க தேடறீங்க?"
"கோயிலுக்குள்ளே கிடந்ததா யாராச்சும் ஒரு மணிபர்ஸ் ஒப்படைச்சாங்களா?"
"இல்லையே.... நல்லாத் தேடிப்பாருங்க. நிறையப்பணம் இருந்திச்சா?"
"அம்பது ரூபா இருந்திச்சி. கடற்கரைக்குப் போனேன். ஒருவேளை அங்க தான் விழுந்திருக்கணும்."
"போய் தேடிப் பாருங்களேன்."
"எப்படிங்க? நிலா வெளிச்சம் கூட இல்லையே...."
"டார்ச் லைட் வேணும்னா தரட்டுமா?"
"கொடுங்க ப்ளீஸ்..... பார்த்துட்டு வந்துடறேன்."
"சீக்கிரம் வந்துடுங்க. நான் வீட்டுக்குப் போகணும்."

"யாருய்யா அது. கைல டார்ச் லைட்டோட?"
"இருங்க. பக்கத்திலே வந்து சொல்றேன். என் மணிபர்ஸ் இங்கே விழுந்துடிச்சி.... அதான் தேடறேன்."
"ரொம்ப நேரமா தேடறீங்களா? தூரத்தில நான் வந்துட்டு இருக்கிறப்பவே உங்க டார்ச் வெளிச்சம் பார்த்தேன்."
"ஆமாங்க."
"பெரிய தொகையா?"
"அம்பது ரூபாதான். ஆனா எனக்கு அது பெரிய தொகைதான்."
"எனக்கு பக்கதில தான் குடிசை. கருக்கல்ல வந்து தேடிப் பார்க்கறேன். கிடைச்சதுன்னா பக்கத்து போலிஸ் ஸ்டேஷன்ல கொடுத்துடறேன். போய்ட்டு வாங்க."
"நாளைக்கு ரெண்டு போஸ்டல் ஆர்டர் வாங்கறதுக்காக வச்சிருந்தேன்."
"போனது போய்டுச்சி. புலம்பாம போங்க தம்பி."

"என்ன சார் கிடைச்சுதா?"
"இல்லைங்க. இந்தாங்க, டார்ச் லைட், ரொம்ப தேங்ஸ்."
"ஸ்கூட்டர்ல வந்திங்களா?"
"ஆமாம்."
"எங்கே போறீங்க?"
"மாம்பலம்."
"நானும் மாம்பலம்தான். இறக்கி விடுறிங்களா? பஸ் அதிகம் இல்லை."
"சரி, வாங்க."

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: ஜி.அன்புச்செல்வம்.
வயது: 20
முகவரி: செல்வா நகர் கிழக்கு, ஆரையம்பதி-02, மட்டக்களப்பு.
பொழுது போக்கு: புத்தகம், பத்திரிகை, பேனாநட்பு.



பெயர்: ஜி.அஸ்வர் அலி
வயது: 19
முகவரி: பிரதான வீதி, கல்பிட்டி.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, கிரிக்கெட்.



பெயர்: ஆர்.உதயசிறி.
வயது: 22
முகவரி: VOLTA STR-05, 6005-LUZERN, SWITZERLAND.
பொழுது போக்கு: கிரிக்கெட்.



பெயர்: எம்.இந்திரகுமார்.
வயது: 18
முகவரி: 331, மோதர வீதி, கொழும்பு-15.
பொழுது போக்கு: வானொலி, நண்பர் தொடர்பு.



பெயர்: பாத்திமா ரக்ஷனா
வயது: 20
முகவரி: 573/9, திருமலை வீதி, மாத்தளை.
பொழுது போக்கு: வானொலி, ரீ.வி.



பெயர்: எச்.முகமட் மக்கீன்.
வயது: 22
முகவரி: P.O.BOX-135, CODE NO-22002, SALMIYA, KUWAIT.
பொழுது போக்கு : புத்தகம் , கிரிக்கெட்.

பெயர்: எம்ஹசன் அபுதாலிப்
வயது: 22
முகவரி: P.O.BOX-30001, 23-9-5, K.K.M.C. HAFAR AL BATIN-31991, K.S.A.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: ஐ.அஸ்லம்
வயது: 16
முகவரி: 57/1, அப்துல் கரீம் ஜன் வீதி, காத்தான்குடி-6-.
பொழுதுபோக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி.

பெயர்: பி.தீபகாந்தன்
வயது: 16
முகவரி: கோவில் வீதி, பாலையூற்று, திருகோணமலை.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: பி.யூலியன் நிர்மலராஜ்.
வயது: 29
முகவரி: நில அளவைக் கந்தோர், வவுனியா.
பொழுது போக்கு: வானொலி, சினிமா.

பெயர்: வி.யோககுமார்.
வயது: 22
முகவரி: 76, WAKEMANS HILL AVE, KINGSBURY, LONDON. NW9 OUN
பொழுது போக்கு: பத்திரிகை, பாடல்கள்.

பெயர்: மொகமட் அனஸ்.
வயது: 16
முகவரி: 209, நாவலப்பிட்டிய வீதி, உலப்பனை.
பொழுது போக்கு: முத்திரை சேகரித்தல், பத்திரிகை.



படிப்பகம்

www.padippakam.com

# தாய்

## மக்சீம் கார்க்கி

### 84

"என்னைப் பொறுத்தவரையில் சாஷாவைப் போல் எனக்கும் ஓர் அனுபவம் உண்டு. நான் ஒரு பெண்ணைக் காதலித்தேன்- அவள் ஓர் அதிசயமான பெண். அவளைச் சந்தித்தபோது எனக்கு இருபது வயதிருக்கும். அன்று முதலே நான் அவளைக் காதலிக்கத் தொடங்கி விட்டேன். நான் அவளை அப்போது எப்படி நேசித்தேனோ, அது போலவே இப்போதும் நேசிக்கிறேன்- என் இதய பூர்வமாக, என்றென்றும் பெருந்தன்மையோடு காதலிக்கிறேன்."

தான் நின்ற இடத்திலிருந்தே அவனது கண்ணில் தோன்றும் இனிய தெளிந்த பிரகாசத்தை அவளால் காணமுடிந்தது. அவன் தனது கைகளை நாற்காலிக்குப் பின்னால் கோர்த்து, தன் கைகளின்மீது தலையைச் சாய்த்திருந்தான். எங்கோ வெகு தொலைவை ஏறிட்டுப் பார்த்தவாறே உட்கார்ந்திருந்தான்; அவனது பலத்த மெலிந்த உடம்பு முழுவதும் சூரிய ஒளிக்காக ஏங்கித் தவிக்கும் மலரைப் போல் ஏதோ ஒரு காட்சியைக் காணத் தவித்துக்கொண்டிருந்தது.

"நீங்கள் ஏன் அவளை மணந்து கொள்ளக்கூடாது?" என்று கேட்டாள் தாய்.

"அவளுக்குக் கல்யாணமாகி நாலு வருஷங்களாகி விட்டன."

"முதலிலேயே நீங்கள் ஏன் அவளைக் கல்யாணம் செய்து கொள்ளவில்லை?"

அவன் ஒரு கணம் சிந்தித்தான்.

"எப்படியோ அது நடக்காமல் போய்விட்டது. நான் வெளியில் இருந்தால், அவள் சிறையிலாவது, தேசாந்திரத்திலாவது இருப்பாள். அவள் வெளியிலிருந்தால், நான் சிறையில் இருந்தேன், சாஷாவின் நிலைமையைப் போலத்தான். இல்லையா? முடிவாக, அவர்கள் அவளைப் பத்து வருஷகாலம் தேசாந்திர சிட்சை விதித்து, சைபீரியாவில் எங்கோ ஒரு கோடியில் கொண்டு தள்ளிவிட்டார்கள். நானும் அவளோடு போக விரும்பினேன். ஆனால் நானும் கூச்சப்பட்டேன்; அவளும் கூச்சப்பட்டாள். அங்கே போன இடத்தில் அவள் வேறொருவனைச் சந்தித்தாள்: அவன் நல்லவன்; எனது தோழர்களில் ஒருவன். பிறகு அவர்கள் இருவரும் அங்கிருந்து தப்பியோடி, வெளி நாட்டுக்குச் சென்று இப்போது அங்கே வசித்துவருகிறார்கள். ஹூம்!"

நிகலாய் தன் மூக்குக் கண்ணாடியைக் கழற்றி அதைத் துடைத்தான்: வெளிச்சத்துக்கு நேராகத் தூக்கிப் பிடித்துப் பார்த்தான். மீண்டும் துடைத்தான்,

"அட, என் அப்பாவித் தோழா!" என்று அன்போடு கூறிக்கொண்டே தலையை அசைத்தாள் தாய். அவனுக்காக அவள் வருந்தினாள். அதே சமயம் அவளைப் பற்றிய ஏதோ ஒன்று தாய்மையின் பரிவுணர்ச்சியோடு அவளைப் புன்னகை செய்ய வைத்தது. அவன் நிமிர்ந்து உட்கார்ந்து மீண்டும் பேனாவை எடுத்துத் தான் பேசும் வார்த்தைகளுக்குத் தக்கபடி அதை அசைத்தாட்டிக் கொண்டே பேசினான்:

"குடும்ப வாழ்க்கை புரட்சிக்காரனுடைய சக்தியைக் குறைக்கிறது- எப்போதுமே குறைத்து விடுகிறது! குழந்தைகள், குடும்பத்தைப் பட்டினி கிடக்காமல் காப்பாற்ற வேண்டிய நிர்ப்பந்தம், போதாமை. ஒரு புரட்சிக்காரன் என்றென்றும் தனது சக்தியை வளர்த்துக்கொண்டே போக வேண்டும்; அப்போதுதான் அவனது நடவடிக்கைகளும் விரிவுபெறும். இன்றைய கால நிலைக்கு அது அத்தியாவசியம். நாம் தான் மற்றெல்லோரையும் விட முன்னணியில் செல்லவேண்டும். ஏனெனில் பழைய உலகத்தை அழித்து, புதிய சமுதாயத்தை உருவாக்கும் பணிக்குச் சரித்திரம் தேர்ந்தெடுத்துள்ள சேவகர்கள், தொழிலாளர்களாகிய நாமேதான். நாம் கொஞ்சம் பின்தங்கினால், சோர்வுக்கு ஆளானால், அல்லது வேறு ஏதாவது சில்லரை வெற்றியிலே மனம் செலுத்தினால், ஒரு பெருந்தவறைச் செய்யும் குற்றத்துக்கு- நமது இயக்கத்தையே காட்டிக் கொடுப்பதுபோன்ற மாபெரும் குற்றத்துக்கு நாம் ஆளாகி விடுகிறோம். நமது கொள்கையை உடைத்தெறிந்து நாசமாக்காமல், நாம் வேறு யாரோடும் அணிவகுத்துச் செல்ல முடியாது; நமது லட்சியம் சின்னஞ்சிறு சில்லரை வெற்றியல்ல, ஆனால் பரிபூரணமான மகோன்னத வெற்றி ஒன்று மட்டும்தான் என்பதை நாம் என்றென்றும் மறந்துவிடக்கூடாது."

> "ஒரு புரட்சிக்காரன் என்றென்றும் தனது சக்தியை வளர்த்துக் கொண்டே போனால்தான் அவனது நடவடிக்கைகளும் விரிவுபெறும். இன்றைய கால நிலைக்க அது அத்தியாவசியம்."

அவனது குரல் உறுதியுடன் தொனித்தது. முகம் வெளுத்தது. கண்கள் வழக்கம் போலவே தனது அமைதியும் அடக்கமும்




நிறைந்த சக்தியோடு பிரகாசித்தன. மீண்டும் வெளியே மணி அடித்தது. லுத்மீலா வந்தாள். அவளது கன்னங்கள் குளிரால் கன்றிப்போயிருந்தன, அந்தக் குளிருக்குத் தாங்காத மெல்லிய கோட்டுக்குள்ளே அவளது உடல் நடுநடுங்கிக் கொண்டிருந்தது.

"அடுத்த வாரம் விசாரணை நடக்கப் போகிறது" என்று கோபத்தோடு கூறிக் கொண்டே, தனது கிழிந்து போன ரப்பர் பூட்சுகளைக் கழற்ற முனைந்தாள் அவள்.

"நிச்சயமாய்த் தெரியுமா?" என்று அடுத்த அறையிலிருந்து கத்தினான் நிகலாய்.

தாய் அவனிடம் ஓடிப்போனாள். அவளது இதயத்திலே ஏற்பட்ட குழப்பத்துக்குக் காரணம் பயமா குதூகலமா என்பதை நிச்சயிக்க முடியவில்லை. லுத்மீலா அவளோடு போனாள்.

"எனக்கு நிச்சயமாய்த் தெரியும். தீர்ப்பு நிர்ணயமாகிவிட்ட விஷயத்தைக் கோர்ட்டில் யாரும் மறைத்துப் பேசக் காணோம்" என்று தனது ஆழ்ந்த குரலில் கிண்டல் போலச் சொன்னாள் அவள். "இந்தமாதிரி விஷயத்தை எப்படித்தான் விளங்கிக் கொள்கிறதோ? தனது எதிரிகளிடம் அதிகாரிகளே தாராள மனப்பான்மையுடன் நடந்துகொள்ளக்கூடும் என்று அரசு பயப்படுகிறதா? தனது சேவகர்கள் அனைவரது மனத்தையும் கலைத்துச் சீர்குலைப்பதிலேயே தன் சக்தியையும் காலத்தையும் முழுக்க முழுக்கச் செலவழித்துள்ள அரசு, அந்தச் சேவகர்களே யோக்கியர்கள் ஆவதற்குத் தயாராயிருக்கிறார்களா என்று அஞ்சுகிறது."

லுத்மீலா சோபாவின் மீது உட்கார்ந்தாள்; தனது மெல்லிய கன்னங்களைக் கைகளால் தேய்த்து விட்டுக் கொண்டாள். அவளது கண்களில் ஒரே கசப்புணர்ச்சி பிரதிபலித்தது; அவளது குரலில் வரவரக் கோபம் கனன்று சிவந்தது.

"லுத்மீலா, வீணாய் ஏன் உயிரை விடுகிறீர்கள்?" என்று கூறி அவளைச் சமாதானப்படுத்த முனைந்தான் நிகலாய். "நீங்கள் சொல்வதை அவர்கள் ஒன்றும் கேட்கப் போவதில்லை. உங்களுக்குத் தெரியாதா...?"

தாய் அவளது வார்த்தைகளைக் கவனத்தோடு காதில் வாங்கிக் கொண்டாள். எனினும் அவளுக்கு அவற்றில் எதுவுமே புரியவில்லை. ஏனெனில் அவள் மனத்தில் சுற்றிச் சுற்றிமாறி மாறியெழுந்த ஒரே சிந்தனை இதுதான்:

"விசாரணை-அடுத்தவாரம்!"

ஏதோ ஓர் இனந்தெரியாத மனிதத்துவம் அற்ற சக்தி நெருங்கி வருவதாக திடீரென அவள் மனத்தில் தட்டுப்பட்டது.

திகைப்பும் சோர்வும் கவிந்து சூழ்ந்த மனத்தோடு தாய் மேலும் இரண்டு நாட்கள் வரை பளு நிறைந்த சோகத்துடன் காத்திருந்தாள். மூன்றாவது நாளன்று சாஷா வந்தாள்; நிகலாயிடம் பேசினாள்:

"எல்லாம் தயார். இன்று ஒரு மணிக்கு...."

"அவ்வளவு சீக்கிரமா?" என்று அதிசயித்துக் கேட்டான் அவன்.

"ஏன் கூடாது? ரீபினுக்காகத் துணிமணிகள் தேட வேண்டியதும், அவன் போயிருக்க ஓர் இடம் தேடுவதும் தான்பாக்கி, மற்றதையெல்லாம் கோபுனே செய்து முடித்து விடுவதாகச் சொல்லி விட்டான். ரீபின் ஒரே ஒரு தெருவை மட்டும் தான் கடந்து வரவேண்டும். உடனே மாறுவேடத்தில் இருக்கும் நிகலாய் வெஸோவ்ஷிகோவ் அவனைச் சந்தித்து, அவன் மீது ஒரு கோட்டைப் போட்டு மூடி, தலையிலே ஒரு தொப்பியையும் வைத்து, அவனைக் கூட்டிக்கொண்டு போய் விடுவான். நான் சகல துணிமணிகளோடும் காத்திருப்பேன். அவன் வந்ததும் அழைத்துக் கொண்டு போவேன்."

"பரவாயில்லை, சரி, ஆனால், கோபுன் என்பது யார்?" என்று கேட்டான் நிகலாய்.

"உங்களுக்கு அவனைத் தெரியும். அவனுடைய அறையில் தான் நீங்கள் யந்திரத் தொழிலாளிகளுக்கு வகுப்பு நடத்தினீர்கள்."

"ஆமாம், ஞாபகமிருக்கிறது. அவன் ஒரு தினுசான ஆசாமி."

"அவன் ஓர் ஓய்வூதியம் பெறும் சிப்பாய். ஒரு தகரத்தொழிலாளி, அவனுக்கு அறிவு வளர்ச்சி காணாததான். என்றாலும் எந்த பலாத்காரத்தையும் அவன்முழு மூச்சோடு எதிர்ப்பவன்.....அவன் ஒரு தினுசான" தத்துவார்த்தவாதி" என்று கூறிக்கொண்டே ஜன்னலுக்கு வெளியே பார்த்தாள் சாஷா. தாய் வாய்பேசாது அவள் கூறியதைக் கவனித்துக் கொண்டிருந்தாள். அவள் மனத்தில் ஒரு மங்கிய எண்ணம் வளர்ந்தோங்கியது.

"கோபுன் தன் மருமகனையும் விடுவிக்க எண்ணுகிறான். எவ்சென்கோவை ஞாபகமிருக்கிறதா? உங்களுக்குக் கூட அவனைப் பிடித்திருந்ததே. எப்போதுமே அவன் ஓர் அதிசுத்தக்காரப் பகட்டான ஆசாமிதான்.

நிகலாய் தலையை அசைத்தான்.

"அவன் சகல ஏற்பாடுகளையும் செய்து விட்டான்," என்று மேலும் தொடங்கினாள் சாஷா. "ஆனால் நமது முயற்சி வெற்றியடையுமா என்பதில் எனக்குச் சந்தேகம் தோன்றி வருகிறது. எல்லாக் கைதிகளும் வெளியே காற்று வாங்கிக்கொண்டிருக்கும் வேளையில் தான் இது நடக்கப்போகிறது. ஆனால், அந்தச் சமயத்தில் அவர்கள் இந்த ஏணியைப் பார்த்து விட்டால், பலபேர் அதை உபயோகித்துத் தப்பித்து ஓட எண்ணலாம். அதுதான் பயமாயிருக்கிறது."

> "நமது இலட்சியம் சின்னஞ்சிறு சில்லரை வெற்றியை நோக்கியல்ல ; பரிபூரணமான மகோன்னத வெற்றியை நோக்கியே....."

அவள் தன் கண்களை மூடி மௌனத்தில் ஆழ்ந்தாள். தாய் அவளருகே சென்றாள்.

"அப்படியானால் அவர்கள் ஒருவருக்கொருவர் முண்டியடித்து காரியத்தையே கெடுத்து விடுவார்கள்....."

மூன்று பேரும் ஜன்னலருகிலேயே நின்றார்கள். நிகலாய்க்கும் சாஷாவுக்கும் பின்னால் தாய் நின்று கொண்டிருந்தாள். அவர்கள் இருவரது விறுவிறுப்பான பேச்சு தாயின் உள்ளத்தில் பற்பல உணர்ச்சிகளை எழுப்பியது.

"நானும் போகிறேன்" என்று திடீரெனச் சொன்னாள் அவள்.

"ஏன்?" என்று கேட்டாள் சாஷா.

"நீங்கள் போக வேண்டாம், அம்மா. ஏதாவது நேர்ந்து விடக்கூடும். போகாதீர்கள்" என்று போதித்தான் நிகலாய்.

தாய் அவனைப் பார்த்தாள்.

"இல்லை. நான் போகிறேன்" என்று மெதுவாக, ஆனால் உறுதியோடு சொன்னாள் அவள்.

இருவரும் ஒருவரையொருவர் சட்டெனப் பார்த்துக் கொண்டார்கள்.

"எனக்குப் புரிகிறது." என்று சொல்லிக் கொண்டே தோளைக் குலுக்கிக்கொண்டாள் சாஷா. பிறகு அவள் தாயின் பக்கமாகத் திரும்பி, அவளது கையைப் பிடித் தெடுத்து தாயின் உள்ளத்தைத் தொடும் எளிய குரலில் பேசினாள்:

"ஆனால், நீங்கள் சிந்தித்து உணர வேண்டும். அப்படி நடக்குமென்று வீண் நம்பிக்கை கொள்வதில் அர்த்தமே இல்லை...."

"என் அன்பே!" என்று நடுநடுங்கும் கையால் அவளை இழுத்து அணைத்துக் கொண்டே கத்தினாள் தாய். "என்னையும் கூட்டிச் செல்லுங்கள். நான் ஒன்றும் உங்கள் வழிக்கு இடைஞ்சலாயிருக்க மாட்டேன். நான் போகத்தான் வேண்டும்! தப்பிச் செல்வது நடக்கக்கூடிய காரியம் என்று என்னால் நம்பவே முடியவில்லை."

"இவள் எங்களோடு வருகிறாள்!" என்று நிகலாயைப் பார்த்துச் சொன்னாள் அந்தப் பெண்.

"அது உங்கள் பாடு" என்று தலையைத் தொங்கவிட்டவாறே பதில் சொன்னான் நிகலாய்.

"ஆனால், நாம் இருவரும் சேர்ந்து போகக்கூடாது. நீங்கள் அந்த வெட்ட வெளி மைதானத்துக்கு அப்பாலுள்ள தோட்டத்திலே போய் இருக்க வேண்டியது. அங்கிருந்தே சிறைச் சாலைச் சுவரைக் காணமுடியும்; ஆனால் யாராவது உங்களைப் பிடித்து ஏதாவது கேள்வி கேட்டால், அங்கு வந்ததற்கு என்ன காரணம் கூறுவீர்கள்?"

"ஏதாவது சொல்லி சமாளித்துவிடுவேன்" என்று ஆர்வத்தோடு சொன்னாள் தாய்.

"மறந்து விடாதீர்கள், சிறைச்சாலைக் காவலாளிகளுக்கு உங்களை நன்றாகத் தெரியும்!" என்று எச்சரித்தாள் சாஷா;

"அவர்கள் உங்களை அங்கு கண்டு விட்டால்....."

"அவர்கள் என்னைக் காணமாட்டார்கள்!"

தாய் தனது உள்ளத்திலே எழுந்த ஒரு நம்பிக்கையினால் புத்துயிர்பெற்றுப் பார்த்தாள். அந்த நம்பிக்கைச் சுடர் அவளது இதயத்திலே கொஞ்சங் கொஞ்ச மாகக் கனன்று விரிந்து, இப்போது திடீரென்று ஒரு ஜுர வேகத்துடன் பிரகாசமாக விம்மியெழுந்து எரிந்தது.

"ஒருவேளை அவனும்கூட!"

ஒரு மணி நேரம் கழித்துத் தாய் சிறைச்சாலைக்குப் பின்புறமுள்ள வெட்ட வெளியில் இருந்தாள். ஊசிக் காற்று சுள்ளென்று வீசியது. அந்தக் காற்று அவளது உடைகளைப் பிளந்து புகுந்து வீசியது. உறைந்துபோன தரையில் மோதியறைந்தது; அவள் சென்று கொண்டிருந்த தோட்டத்தைச் சுற்றியுள்ள முள்வேலியை அசைத்தாட்டியது; அதன்பின்னர் உருண்டோடிச் சென்று சிறைச்சாலைச் சுவர்மீது முழுவேகத்தோடும் முட்டி மோதியது. சிறைச்சாலைக்குள்ளே எழும் மனிதக் குரல்களை அந்தக் காற்று வாரியெடுத்து வான வெளியில், நிலவின் தொலை முகட்டை அவ்வப்போது ஒரு கணம் காட்டி கட்டிப் பறந்தோடும் மேக மண்டலத்தில் சுழற்றி விட்டெறிந்தது.

(தொடர்ந்து வரும்)

# மது போய்விட்டாள்

## மகீன்.எம்.சகீல் மாருகொன

வானில் நட்சத்திரம் ஒன்று எரிந்து விழுந்தது. அதன் ஆயுள் முடிந்துவிட்டது போலும். கட்டிலை பார்த்தேன். அவள்- என் 'மதுமிதா' உதிரப் போகும் ஒரு நட்சத்திரமாய் கண்மூடிப் படுத்திருந்தாள்.

'ஓ....மது' நெஞ்சம் கனத்தது, தலை தடவினேன். மெதுவாய் கண்திறந்து கண்ணீர் வழிய எனைப் பார்த்தாள். அவள் உதடுகள் துடித்தன.

"என்னம்மா...."

அவள் முகம் நோக்கி குனிந்தேன்.

"ரவி.... நான் எந்தத் தப்பும் பண்ணல....ப்ளீஸ் நீயாவது என்ன நம்புவியா....?"

திக்கித் திணறி வார்த்தைகள் வந்தன. துடித்துப்போனேன்.

"மது என்னம்மா இது.... நீ அழக்கூடாது ப்ளீஸ் நான் ஒன்ன நம்புறேன், முழுசா நம்புறேன். ஏன்னா என் மதுவுக்கு துரோகம் செய்யத் தெரியாது."

ஆணாயிருந்தும் அழுதேன்-அவளறியாமல்.

'இறைவா! யாரோ பண்ணிய பாவத்திற்கு தண்டனை இந்த பூவுக்கா? வேண்டாம் இறைவா! இவளை உன்னிடமே அழைத்துக்கொள். ஒவ்வொரு வினாடியும் வார்த்தைகளால் ரணப்படுத்தும் இதயமற்ற மனிதர்களிடமிருந்து அவளுக்கு விடுதலை வேண்டும்.'

கண்களை மூடிக்கொண்டேன். என் மதுவுடன் கழித்த பசுமை நினைவுகள். ஓ.... எவ்வளவு இனிமையான நாட்கள்.

சின்ன வயதிலிருந்தே அவளுக்கு நான், என்று குடும்பம் பேசியது. வளர வளர கனவுகளும் வளர்ந்தன, காதலும் மலர்ந்தது. என் கல்லூரிப் படிப்பு முடிய சொந்தக் கடை காத்திருந்தது. ஆனால் மது படிப்பு, படிப்பு என்று எப்பொழுதும் படிப்பில் நோக்கம். புலமைப் பரிசிலில் ரஷ்யா அவளை அழைக்க, வீடு சந்தோஷப்பட்டது. பிரிவு இருவருக்குமே புரிந்தது. போகும்போது இரகசியமாய் என் நெற்றியில் அவள் தந்த முத்தம் இன்றும் ஈரமாய்....

சந்தோசம் நிச்சயம் இல்லையே, ஒரு மடலில், மது, விஷ ஜுரம் வந்து கஷ்டப் பட்டதாயும், இரத்தம் முழுதும் மாற்றப் பட்டதாயும் எழுதியிருந்தாள்.

உயிரைக் காப்பாற்ற அன்று ஏற்றப்பட்ட இரத்தத்தில் தான் எமன் எச்.ஐ.வி. எனும் தன் முகவரியை அனுப்பியுள்ளான்.

உடம்பில் நோயும், மனதில் விரக்தியுமாய் ஆறுதல் தேடி வந்தவளுக்கு அக்கினித் திராவகம் ஊற்றியது என் சுற்றம். அவள் நடத்தையில் சந்தேகப்பட்டது. பெற்ற தாய் தந்தையே தூரமாகிப் போனார்கள்.

'வெள்ளத் தோலக் கண்டதும் மயங்கிட்டா'

'இங்க பூன மாதிரி இருந்தா, அங்க போய் என்ன ஆட்டம் போட்டாளோ? யார் கண்டா.'

ஊர் பேசியது. வெறும் வாயை மென்று கொண்டிருந்தவர்களுக்கு இவள் 'அவல'ானாள்.

"ரவி...."அவள் கண்களில் அணையப் போகும் தீபத்தின் ஒளி.

"...ஒன் மடில தலை வச்சுக்கணும் போல இருக்குது" என் மடியில் மெதுவாய் வளர்த்தினேன். மெல்லிய கரங்களால் என் முகம் தடவினாள். அழுகையை விழுங்கினேன்.

"நீ மட்டும் என்ன நம்பாம இருந்திருந்தா, என் ஆத்மா தவிச்சுப்போயிருக்கும் ரவி."

என் ஆத்மா தவித்தது, அவள் வார்த்தையை கேட்டு. 'எய்ட்ஸ்' அரக்கனின் கோரப் பிடியில் இந்த மொட்டு மலராகும் முன்பே சருகாவதை பார்வையாளனாய்ப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அணைகள் தண்ணீருக்குத்தான், கண்ணீருக்கல்ல. அவள் இமைகளில் விழுந்த என் கண்ணீர்த்துளிகள், வரண்ட பாலையின் ஊற்றாய் அவள் கன்னங்களில் வழிந்தது.

என் கண்ணீர் துடைத்தாள்.

"நீ சிரிச்சு மட்டும்தான் ரவி பார்த்திருக்கிறேன், இதற்குப் பிறகும் பார்க்கணும்."

போலியாய், என்றோ மறந்துபோன புன்னகையை உதடுகள் பாரமாய்ச் சுமந்தது.

என் முகத்தை நிச்சலனமாய் பார்த்தாள். பார்வை வித்தியாசமாய் இருந்தது. இருபத்திரெண்டு வருட பூவுலக வாழ்வுக்கு முற்றுப்புள்ளி. மது என்ற தொடர் கதை, சிறுகதையாய் முடிந்துபோகும் தருணம். அவள் உதடுகள் லேசாய் துடித்தன.

"ஐ.....லவ்.....யூ...ரவி"

அழுகை கூட மறந்து போனது. ஒரு வினாடியில் உயர்திணை அஃறிணையானது.

"மிஸ்டர் ரவி...ப்ளீஸ் கொஞ்சம் தள்ளி நில்லுங்க; பிணத்துக்கிட்ட இருக்கிறது அவ்வளவு நல்லதில்ல"

டாக்டரின் வார்த்தைகளில் எதுவும் விளங்கவில்லை. 'மது....பிணம்' என்றதைத் தவிர மரணம் இவ்வளவு கொடூரமானதா? சென்ற நிமிடம்வரை என்னுடன் பேசிய மது; இந்த நிமிடம் பிணம்.



என் மதுவின் மரணத்திற்கு 'எய்ட்ஸ்' மட்டும் காரணமல்ல. உணர்வுகள் அற்ற உறவுகளும் தான். அன்பை மட்டுமே யாசித்த அந்த பரிதாப ஜீவனின் அட்சய பாத்திரத்தில் முட்களைப் போட்டீர்கள். அவள் முதுகில் இல்லாத அழுக்கை இருப்பதாய் சொல்லி, உங்கள் நெஞ்சின் அழுக்கை மறந்து போனீர்கள்.

'மனிதம் மரணித்த மானுடம் இது; வாழ்வை விட சாவு சந்தோசமானது, குட் பாய் மது, என்றாவது ஒரு நாள் நிச்சயம் உனை தேடி வருவேன்.'

மரணம் முடிவல்ல....!?



படிப்பகம்

www.padippakam.com

# கண்ணாமூச்சி

"திலீப்! எனக்கு மாற்றல் உத்தரவு வந்துவிட்டது" உள்ளார்ந்த வேதனையுடன் சொன்னாள் உஷா.."

"நிஜமாகவா?"- அவள் சொன்னதைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியுற்ற குரலில் கேட்டான்.

'ஆமாம்...' என்பதற்கு அடையாளமாய்த் தலையை மேலுங்கீழும் அசைத்து விட்டு மேலே பேச முடியாமல் மணலில் விரலினால் கோடு போட்டுப் போட்டு அழித்தாள்.

"உஷா! வேலையை ராஜினாமா செய்து விடேன்.."

"எப்படி... எப்படி விட முடியும்?"

"உஷா... என் மீது நம்பிக்கை இல்லாமல் தானே இப்படி கேட்கிறாய்?"

"திலீப்! உங்கள் மேல் நம்பிக்கை இல்லாமல் இருந்திருந்தால் இப்படி உங்கள் எதிரில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்க மாட்டேன்..."

"உன்னைப் பிரிந்து என்னால் இருக்க முடியாது. மாற்றல் என்று நீ சொன்னவுடன் அப்படியே நொறுங்கிப் போய் விட்டேன். நீ போக வேண்டாம் உஷா..." அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு கெஞ்சும் குரலில் கேட்டான் திலீப்.

"திலீப்! என்னால் மட்டும் உங்களைப் பிரிந்து இருக்க முடியுமா? ஆனால்..." என்று மேலே பேச முடியாமல்... அப்படி பேசினால் அவன் மனம் வருந்துவானோ என்று பயந்து அப்படியே நிறுத்தினாள்.

"ஏன் தயங்கறே? சும்மா சொல்லு...."

'அவனிடம் எப்படிச் சொல்ல முடியும்? சொன்னால் எப்படி ஏற்றுக் கொள்வான்? அந்த வார்த்தைகளினால் ஏற்படும் விளைவுகள் எந்த மாற்றத்தை ஏற்படுத்துமோ... வேண்டாம்...' சொல்ல வந்த வார்த்தைகள் நெஞ்சுக்குழியில் அடைபட்டு, சிக்கித் திணற, அவள் மௌனத்தைக் கடைப்பிடித்தாள்.

"இவனுக்கே நிரந்தரமாக வேலை இல்லை. அன்றாடங் காய்ச்சியான இவனை நம்பி எப்படி வேலையை விடுவது என்று தயங்கறே... அதானே...?" திலீப் சற்று உணர்ச்சி வசப்பட்டு அவளைப் பார்த்துக் கேட்டான்.

"திலீப்... நான் சொல்றதைக் கேட்டு தப்பா எடுத்துக்காதீங்க... உண்மையைத் தைரியமா ஒத்துக்கணும். நீங்க ஒரு ஜேர்னலிஸ்ட்... ஆனால் எந்தப் பத்திரிகையுமே உங்களைச் சரியா பயன்படுத்திக்கலையே! அப்பப்போ நீங்க எழுதறதுக்கு கிடைக்கிற சன்மானத்தை வெச்சு எப்படி காலந்தள்ளுறது? நீங்க ஒரு பத்திரிகையிலே நிலையான வேலை தேடிக்கணும்."

"இப்போ நான் உங்கிட்டே மனம் திறந்து சொல்றேன். நான் சம்பாதிக்கணும். அந்தச் சம்பாத்யத்திலே உன்னைக் காப்பாத்தணும்... நீ வேலைக்குப் போகக் கூடாது... பூ மாதிரி இருக்கிற நீ வாடிவதங்கக் கூடாதுன்னெல்லாம் தான் நினைக்கறேன். ஆனால் கற்பனை அப்படியே நின்று விடுமோன்னு பயமா இருக்கு. நான் எவ்வளவோ முயற்சி செய்யறேன். நிரந்தர வேலை கிடைக்க மாட்டேங்குது... நான் என்ன செய்யறது? நீயே சொல்லேன்!" அவன் பலவீனமான குரலில் சொல்லி வருந்தினான்.

"வேலை இல்லாமல் எத்தனை நாள்தான் இருக்க முடியும்? எப்பொழுதோ ஒரு சமயம் வரும் பணம் எப்படி போதும்?

## இவ்வளவுதானா? இதுதானா? என்னிடம் மறைக்க எப்படி மனது வருகிறது? என்னைப் புரிந்துகொண்டது இவ்வளவுதானா?

அதற்காக கல்யாணம் செய்து கொள்ளாமல் எப்படி இருக்க முடியும்? நான் ஒருத்திதான் சம்பாதிக்கிறேனே. எப்படியாவது ஒரு வேலை கிடைக்காமலா போய் விடும்? அதுவரை எனக்கு வரும் சம்பளத்தில் குடித்தனம் நடத்துவோம். மேலும் அதுவரை என் குடும்பத்தினரும் சும்மா இருக்க மாட்டார்கள்... இப்பொழுதே என் தங்கை வேறு கல்யாணத்திற்குக் காத்துக் கொண்டிருக்கிறாள்." அவள் மன எழுச்சிகளை அடக்கிக் கொண்டு மெல்லிய குரலில் அழுத்தமாய்க் கூறினாள்.

"உஷா!... உன்னிடம் வெளிப்படையா சொல்றேன். சில அத்தியாவசியமான செலவுகளுக்கும் கூட என்னிடம் பணம் இல்லை... கடன் வேறே இருக்கு. இப்படிப்பட்ட நிலையில் கல்யாணத்தைப்பற்றி யோசிக்கவே பயமா இருக்கு..."

அதற்கு மேல் அவளால் அவனை வற்புறுத்த முடியவில்லை. எதுவுமே பேசாமல் சில நிமிடங்கள் மௌனத்தில் கரைந்தன.

"நேரமாயிடுத்து... கிளம்பலாம்..." என்று சொல்லிவிட்டு எழ, அவனும் பின் தொடர்ந்தான்.

✖☆★✖

"ஸார்... ஸார்..." என்ற குரல் கேட்டு உள்ளேயிருந்து வெளியே வந்தான் திலீப்...

"இந்தக் கவரை உங்ககிட்டே கொடுக்கச் சொன்னாங்க ஸார்..." ஒரு சிறுவன் அவனிடம் ஒரு கவரைக்கொடுத்தான்.

"யார் கொடுத்தது."

"ராமரத்னம் என்பவர்... உங்களுக்கு மாமா முறை வேண்டுமாம். அவர் உங்களைத் தேடிண்டு இங்கு வந்தார். கதவு பூட்டி இருந்தது. என்னிடம் கொடுத்து உங்களிடம் கொடுக்கச் சொன்னார்." என்று படபடப்பாய்ச் சொல்லிவிட்டு "நான் வர்றேன் ஸார்..." என்று கிளம்பினான்.

'கவர் இவ்வளவு பெரியதாக இருக்கே... ராமரத்னம் என்று மாமாவா? யார் அவர்?' என்று குழப்பத்துடன் கவரைப் பிரித்தான்.



உமாசேகர்

உள்ளே பத்தாயிரம் ரூபாய் இருந்தது. ஒன்றுமே புரியாமல் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தான்.

"அன்புள்ள திலீப்! உனக்கு மாமா முறை ஆக வேண்டும் நான். எனக்கு வாரிசு என்று சொல்லிக் கொள்ள யாருமில்லை. நீ கஷ்டப்படுகிறாய் என்பதை அறிந்தேன். என்னால் முடிந்த உதவி இது. நான் காசிக்குப் போகிறேன். என் வாழ்த்துக்கள் உனக்கு. உன் மாமா ராமரத்னம்."

'யார் இந்த மாமா? நான் இங்கு இருப்பதை எப்படி அறிவார்? இத்தனை நாள்கள் எங்கே போய் இருந்தார்? நம்பவே முடியவில்லையே...!' என்று ஏதேதோ நினைத்தவனாய், பணத்தை எடுத்துக் கொண்டு வீட்டுக்குள் போனான்.

"முதலில் கடன்களை எல்லாம் அடைக்க வேண்டும். கஷ்டப்பட்டு நல்ல வேலை தேடிக் கொண்டதும் அதிர்ஷ்ட தேவதை கதவைத் தட்டும் பொழுது திறந்து வைத்துக் கொள்ள வேண்டும்." அவன் தனக்குள் ஏதேதோ கற்பனைகள் செய்து கொண்டு மகிழ்ச்சியில் மூழ்கினான்.

அன்று உஷா அவனைப் பார்க்க அவனுடைய அறைக்கு வந்தாள்.

"வா உஷா! உன்னை என்னால் சந்திக்க முடியவில்லை. ஒரு கவர் ஸ்டோரிக்காக அலைந்து கொண்டு இருக்கிறேன்..."

"திலீப்! இன்று என்ன இவ்வளவு சந்தோஷமா இருக்கீங்க? என்ன விஷயம்?"

"எனக்கு ஒன்றும் வித்தியாசம் தெரியலையே... நான் அதே பழைய திலீப் தான்..."

"அப்படி என்றால் சரிதான்." என்று சொல்லிவிட்டு- "திலீப்! நான் கண்டி போகிறேன்... அதைச் சொல்லிவிட்டுப் போகத் தான் வந்தேன்..."

"நான் கூட கொழும்பு போகிறேன். ஒரு கவர் ஸ்டோரி விஷயமாய்..."

அவள் அதற்கு பதில் சொல்லாமல் அவனையே பார்த்தாள்.

அவன் பணத்திற்காகப் படும் கஷ்டத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் அவனுக்கு உதவி செய்தே ஆக வேண்டும் என்ற உந்துதலில் தன் கழுத்தில் இருந்த சங்கிலியை விற்று அவனுக்கு ஒரு பொய்யான மாமாவை சிருஷ்டித்து அவனுக்குப் பணம் அனுப்பியவள் அவள்தான். வீட்டில் சங்கிலியை பஸ்ஸில் யாரோ அறுத்துக் கொண்டு போய்விட்டதாகச் சொல்லி சமாளித்துவிட்டாள்.

திலீப் அந்தப் பண விஷயத்தை அவளிடம் அவனாகவே தெரிவித்து மகிழ்ச்சி அடைவான் என்று எதிர்பார்த்தாள்.

"உஷா! உன்னிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும்!"

அதைக் கேட்டு அவள் சடாரென்று நிமிர்ந்தாள். 'இவன் சொல்லப் போகிறான்... நான் தான் அனுப்பினேன் என்று இவனிடம் சொல்லவே கூடாது.'

"நான் இந்த இடத்தைக் காலி செய்து கொண்டு வேறு இடம் போகலாம் என்று இருக்கேன்.

"ஓஹோ!" இவன் இன்னும் சொல்லவில்லை. சின்னச் சின்ன விஷயத்தைக் கூடச் சொல்லும் இவன் இவ்வளவு பெரிய விஷயத்தைச் சொல்லாமல் இருக்க மாட்டானே!'

"இந்தா" அவளிடம் 'தினமுரசு' கொடுத்து விட்டு... "இதில் என் கட்டுரை வந்திருக்கு" அவளிடம் சந்தோஷமாய்க் கொடுக்க அவள் அதை வாங்கிக் கொண்டாள்.

'இவ்வளவுதானா? இது தானா? என்னிடம் மறைக்க எப்படி மனசு வருகிறது... என்னைப் புரிந்து கொண்டது இவ்வளவு தானா?

"சரி... நான் வர்றேன்.." என்று புறப்பட்டு வெளியே வந்தாள்.

ஆனால் மனசுக்குள் 'நிச்சயம் இவன் சொல்லுவான்' என்று எதிர்பார்ப்பு. அவனையே திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு வெளியே வரும்பொழுது...

"உஷா! ஒரு நிமிடம்..."

அவள் முகம் மலர அவனை ஏறிட்டு நோக்க

"மீண்டும் எப்பொழுது வரு வாய்?"

அந்தக் கேள்வியில் அவள் உடைந்து போனாள். அதற்குமேல் அங்கு நிற்க முடியாமல் அவனுக்குப் பதில் சொல்ல விரும்பாமல் தெருவில் இறங்கி நடந்தாள்.

'திலீப்! உங்களைப்பற்றி நான் எப்படியோ நினைத்துக் கொண்டிருந்தேன். கேவலம் பத்தாயிரம் ரூபாய்க்காக என்னிடம் மறைத்து விட்டீர்களே... என்னைப்பற்றிய கணிப்பு இவ்வளவு தானா? இனிமேல் நாம் சந்திக்கப் போவதில்லை... அதில் அர்த்தமும் இல்லை.. திருமணம் செய்து கொள்வதிலும் அர்த்தமில்லை... நம்முடைய கடைசி சந்திப்பு இதுதானோ?'

தெருக்கோடியில் சென்று அவள் திரும்பிப் பார்த்தபொழுது திலீப் நின்று கொண்டிருந்தான்.

கையை அசைத்து விட்டு- 'திலீப்! இது தான் நம்முடைய கடைசி சந்திப்பு... நான் உங்களை விட்டு நிரந்தரமாய்ப் பிரியப் போகிறேன். இதை நேரில் சொல்ல முடியவில்லை... காரணம் நீங்கள்தான்...' மனசுக்குள் முணுமுணுத்துக் கொண்டு நடந்தாள்.

ஆனால், திலீப்...? தனக்குள் சிரித்துக் கொண்டான். அந்தப் பணத்தை அனுப்பியது உஷாதான் என்பதைப் புரிந்து கொண்டான். அவளுக்குத் தன்மீது இருக்கும் அன்பின் முன்னால் எல்லாமே அடிபட்டுப் போய் விட்டன.. 'திருமணம் முடிந்த பிறகு அவளிடம் சொல்ல வேண்டும்...!'

# என் இனிய ஸ்நேகா

வாருங்கள் கை குலுக்கிக் கொள்வோம்.

நான் நவீன்! நவீனயுக யுவன் (யுவதியின் ஆண்பால் சார்பான சொல் யுவன்தானே?) வயது 28+.

என் அவள்- என்னவள் ஸ்நேகா!

என்னைப் பற்றிச் சொல்வதற்கு முன் எனக்கொரு சத்தியம் செய்து கொடுங்கள். ஏனெனில்- நான் மத்திய அரசில் ஒரு பொறுப்பான பதவியில் இருக்கிறேன். நம்புங்கள்......நானொரு கௌரவமான சமூகப் பிரஜை. நான் சொல்லப்போகும் விடயம் என் கௌரவத்தைப் பாதிக்கக்கூடாது. உள்ளுக்குள் நான் காலம்பூராவும் அழவும் தயார். ஆனால் வெளியே சிரித்து வாழ்வது எனது கடமை. அதனால் யாரிடமும் சொல்ல மாட்டீர்கள் என்று எனக்கொரு சத்தியம் செய்து கொடுங்கள். ப்ரொமிஸ்!

பிறப்பில் யாரும் கெட்டவனாக உருவெடுப்பதில்லை. சந்தர்ப்பசூழ்நிலைகள்தான் மனிதனைக் கைதியாக்குகின்றன. நானும் சூழ்நிலையால் குதறப்பட்டு, சித்திரவதைப் படுத்தப்பட்டு, இரத்த விளாராக்கப்பட்டு.....

கடந்த காலங்களில்: சிவப்பாக-புஷ்டியாக-சவரம் செய்து இளம் பச்சை வாங்கிய கன்னத்தோடு, 'காலாபவன்' மோகன்லாலின் தம்பி மாதிரியான தோற்றத்தில் இருந்த நான்.....இப்போது கொஞ்சம் மெலிந்து, கொஞ்சமே கொஞ்சம் நிறம்மாறி, கொஞ்சமே கொஞ்சமே கொஞ்சம் கெட்டுப்போய்.....

நான் கெட்டுப்போனதற்குக் காரணம்... காதல்!

அந்த இதமான மூன்றெழுத்துச் சுகம் எனக்குள் மட்டும் முள்ளாய்ப் போனது ஏன்?

அதுதான் விதி!

ஸ்நேகா....என் கல்லூரி நண்பி. ஒரு போது என்னைக் காதலிப்பதாகச் சொன்னாள். காதலியானாள். காதலை ஆதரித்தேன். காதலனானேன். நாமிருவரும் காதலித்தோம். காதலர்களானோம்.

ஐஸ்கிறீம் சுவையை அவளுதடுகளில் நான் உணர்ந்து கொண்டதுமுண்டு. யப்பா... உலகை வெல்லும் சக்தி அதற்குண்டு.

ஸ்நேகா...இப்போதும்-எப்போதும் அவள் ஞாபகம்தான்.

ஸ்நேகா....உச்சரிக்கும்போதே உதடு இனிக்கிறது.

அப்படிப்பட்ட ஸ்நேகாவுக்கு என் குருதிக் கையெழுத்தில் நான் காதல் கடிதம் கூட எழுதியதுண்டு. அவளுக்காக தீக்குளிக்கவும் சம்மதித்ததுண்டு.

அப்போது....அவளே எனது அரசாங்கம்! அவளே எனது சொர்க்கம்! இப்படியாக....

எனக்குள் சுவாசமாகிப்போன ஸ்நேகா, நம் காதலுக்கு நெருப்பூட்டி எனக்குள் நச்சுப் புகையூட்டிய காரணம் ஒன்றும் விசித்திரமல்ல.

பணக்காரக் காதலி+பணக்கார அப்பா.

ஏழைக்காதலன்+ ஏழைத்தாய்.

இப்படி எத்தனை எத்தனை சினிமா பார்த்திருப்பீர்கள். அத்தனை சினிமாக்களிலும் மேற்படி கருப்பொருளின் வடிவம் ஒன்றாய்த் தானேயிருந்திருக்கிறது.

ஒருநாள்!

ஸ்நேகாவின் அப்பா, அதே ஸ்நேகாவோடு என்வீடு தேடிவந்து, என் தாய் அதிசயிக்க...யிக்க....யிக்க கேட்டார்.

"நீ ஸ்நேகாவை லவ் பண்றியா?"

நான்அம்மாவை ஏறிட்டுக்கொண்டே சொன்னேன். "ஆம்!"

திரும்பி ஸ்நேகாவைக் கேட்டார்.

## பிரிந்துபோன காதலியைக் காலங்கடந்தும் அதே காதலியாகக் காண நேரிட்டால் மனதுக்குள் சந்தோஷமேற்படும். ஆனால்... அதே காதலியை ஒரு.... ஒரு....



"நீ இவனை விரும்புறியாம்மா?"

நான் ஆவலோடு எதிர்பார்த்தேன்.

'ஸ்நேகா....சொல்லு ஸ்நேகா'

"எனக்கு இவனை யாருன்னு தெரியலப்பா" சொன்னாள்.

சுள்ளென்று எனக்கு மின்சாரம் பாய்ந்தது.

"தும்புத்தடி செய்யுறவன் வெற்றுடப்பாவுக்கு ஆசைப்படலாம். ஆனால் பவுடர் டப்பாவுக்கு ஆசைப்படக் கூடாதுடா."

ஸ்நேகாவின் அப்பா சொல்லிவிட்டு, ஸ்நேகாவோடு வெளியேறிப் போக.... என்னோடு சேர்ந்து என் அம்மாவும் பொடிப் பொடியாய் உதிர்வது தெரிந்தது.

அந்த இரவில்-

மாவனல்லை ரிஸ்கி ஷெரீப்

என்னோடு சேர்ந்து என் தாயும் தூக்கம் தொலைத்தாள்.

காதலுக்காக நான் அழ-

எனக்காகத் தாய் அழுதது உண்மை.

அதன்பின்பு-

எப்படியோ மூன்று வருடங்கள் உருண்டோடி..... வாழ்க்கையில் நிரம்பவும் மாற்றங்கள் ஏற்பட்டு....நானும் தாயும் ஊரைவிட்டு வேறூர் வந்து, படித்துப் பட்டம் பெற்று, கவர்ண்மெண்டில் உத்தியோகம் கிடைத்து....

சிகரட் மட்டுமே புகைத்துப் பழகிய எனக்கு 'கஞ்சா' ப் பழக்கமும் தொற்றி, ஒரு மாதிரியான பெண்களோடு நட்பும் ஏற்பட்டு.....

ச்சேச்சே....

என்னைப் பற்றிச் சொல்ல எனக்கே கூசுகிறது.

எப்படியோ நான் கெட்டுப்போய் விட்டேன். முழுதாக.....

ஆனால்.... எனக்குள்ளும் ஒரு உத்தமன் இருப்பதை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும். எப்படியோ....நான் தடம்மாறியதற்குக் காரணம் காதல்தானே!

ஆக-

காதல்மேல் ஆணை.... நான் கெட்டுப் போய்விட்டேன்!

இந்த நிலையில்......

நேற்று அவளைச் சந்தித்தேன்- ஸ்நேகாவை!

மூன்று வருடங்களுக்குப் பின்னையதோர் சந்திப்பு.

பிரிந்துபோன காதலியைக் காலம் கடந்தும் அதே காதலியாகச் சந்தித்தால் மனதுக்குள் சந்தோஷமேற்படும். மாற்றானின் மனைவியாகக் காண நேரிட்டால் அனுதாபம் கலந்த சோகம் தழுவும். ஆனால்... அதே காதலியையொரு விபச்சாரியாகக் காண நேரிட்டால்....?

அப்படியொரு சூனியமான நிலைமை எனக்கேற்பட்டது.

என் நிலைமை எப்படியிருந்திருக்கும் என்று கொஞ்சம் ஊகித்துப் பாருங்கள்.

என் நிலைமை எந்தக் காதலனுக்குமே ஏற்படக்கூடாது.

நானும் கெட்டுப் போனவன்தான்!

ஆனால் கெட்டுப்போன என் காதலி... சதைப் பசிக்காக நேற்று ஒரு 'பலான' இடத்துக்குப் போனபோது, நான் சடுதியாகச் சந்தித்தது ஸ்நேகாவை- என் ஸ்நேகாவை!

ஸ்நேகா-

'ஏன் ஸ்நேகா உனக்கு இந்த நிலைமை?'

எனக்கு அந்தத் தனியறையில் அழுகை அடைத்தது.

அவளால் அழக்கூட முடியவில்லை.

எனக்கு மட்டுமே- மட்டும் சொந்தமாக வேண்டியவள் பொதுச் சொத்தாகிப் போய்..... சகிக்க முடியுமா பின்னே?

அப்பா காலமானது: கடன்களை அடைக்கச் சொத்துக்களை விற்றது: வறுமையினால் தாக்குப்பிடிக்க முடியாமல் போய்.... இளமையை அடகு வைத்தது.....இப்படியாக பாலு மகேந்திரா படத்துக்கு வசனம் சொல்வது போல..... அவள் சொல்லிக்கொண்டே போக..... என் நரம்பு நாளங்களில் ரசாயனம் பரவிய வேதனையை உணர்ந்தேன்.

-சதைப்பசி செத்துப்போய்.....

உள்ளம் ஆக்ரோஷித்தது. மனதுக்குள் போராட்டம் புயலாய்....

காதலாய்த் தொடப்போனேன் அவளை. விலகிக்கொண்டாள்.

"வேணாம் நான் அழுக்காயிட்டேன் நவீன்" என்றாள்.

"நானும் அழுக்குத்தான் ஸ்நேகா.... இப்படியொரு இடத்துல சந்திக்கிற யாருமே அழுக்குத்தான். சுத்தமில்ல," என்றேன்.

எனக்கு விக்கலெடுத்தது.

அடுத்தகணம்.....ஸ்நேகா என்னைத் தழுவிக் கொண்டாள்.

உலகமே என் கைவசமான உணர்வு. சுகமாய்.....

வறண்ட நாவுக்கு தண்ணீர் கிடைத்த இதம்.

அவளையும் அழைத்துக்கொண்டு என் வீடு வந்தேன். அம்மா, அவளை- ஸ்நேகாவை ஏற்றுக்கொள்ள மறுக்கவில்லை. என் வாழ்க்கையைப் பற்றிய கனவுகளை தனக்குள் சேமித்து வைத்திருப்பவள் அம்மா. ஆக- எனக்கொரு நல்ல வாழ்க்கை அமைவதில் அவளுக்கு உடன்பாடு இல்லாமல் போகாது.

ஸ்நேகாவுடைய அந்தரங்க வாழ்க்கை அம்மாவுக்கு தெரியாது. தெரியவும் வேண்டாம். கடைசிவரை....

நானும் ஸ்நேகாவும் பழசையெல்லாம் மறந்துவிட முயன்று கொண்டிருக்கிறோம். எமக்கு ஏற்பட்ட கசப்பான சம்பவங்கள் கெட்ட கனவுமாதிரி மறந்துவிடக்கூடியவையே.

இன்றுமாலை கோயிலில் வைத்து எளிமையான முறையில் நாம் கல்யாணம் செய்துகொள்ள முடிவெடுத்துள்ளோம். எம்மை மனதார வாழ்த்துங்கள்.

அதற்கு முன் ஒரு பணிவான வேண்டுகோள்.

எனக்குக் கொடுத்த சத்தியத்தை மீறாதீர்கள். ப்ளீஸ்!



படிப்பகம்

www.padippakam.com

இலக்கிய நயம்

# மன்னவன் சின்னவன்

தருவது—ரசிகன்

"என்ன வளம் இல்லை என்னிடத்தில்?"

வீரபாண்டியன் இறுமாப்போடு கேட்டான். எதிரே அமைச்சர் மற்றும் பிரதானிகள். யாரும் எதுவும் பேசவில்லை.

எல்லாவளமும் எப்படி வந்தது? வீரபாண்டியனின் தந்தை சுந்தரபாண்டியனின் ஆட்சிக்காலத்தில் வந்தது.

சுந்தரபாண்டியன் சேர்த்துவைத்ததை வீரபாண்டியன் அனுபவித்துக்கொண்டிருக்கிறான்.

வளம் பெருக்க வகையான திட்டம் இல்லை. நாட்டின் எழில் பெருக்கத் திறனான முயற்சி இல்லை. பகைவர் படையெடுத்தால் தடுத்து நிற்க படைபலத்திலும் கூர்மையில்லை.

எப்படிச் சொல்வது? சொன்னால் சீறுவானே! எனக்கே புத்தி சொல்கிறீர்களா என்று வார்த்தைகளைக் கத்தியாக வீசுவானே!

மௌனத்தை தன் வார்த்தைகளுக்கு வரவேற்பாக எடுத்துக்கொண்டான் வீரபாண்டியன்.

"உங்கள் விழிகளுக்கு விருந்து தரப் போகிறேன். வாலிப விருந்து! வஞ்சி தரும் நடன விருந்து! மனதுக்கு இதமான மருந்து!" நகைத்தான். கரம் தட்டி அழைத்தான்.

சபை நடுவில் சுழன்று வந்து நின்றாள் ஆஸ்தான நர்த்தகி. அழகில் ராணி. ஆடத் தொடங்கி விட்டால் உள்ளத்தையள்ளும் மேனி.

அவள் இடை அசைந்தால் எதிரேயிருப்பவர் இதயம் அசையும்.

இதழ்களில் மது! விழிகளில் மயக்கம்! மார்பில் கனித்தோட்டம்!

நடனம் தொடங்கிற்று.

மன்னன் விழி கொட்டாமல் ரசித்தான்.

நடனம் அப்படி ஒன்றும் பிரமாதமில்லை. "ஆஹா! அபாரம்! கலையின் இருப்பிடம்! காவியப் பூங்குடம்! ஓவியப் பெண் மயில்! கூவிடும் பூங்குயில்!" என்றெல்லாம் மன்னன் பாராட்டினான்.

நடனம் முடிந்து சபை கலைந்தது. மன்னனின் அந்தப்புரத்தில் மயக்கும் சுந்தரி.

"உன் ஆட்டம் அபாரம்" என்றான் மன்னன்.

"சபையில் ஆடுவதை நான் நிறுத்தப் போகிறேன்!" என்றாள் அவள்.

"என் அறையில் ஆடு போதும்!"

"பின்னர் ஏன் இன்று அழைத்தீர்கள்?"

"ஆஸ்தான நர்த்தகியின் பேரெழிலை ஒரு முறையாவது சபையோர் காண வேண்டாமா. அதற்காகத்தான்!"

"உண்மையாகவா?"

"உன்மீது சத்தியமாக!"

அவளை இறுகத் தழுவினான். உடலில் தாக்கிய எழில்கள் உள்ளே தீயை விதைத்தன.

ஆஸ்தான நர்த்தகியின் விரல்கள் மன்னனின் தேகத்தில் மாயம் செய்தன.

"விரல்களில் என்ன வைத்திருக்கிறாய்? விரகதாபக் கதவைத் திறக்கும் சாவிக்கொத்தோ விரல்களில் இருக்கிறது?" என்று கிறங்கினான் மன்னன்.

"களைப்பாக இருக்கிறீர்கள் கண்ணாளா:



அதுதான் இனிப்பான வைத்தியம்!" என்றாள் நர்த்தகி.

"களைப்புக்கு வைத்தியமா? களைக்க வைக்கும் வைத்தியமா?" என்றான். அவள் குலுங்கி நகைத்தாள்.

"குலுங்கும் கனி, கொடு இப்படி!" மன்னன் சொன்னதும், செய்ததும் பொல்லாத விஷமம்.

மன்னனுக்கு அந்தப்புரத்தை விட்டு வெளியே செல்லவே விருப்பம் இல்லை.

மக்களைச் சந்திக்கவும் ஆர்வமில்லை.

"அமைச்சர் வந்திருக்கிறார்" என்றாள்.

"என்னவென்று கேள்! ஆகவேண்டியதை நீயே சொல்லிவிடு!" என்றான் மன்னன்.

இரவு முழுக்க மன்னன் தூங்குவதில்லை. பகலில்தான் தூங்கவேண்டும்.

இரவில் இன்ப யாத்திரை! பகலில் நித்திரை! தேகமெங்கும் அவள் பதித்த முத்திரை!

மன்னன் தூங்கிக்கொண்டிருந்தான். அவளோ மன்னன் சார்பாக மந்திரிகளை வேலை வாங்கிக்கொண்டிருந்தாள்.

நர்த்தகி நாட்டை ஆள்கிறாள். நமது மன்னனோ நித்திரையில் இருக்கிறான். விதியை நொந்துக்கொண்டு அவள் இட்ட ஏவல்களை செய்தனர் மந்திரிகள்.

நர்த்தகியின் செல்வாக்கு நாளுக்கு நாள் வளர்வது கண்டு அவளின் பக்தர்களாகவே நடிக்கத் தொடங்கினார்கள் பிழைக்கத் தெரிந்த சில மந்திரிகள்.

நர்த்தகியின் குடும்பம் பெரியது! அத்தனை பேரும் அரச மாளிகையில் குடியேறினார்கள்.

கோவில் சொத்தெல்லாம் அந்த குடும்பத்தின் சொத்தானது.

தட்டிக்கேட்டவர்கள் வெட்டிச் சாய்க்கப் பட்டார்கள். அநியாயம் என்று குரல் கொடுத்தோர் மறுநாள் மாயமாய் மறைந்துபோனார்கள்.

மன்னன் செவியில் எந்தச் செய்தியும் விழாமல் பார்த்துக்கொண்டனர். எப்படியோ செய்தி அறிந்த மன்னன் வினா தொடுத்தான்.

"வெட்டிச் சாய்க்கப்பட்டார்களாமே குடிமக்கள்? யார் அந்தக் கொடுமையைச் செய்தது?"

மன்னன் கேட்டதும், அவன் மார்பில் சாய்ந்து இதழ்களை உலாவிட்டு மயக்கும் மந்திரம் ஏவினாள். மடியில் தவழ்ந்து எழுந்து நெருங்கி தலைமுடி கோதினாள்.

"நான்தான் வெட்டச் சொன்னேன்?"

"ஏன்?" என்றான். இப்போது அவன் குரல் பலவீனமாகியிருந்தது.

"மன்னன் கெட்டவன் என்று நடுவீதியில் நின்று கூச்சல் போட்டார்கள்! வீரபாண்டியன் ஒழிக என்று கோஷம் போட்டார்கள்! பொறுக்குமாநெஞ்சம்? இப்போதுகூட எப்படி துடிக்கிறது பாருங்கள்!" மன்னனின் கரம் பிடித்து தன் மார்பில் வைத்தாள்.

அதற்குப் பின்னர் மன்னன் பேசவேயில்லை. நாடு நர்த்தகி குடும்பத்தின் வேட்டைக்காடாகியது.

மக்களின் பொறுமை எல்லைமீறியது. கிளர்ச்சி வெடித்தது.

"வீரபாண்டியன் ஆட்சி தொடருமானால் நமது சுந்தர நாட்டை அந்த ஆண்டவனாலும் காப்பாற்ற முடியாது!" யாரோ ஒரு வீரன் முழக்கமிட்டான்.

மக்களும் அதனை ஆமோதித்தனர். அரண்மனை முற்றுகையிடப்பட்டது.

மன்னன் தட்டி எழுப்பப்பட்டான்.

"சுந்தரபாண்டியனின் வாரிசு நானே! என்னை எதிர்க்கலாமா?" என்று கேட்டான்.

மக்கள் சிரித்தனர்.

"சிறியோன் நீ, அந்தப் பெரியோன் பெயரை உச்சரிக்கலாமா?"

"நானா சிறியோன்?" "நான் உங்கள் மன்னன்!"

"மன்னா உனக்கு திருக்குறள் தெரியுமா?"

கேட்டான் ஒருவன். அவனே தொடர்ந்து திருக்குறளில் ஒரு பாடலையும் சொன்னான்.

**"சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான் சுற்றமாச் சூழ்ந்து விடும்."**

மன்னனுக்கு புரியவில்லை.

"பெரியோரின் இயல்பு சிற்றினத்தை அஞ்சி ஒதுக்கும். சிறியோரின் இயல்பு அதையே சுற்றமாக எண்ணித் தழுவிக் கொள்ளும். அதுதான் அர்த்தம். குறள் தரும் விளக்கம்."

"ஒருவனை மதிப்பிடவேண்டுமானால் அவன் நண்பர்களை அறிந்தால் போதும். மனம் அறிவை வளர்க்கும். சேரும் இனம் மதிப்பை பெருக்கும். சேரும் இனம் தவறானால் மதிப்பையும் கெடுக்கும். நீ கெட்டாய்! உன் சுற்றத்தால் கெட்டாய்! சிறியோன் ஆனதால் அந்த சுற்றத்தை நாடினாய்! விலகு! போய்விடு!"

ஆட்சி போனது!

மன்னன் அழுதான்!

(குறள்-451, அதிகாரம்-46)

# மறக்கக்கூடாதது யாரை?

# சிந்தியா பதில்கள்

* விம்பிள்டன் டெனிசில் ஸ்டெபிகிராப் வெற்றி பெற்றுவிட்டாரே. இத்தோடு எத்தனை தடவை விம்பிள்டனில் வெற்றி பெற்றுள்ளார்?

ஆர்.ரவி. நீர்கொழும்பு.

ஐந்தாவது தடவை.

—

* இந்தியாவில் மத்திய ஆட்சி எப்படிப் போகிறது?

ஆர். ராஜேந்திரம், பதுளை.

போகிற போக்கைப் பார்த்தால் பாராளுமன்ற உறுப்பினர்களில் பாதிப்பேர் மந்திரிகளாகிவிடுவார்கள் போல் தெரிகிறது.

—

* காதலிப்பதற்கு வயது எல்லைகள் தேவையா?

ஐ.எம்.பௌசி, மருதமுனை-03.

பிஞ்சில் பழுத்தால் நன்றாய் இருக்காதல்லவா!

—

* ரசியாவில் நடைபெற்ற தேர்தல் முடிவுகள் காட்டும் உண்மை என்ன?

வி. ஜோன்சன், புத்தளம்.

கம்யுனிஸ்ட்டுக்களின் செல்வாக்கு வளர்பிறை நிலையில் இருக்கிறது. அடுத்த தேர்தலுக்குள் பூரண நிலவாக பிரகாசித்தாலும் ஆச்சரியமில்லை.

—



*அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம் அரசியல் என்கிறேன் நான். நீர் என்ன சொல்கிறீர்?

ஜெ. விஜயகுமார், திருமலை.

வன்மையாக மறுக்கிறேன். அவர்களது முதல் புகலிடம் அரசியல்தான் என்கிறேன் நான்.

—

* உடன்பிறவாத சகோதரி சிறையில்: பாவம் ஜெயலலிதா என்ன செய்வார்?

செல்வி சரோஜா நடராசா, வவுனியா.

இருக்கவே இருக்கிறது மலரும் நினைவுகள். மனதுக்குள் ரீவைன் பண்ணிப் போட்டுக்கொண்டே இருக்கலாமே.

—

* எந்தப் பாத்திரத்திற்கு எப்படி நடிப்பது என்ற நெளிவு சுழிவு தெரியாதவர்கள் எல்லாம் நடிகைகளாகிவிட்டார்களே, எப்படி?

கே. ஜவாஹர், நுவரெலியா.

நெளிவு சுழிவு இருக்கவேண்டிய இடமே வேறு. படப்பிடிப்பில் அவை வெளிப்பட்டால் போதும். அதுதான் தற்போதைய சினிமா உலகின் நியதி.

—

* தமிழக முதல்வர் மு.கருணாநிதியின் ஆட்சி எப்படி இருக்கிறது?

எம்.மகேந்திரன், பதுளை.

கண்ணிவெடிகள் மத்தியில் கால்வைப்பது மாதிரி சர்வஜாக்கிரதை. புலிகள் ஊடுருவல் என்று செல்வி செப்பினார். பதறிப் போன கலைஞர் சட்டுப்புட்டென்று சகல பொலிஸ் அதிகாரிகளையும். கோட்டைக்கு அழைத்து கூட்டம் நடத்தினார். புலிகளின் ஊடுருவலை ஒடுக்குங்கள் என்றார். கோயில் கும்பாபிஷேக அழைப்பிதழ் ஒன்றில் கலைஞரின் பெரியளவான படம் போட்டுவிட்டார்கள். அதனைக் கண்டும் காணாமல்தான் இருந்தார்கள். எதிரணி அரசியல்வாதியொருவர் கண்ணில் பட்டுவிட்டது. "ஆண்டவர் பெரியவரா, ஆள்பவர் பெரியவரா" என்று கேட்டார் பாருங்கள் ஒரு கேள்வி. கலைஞருக்கும் காதில் வீழ்ந்தது. படம் போட்டு வெளியிட்ட அதிகாரியை டிஸ்மிஸ் செய்துவிட்டார் கலைஞர். சர்வஜாக்கிரதைக்கு இவை சில உதாரணங்கள் மட்டும்.

—

* ஹலோ சிந்தியா! யாழ்ப்பாணம் வழமைக்கு திரும்புமா?

வி.பகீரதன், வவுனியா.

நாட்டின் முன்னேற்றத்தில் 50 வருசம் பின்தங்கிய பழமையில்தான் யாழ்ப்பாணம் பல வருடங்களாக இருக்கிறது. அதே பழமைக்கு திரும்புவதுதான் வழமை என்றால், உங்கள் கேள்விக்கு பதில்: ஆம்!

—

* இனப்பிரச்சனைக்கு ஐந்து மாதங்களுக்குள் தீர்வு என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளாரே?

சி.ரங்கநாதன், கொழும்பு-10.

ஐந்து வருடமென்ன, ஐந்து நிமிஷத்திலும் தீர்வு காணலாம், எப்படியான தீர்வு என்பது தானே பிரச்சனை!

—

* விசாரணைக் கமிஷன்களால் பயன் உண்டா?

திருமதி ஈஸ்வரி ராஜன், கண்டி.

உண்டு; ஆளுங்கட்சிக்கு!

—

* இங்கிலாந்தில் 3 வது டெஸ்ட் போட்டியில் இந்தியாவின் விளாசல் எப்படி?

எம். சிவராமன், கொழும்பு-7.

கங்குலிக்கு கைகொடுக்கலாம். டெண்டுல்கரிடம் எதிர்பார்த்ததுதானே. இடைக்கிடையே ஏமாற்றிவிடுகிறார் என்பதுதான் அவர் தொடர்பான வருத்தம்.

—

* சட்டவல்லுநர் சொக்ஸியின் யோசனை இனப்பிரச்சனைத் தீர்வுக்கு உதவுமா?

கே. பரமானந்தன், மட்டக்களப்பு.

முதலில் அது சொக்ஸியின் யோசனை என்பதே தவறு. சொக்ஸி சும்மா ஒரு பேச்சுக்கு சொன்னார். அது நீதியமைச்சர் ஜி.எல்.பீரிசுக்கு பிடித்துப்போய்விட்டது. அதனால் அமைச்சரே அதை ஒரு வரைவாக்கி முன்வைக்கிறார். ஆக, மொத்தத்தில் குழப்பம் தான்.

—

* ஐந்து தமிழ் கட்சிகளின் ஒற்றுமை எப்படியிருக்கிறது?

ஆர்.குணாளன், மட்டக்களப்பு.

ஓஹோ என்றும் தெரியவில்லை. ஒரேயடியாக மோசம் என்றும் சொல்லமுடியவில்லை. நிலைக்கும் என்பதற்கு உத்தரவாதமுமில்லை.

* சமீபத்தில் வெளியான திரைப்படங்களில் அழுத்தமான படம் எது? அமர்க்களமான படம் எது?

எம்.எம்.முபாரக், கல்முனை.

அழுத்தமான படம்: சிறைச்சாலை. அமர்க்களமான படம்: இந்தியன்.

—

* கமலின் 'இந்தியன்' படம் வேறு ஒரு படத்தின் தழுவல் என்கிறார்களே, உண்மையா, சிந்தியா?

இ.ராகவன், மாத்தளை.

சிவாஜி, கமல் நடித்த படம் 'நான் பிறந்த மண்'. அதனை நவீனப்படுத்திய வடிவம்தான் 'இந்தியன்'. கமலே சொன்ன தகவல் அது.

—

* டியர் சிந்தியா! நாம் மறக்கக்கூடாதது யாரை?

செ. சதீஸ், குருநாகல்.

கடன் தந்தவர்களை! ஏனென்றால் பலர் உடனடியாக மறந்துவிடும் விஷயம் அதுதானே!

* வெண்தாமரை இயக்கம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

எஸ். பிரகாஷ், கொழும்பு-6.

பொருத்தமான தீர்வைக்கேட்டால், இவர்கள் பூவைக் காட்டுகிறார்களே என்று நினைப்பதுண்டு.

# அறிமுகமே அபாரம்!

# கங்குலி 2 சதம்

இந்திய அணியில் புதுமுகம் சவுரவ் கங்குலி. இந்தப் புதுமுகத்தின் ஆரம்பமே அபாரமாக இருக்கிறது.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டிகள் இரண்டில்தான் இதுவரை கங்குலி விளையாடியுள்ளார். இரண்டிலும் சதம் போட்டுள்ளார்.

தாம் அறிமுகமான முதலாவது டெஸ்டிலும், இரண்டாவது டெஸ்டிலும் சதம் அடித்தவர்கள் இதுவரை ஐந்துபேர் மட்டும்தான். இப்போது ஆறாவது வீரராக சேர்ந்துகொண்டார் கங்குலி.

அசாருதீன், காளிச்சரண், பில் போன்ஸ்போர்டு, டவுக்வால் டர்ஸ், கிரேக் பிலிவெட் ஆகியோரே ஏனைய 5 வீரர்கள். இவர்களில் அசாருதீன் தான் அறிமுகமான முதலாவது டெஸ்டிலும், இரண்டாவது, மூன்றாவது டெஸ்டிலும் தொடர்ந்து சதம் அடித்து உலக சாதனை புரிந்தார். 84 இல் நிகழ்த்தப்பட்ட சாதனை அது. இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில்தான் அசாருதீன் அந்தச் சாதனையைப் படைத்தார். இதுவரை யாரும் அதனை முறியடிக்கவில்லை. கங்குலிக்கு அந்த வாய்ப்பு இருக்கிறது. அடுத்து கங்குலி கலந்து கொள்ளும் டெஸ்ட் போட்டியிலும் சதம் அடித்தால் அசாருதீனுடன் சேர்ந்துவிடுவார்.



இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் கங்குலி சேர்க்கப்படவில்லை. இரண்டாவது, மூன்றாவது டெஸ்ட் போட்டியில்தான் அணியில் சேர்க்கப்பட்டார்.

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 131 ரன்களும், மூன்றாவது டெஸ்ட் போட்டியில் 136 ரன்களும் குவித்து இந்திய அணியை தூக்கி நிறுத்தினார் கங்குலி.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் டெண்டுல்கரும் இம்முறை 2 சதங்களை அடித்துள்ளார்.

இங்கிலாந்தில் குவித்த 2 சதங்களுடன் டெஸ்ட் போட்டிகளில் இதுவரை 10 சதங்களை அடித்துள்ளார் டெண்டுல்கர்.




அடுத்த வாரம் முதல்
பரபரப்பான ஆரம்பம்
கொள்ளைராணி
உண்மைக் கதை
பூலான்தேவி
தருவது—ரசிகன்
பிரதிக்கு முந்துங்கள்




படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 39

## இராவணன் பூண்ட சன்னியாசி வேடம்

இராமபிரானுடைய குரலிலேயே "ஏ சீதா...! ஏ இலட்சுமணா...." என்ற குரலெழுப்பியவண்ணம் மாரீசன் மாண்டான். அவன் எழுப்பிய அவலக்குரல் சீதையின் காதில் விழுந்தது. உடனடியாகவே சீதை நிலை குலைந்தாள். தன் கணவனுக்கு ஏதோ பேராபத்து ஏற்பட்டு அபயம் கோரி எழுப்பிய குரலே அதுவென, பேதை சீதை நினைத்து விட்டாள். அடியற்ற மரம்போல் மயங்கிக் கீழே சாய்ந்தாள். கமண்டலத்திலிருந்த நீரை எடுத்து சீதையின் முகத்திலே இலக்குவன் தெளித்ததும் மயக்கம் தெளிந்து எழுந்தாள். 'மானைப் பிடித்துத் தரும்படி நான் பேராசை கொண்டு கேட்டதனாலன்றோ என் கணவனுக்கு இத்தகைய அபாயம் நேர்ந்திருக்கிறது. நான் என்ன செய்வேன்?' என்று கருதியவளாக எழுந்தாள்; இலக்குவனைப் பார்த்தாள்.

"தம்பி! என்ன பார்த்துக்கொண்டு நிற்கிறாயே! அண்ணனுக்கு ஏதோ விபரீதம் நேர்ந்து விட்டது. ஓடிச்சென்று பார்க்க நினைக்காமல் நிற்கிறாயே! ஓடிப் போ தம்பி; என்னவென்று போய்ப்பார்...... ஐயோ! என் நாதனுக்கு என்ன துன்பம் நேர்ந்ததோ....?"

இவ்வாறு சீதை துன்பமேலீட்டால் அலறும்போது இலக்குவனோ எதுவிதமான உணர்ச்சியையும் முகத்தில் காட்டிக் கொள்ளாமல் அசையாமல் நின்று கொண்டிருந்தான். இதனால் சீதையின் துயரம் பன்மடங்கானதுடன் கடுஞ்சினங்கொள்ளலானாள். "அண்ணனின் அபயக் குரல் உன் காதில் விழவில்லையா? நான் படும் வேதனையைத் தானும் நீ உணரவில்லையா? கல்நெஞ்சம் படைத்தவனா நீ? ஒரு நாள் மட்டும் பழகிய ஒருவருக்கு ஏதாவது துன்பம் நேரிட்டால்கூட, உதவி புரிவதற்காக ஓடுவார்களே! நீயோ எதுவுமே நடவாதது போல் நின்ற இடத்திலேயே நிற்கிறாயே! கருணையே இல்லாதவனா நீ?" இவ்வாறு பலவாறாக- பல வார்த்தைகளையும் சொல்லி ஓலமிட்டு அழுத சீதை மென்மேலும் கோபமடைந்தாள். அனலிலிட்ட மெழுகாக தான் உருகும் நிலை கண்டும் சற்றும் தளராமல் நின்ற இலக்குவனின் தோற்றம் சீதைக்கு மென்மேலும் எரிச்சலை ஊட்டியது.



### "போலி வேடம் போட்டாயா?"

"அண்ணனிடம் அளவற்ற பாசம் உள்ளவன் போல்- பக்தியுள்ளவன் போல் இதுகால வரை நீ போட்டதெல்லாம் வெறும் வேஷம் என்று இப்பொழுதுதான் எனக்குப் புரிகிறது! நீ இதுவரை போலியாகவே நாடகமாடியிருக்கிறாய்! அண்ணன் மாண்டுபோனால் என்னை உன் ஆசைக்கிணங்க வைத்து விடலாம் என்ற எண்ணத்துடன் இருந்திருக்கிறாய்! இப்பொழுதுதான் உன் கபட நாடகம் புரிந்தது. துரோகி! உன்னை நம்பிய எங்களுக்கு இத்தகைய துரோகம் நினைத்திருக்கிறாயே பாபி....!"

இவ்வாறு சீதை தொடர்ந்து கூறிய வார்த்தைகளை இலக்குவனின் செவிகளில் புகுந்துவிடாமல் தன்னிருகைகளாலும் காதுகளைப் பொத்திக்கொண்டான். அவனுடைய கண்களில் மடைதிறந்த வெள்ளம் போல் கண்ணீர் பெருக்கெடுத்தோடியது. "தாயே" என்று சீதையின் காலடியில் வீழ்ந்தான்.

"என்ன வார்த்தைகளைத் தாயே கூறத் துணிந்தீர்கள்? உங்கள் இருவரையும் எனது அன்னை தந்தையருக்கும் மேலாக- தெய்வமாகக் கருதி பயபக்தி செலுத்தும் இந்த அபாக்கியவானுக்கு ஏனம்மா இத்தகைய கொடுந்தண்டனை?

இராமபிரானுக்கு எத்தகைய தீங்கினையும் விளைவிக்- ஈரேழு பதினான்கு உலகங்களிலும் எவருமே இல்லை என்பதை நீங்கள் அறியமாட்டீர்களா? உண்மையில் அந்த அபயக் குரலை எழுப்பியது எமது அண்ணனல்ல; மாயமானுருவில் வந்த ஓர் அரக்கனின் சூழ்ச்சி. அந்த அரக்கன் இராம பாணத்தால் உயிர்விடும்போது அண்ணலைப் போலவே குரல் கொடுத்துள்ளான். நம்மை சூழ்ச்சி வலையில் வீழ்த்த நடைபெறும் மாபெரும் திட்டமே இது என்று உணருங்கள் தாயே!

நிலம், நெருப்பு, நீர், காற்று, ஆகாயம் ஆகிய ஐந்து பூதங்களுமே இராமபிரான் சீற்றம் கொண்டால், நிலை குலைந்து போய் விடுமல்லவா? நம் கண்முன்னே அரக்கர் தலைவர்களையும் மாபெரும் அரக்கர் படையினையும் தன்னந்தனியாக நின்று வதம் செய்த மாவீரன், ஓர் அரக்கனால் தனக்குத் துன்பம் நேரிடுகிறதே என்று உதவி கோரி அழைப்பானா? ஒருபோதும் நடக்காது தாயே! அவ்வாறு இராமபிரான் உதவி கோரி அழைப்பதானால் அண்டங்கள் அனைத்தும் நிலை குலைந்து போகுமல்லவா? படைத்தல் தொழிலைப் புரியும் பிரம்மதேவன் கூட அழிந்துபோவானே!

மக்களைக் காக்கும் வல்லமை படைத்த அண்ணல் தன்னைத் தானே காக்கும் வல்லமையும் கொண்டவர் என்பதை மறவாதீர்கள் தாயே! இன்னும் சற்று நேரத்தில் அண்ணல் இங்கு வந்து சேர்ந்து விடுவார். அதுவரை பொறுத்திருங்கள்!"

இவ்வாறு எத்தனை சமாதானங்களை எடுத்துக் கூறியும் சீதையின் துயரைத் தீர்த்து வைக்க இலக்குவனால் முடியாமற் போய்விட்டது. அவளுடைய மன வேதனை மென்மேலும் அதிகரித்தது.

### "தீயில் வீழ்ந்து தீய்ந்து போவேன்"

"சற்று நேரம் பொறுக்கச் சொல்கிறாய்! கணவனுக்குப் பெரும் அபாயம் நேர்ந்து விட்டதனை அறிந்த பின்னரும் இந்த அபலைப் பெண்ணைப் பொறுத்திருக்கும்படி கூறுகிறாய். ஒரு கணமும் இனிப் பொறுக்க மாட்டேன். தீயை வளர்த்து அத்தீயில் விழுந்து என் உயிரைப் போக்குவதே எனது வேலை. எனது உயிர் துறக்க இனிப் பொறுக்க மாட்டேன்." என்று கூறிய சீதை தீயினை மூட்டுதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்து விட்டாள். இதனால் இலக்குவன் இருதலைக் கொள்ளி எறும்பு போல் துடித்தான்.

தான் திரும்பி வரும்வரை சீதையை எத்தீங்கும் அணுகாமல் பாதுகாப்பாக இரு என்று கட்டளையிட்ட இராமரின் சொல்லை மீறுவதா? அல்லது "அண்ணனுக்கு ஏதோ தீங்கு ஏற்பட்டு விட்டது. உடனே போய்ப் பார்த்து வா, இல்லையேல் தீ வளர்த்துத் தீயில் குதிப்பேன்" என்று சபதம் கூறும் அண்ணியின் சொல்லைக் கேட்பதா? சிந்திப்பதற்குப் போதுமான அவகாசமில்லை. ஓரளவு எதிர்காலத்தை உணரக்கூடிய ஆற்றல் பெற்ற இலக்குவன், சீதையின் பிடிவாதத்தால் பெரும் துன்பம் ஒன்று சூழப் போவதை அறிந்து கொண்டான். இருப்பினும், அதனைத் தடுப்பதற்கான சக்தி தன்னிடம் இல்லை என்பதனையும் கண்டு கொண்டான். விதி தன் விபரீத விளையாட்டினைத் தொடங்கிவிட்டது. அதன் கோரப் பிடியிலிருந்து விடுபட தன்னால் மட்டுமல்ல, வலிமை பொருந்திய வில்லினையுடைய அண்ணல் இராமபிரானாலும் முடியாது என்பதனையும் தெளிவாகப் புரிந்து கொண்டான்.

"தாயே! தங்களைக் காக்கும்படி அண்ணலிட்ட கட்டளையையும் மீறிப் போகின்றேன். என்ன நடக்குமோ நானறியேன். இங்கு ஏதாவது தீங்கு ஏற்படுமானால் கழுகரசனான ஜடாயு எங்கிருந்தாலும் இங்கு வந்து காப்பார். அண்ணன் போன திசையிலேயே நானும் போகிறேன். ஆனால் தாயே ஒரேயொரு வேண்டுகோள்! பர்ணசாலையைச் சுற்றி எனது அம்பினால் ஒரு கோட்டினை வரைகிறேன். எந்தச் சந்தர்ப்பத்திலும் இந்தக் கோட்டினைத் தாண்டி- பர்ணசாலைக்கு வெளியே காலடி எடுத்து வைத்து விடாதீர்கள்!" இவ்வாறு கூறிய இலக்குவன் கலங்கிய கண்களுடன் விடைபெற்றுச் சென்றான்.

✦ ✓ ✧ ✓ ✦

### இராவணன் போட்ட தவவேடம்

மாமன் மாரீசன் மரணமடைந்து விட்டான் என்பதனைத் தெரிந்திருந்தும் அதற்காக எவ்வகையிலும் இராவணன் கலங்கவில்லை. சீதைக்குக் காவலாக நிற்கும் இலக்குமணன் எப்போது அவ்விடத்தை விட்டு அகல்வான் என்பதில்தான் அவன் கண்ணும்கருத்தும் இணைந்திருந்தன. தன் தங்கை சூர்ப்பணகையால் வர்ணிக்கப்பட்ட அந்தப் பேரழகுப் பெட்டகமான சீதையை எப்போது அருகில் சென்று பார்த்து இரசிப்பது என்று அங்கலாய்த்த வண்ணம் ஒரு புதர் ஓரத்தில் மறைந்திருந்தான். மாமனுடன் சேர்ந்து தான் போட்ட திட்டப்படி எல்லாம் நிறைவேறுவதனால் மகிழ்ச்சியடைந்தான்.

இலக்குவன் பர்ணசாலையிலிருந்து வெளியேறி சிறிது தூரம் சென்றதும் எதிர்பார்த்த தருணம் வந்துவிட்டது என்று மகிழ்ச்சி

**இராஜகுமாரன்**

பொங்க புதரின் மறைவிலிருந்து வெளிப்பட்டான். ஆஜானுபாகுவான தன் உடலை ஒடுக்கிக் கொண்டான். பல்லாண்டு காலம் தவமிருந்து உடல் மெலிந்தவன் போன்ற உருவெடுத்தான். காவியுடை, உருத்திராக்கம் உடலை அலங்கரிக்க, கையிலே கமண்டலம் ஏந்தினான். சடாமுடி பருத்து, நீண்டு பின்புறத்தை மறைத்தது. அடர்ந்த தாடியும், வெண்ணீறணிந்த நெற்றியுமுடையோனாய் பர்ணசாலை நோக்கி அடிமேலடி வைத்து நடந்து சென்றான்.

"கானகத்தின் நடுவே அழகிய பர்ணசாலை அமைத்து வாழும் துறவி யாரேனும் உள்ளே இருக்கிறாரா?" என்று வினவியவாறு முன்னேறினான். வாயில்வரை சென்றவனின் காலில் சுள்ளென்று தீயினால் ஒரு சூடுபட்டு கால் பொசுங்கியது போலிருந்தது. குனிந்து பார்த்தான். நிலத்தில் ஒரு கோடு போடப்பட்டிருப்பதைக் கண்டான். அதைப் பற்றி மேலும் ஆய்வு நடத்துவதற்கு அவனுக்கு அவகாசமில்லை. பர்ணசாலையினுள்ளிருந்து ஜோதிவடிவான ஒரு தேவதை தோன்றுவதைக் கண்டு பிரமித்தான்.

தன் முன்னே நிற்பது சீதை தான் என்பது தெரிவதற்கு வேறு அத்தாட்சி தேவையில்லை. அவள் சின்னஞ்சிறு பெண்ணாக இருந்த போது சனகரின் அரசவையில் பார்த்தவனல்லவா? காலம் சீதையின் அழகைப் பன்மடங்காக வளர்த்துவிட்டிருந்தது. அகம்பனும் தங்கை சூர்ப்பணகையும் தந்த வர்ணனைகள், சீதையின் அழகில் கால் பங்கு கூட இருக்காது என்பதைத் தெரிந்து, மேலும் காம வேதனையால் காய்ந்தான். இருப்பினும் தான் தவக்கோலத்தில் வந்திருப்பதை உணர்ந்தவனாக, "பெண்ணே! இந்த வனத்தில் தனித்து வாழும் நீ எந்த மகரிஷியின் துணையுடன் இங்கு இருக்கிறாய்?" என்று வினவினான்.

ஏற்கனவே அழுதழுது கண்கள் புடைத்திருந்தன. அந்நியமான குரலைக் கேட்டதும் பர்ணாசலையினுள்ளிருந்து வரும்போதே தன் சேலைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டு தான் வந்தாள். ஆனால், இராவணனுடைய வினாவினால் அவளுடைய துக்கம் அதிகரித்தது. தொண்டை கிட்டிக்கொண்டது. கண்களில் நீர் முட்டினாலும்- அதிதியின் முன்னிலையில் கண்ணீர் சிந்தலாகாதே என்ற எண்ணத்தினால் எல்லாத் துயரங்களையும் உள்ளடக்கிக் கொண்டாள்.

(தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி: 37

**சரியானவிடை:-** இராமரின் கையால் மரணமடைந்தால் நற்பதவி- ஆன்ம ஈடேற்றம் ஏற்படும் என்பது.

1. A.H.M. ஹரீஸ்
   இல.74/1, மாவில் மட வீதி கண்டி.
2. கு.வனிதா.
   200/27, பேராதெனிய வீதி, கண்டி.
3. K. மாதவன்.
   இல:-1/7, 8ம் குறுக்கு, மாமாங்கம், மட்டக்களப்பு.
4. ஹஜேந்தினி மகேந்திரன்.
   90, பார்வீதி, மட்டக்களப்பு.
5. M.A. பாத்திமா நஸ்ரீனா. இல: 28, ஹிஜ்ரா புர அட்டன்.

**போட்டி இல. 39** கேள்வி:- இலக்குமணன் குறிப்பிட்ட ஐந்து பூதங்கள் யாவை?

ஜூலை.20 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்கப்பட வேண்டிய முகவரி:
**இராமாயணப் போட்டி– இல.39, தினமுரசு வாரமலர், த.பெ.இல– 1772, கொழும்பு.**

## பயோடேட்டா

<u>பெயர்</u>:– சந்திரமான சேகர்.
<u>விருப்பம்</u>:– குருவை மிஞ்சுவது.
<u>சாதனை</u>:– பதவி கிடைத்தது.
<u>வேதனை</u>:– அதிகாரம் போதாமலிருப்பது.
<u>மறந்தது</u>:– புலிகளின் நட்பு.
<u>மறக்காதது</u>:– சிறையில் இருந்தது.
<u>நிரந்தரப் போட்டி</u>:– குருவும், பேரனும்.
<u>தற்காலிக நண்பர்கள்</u>:– ஆளும்கட்சி.
<u>உடனடி இலட்சியம்</u>:– கிடைப்பதைப் பெறுவது.
<u>எதிர்கால இலட்சியம்</u>:– தனிப்பெரும் கட்சி.



# காதிலை பூ கந்தசாமி

*ஜெயலலிதாவின் உடன்பிறவா சகோதரி சிறையில் இருக்கிறார். ஓடோடிச் சென்று அவரைச் சந்தித்தார் ஜெயலலிதா. இருவரது சந்திப்பையும் கற்பனை செய்கிறார் காதிலை பூ கந்தசாமி.*

## சிறையில் ஒரு சந்திப்பு

சசிகலா சோகமே உருவாக, கோலமே வேறாக, காலமே இப்படியாகிவிட்டதே என்ற கவலை நிழலாட, தளர்ந்த நடையுடன், துவண்ட இடையுடன், குலைந்த கூந்தலுடன் வருகிறார்.

ஜெயலலிதா அக் காட்சியை காண்கிறார். அவர் நெஞ்சு டமார் டமார் என்று அடித்துக் கொள்கிறது. கண்கள் குளமாகி, கண்ணீர் வழிந்தோடுகிறது.

"அய்யகோ.... நான் காண்பது என்ன கனவா? அல்லது நனவா? நான் இருப்பது தரையிலா. அல்லது நரக உலகிலா?

நடமாடும் நகைக்கடையே! பணமாலை அணிந்து பவனி வந்தவளே! உலகத்து சொத்தெல்லாம் நம் சொத்தாக மாறாதோ என்று சொப்பனம் கண்டவளே! ஓசியில் சொத்து வர, ஏசியில் படுத்து ஜாலியாய் இருந்தவளே! நீயா இது?"

ஆட்சி போனது. நான் அஞ்சவில்லை. நாற்காலி போனது நான் கலங்கவில்லை. நீயிருப்பாய் அருகில்! நீயிருக்கப் பயமேன் என்றல்லவோ நானிருந்தேன் துணிவாக!

பிரித்துவிட்டார்களே உன்னை. என் இதயக்கனியை பறித்து சிறையில் எறிந்து விட்டார்களே!

பஞ்சுமெத்தையில் நீ படுத்திருந்த கோலம் கண்டிருக்கிறேன்.

கட்டாந்தரையில் நீ கண்ணுறங்கும் கொடுமையை எப்படிக் காண்பேன். அதுதான் உன்னோடு நானும் உள்ளே வர எண்ணவில்லை.

பட்டுச்சேலையில் நீ பக்கத்தில் இருக்கும் அழகை ரசித்திருக்கிறேன். இந்த பருத்திச் சேலையில் உன்னை வருத்தும் கொடுமையைக் காணவா இங்கே வந்தேன்?

நீயின்றி நானில்லை. நானின்றி நீயில்லை. நான் தூங்க முடியவில்லை. தாலாட்ட நீயில்லை. காலுக்குள் சுளுக்கு வந்தால் எடுத்துவிட உடன்பிறவா நீயில்லை. காதுக்குள் யோசனை சொல்ல உன்னை விட்டால் யாருண்டு?"



ஜெயலலிதா விழுந்து புரளாத குறையாக துடிக்கிறார். கதறுகிறார்.

சசிகலா அவர் அருகில் வந்து தலையைத் தடவி ஆறுதல் சொல்கிறார்.

சிறை அதிகாரி குறுக்கிடுகிறார்.

"சிறைக்கைதிகள் யாரையும் தொட்டுப் பேச அனுமதியில்லை." என்று சொல்லி விட்டு தனது மீசையை முறுக்கிக் காட்டுகிறார்.

ஜெயலலிதா சீறுகிறார்.

"நீர்தான் சிறை அதிகாரியோ?"

"நீங்கள்தான் ஜெயலலிதாவோ?"

"ஆ...என்ன திமிர்?"

"அது என் யூனி போமுடன் கூடப்பிறந்தது."

"ஆ....என்ன திமிர்?"

"அது என் யூனி போமுடன் கூடப்பிறந்தது."

"யூனிபோம்....ஹா ஹா ஹா. காக்கி யூனிபோமுடன் என் காலில் விழுந்தவர்கள் பலர் உண்டு."

"அது அந்தக் காலம்!"

"மிஸ்டர் ஜெயிலர் வார்த்தைகளை அளந்து பேசும்!"

"வாங்கியதையே அளக்காமல், கணக்கு வைக்காமல் வாங்கியவர்கள் நீங்கள்!"

"உன்மீது வழக்குத் தொடரவேண்டியிருக்கும்!"

"என்னவென்று?"

"வரம்புமீறி நடந்தாய் என்று!"

"ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டு!"

"கலைஞர் முதல் கவர்னர் வரை என் குற்றச்சாட்டுக்களால் கலங்கியதுண்டு. நீ என்ன பெரிய பிஸ்தாவா?"

"மிஸ் ஜெயா! உங்கள் வாயை மூட வைக்க என் உதிரம் துடிக்கிறது. ஏற்றுள்ள பொறுப்பும், போட்டுள்ள யூனிபோமும் அடக்கு அடக்கு என்று தணிக்கிறது!"

"எதற்கும், எவருக்கும் ஒரு விலை உண்டு. மிஸ்டர் ஜெயிலர் உமக்கு என்ன வேண்டும். காசாக வேண்டுமா? கணக்கற்ற நகையாக வேண்டுமா? அல்லது கவர்ச்சிக் கன்னி வேண்டுமா? கேளும், நான் சுட்டு விரல் அசைத்தால் போதும், சுழன்றுவந்து உமது காலடியில் விழுவார்கள்."

"ஹாஹாஹா... இலஞ்சம், ஊழல், மோசடி. அவை உங்கள் கூடப்பிறந்த குணம். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, அவை எங்கள் உதிரத்தில் ஊறிய குணம்! சுருட்டிய ஊர் சொத்தையெல்லம் உம்மால் திருப்பித் தர முடியுமா? அதுதான் நீர் தரவேண்டிய தண்டம்!"

"தண்டனை, சிறை, தண்டம்! உனக்கேன் தரவேண்டும் தண்டம்? நாங்கள் வாங்கிக் குவித்ததையெல்லாம் வாரியள்ளி சூட்கேஸ்களில் நிரப்பித் தந்தாயா? வண்டி வண்டியாக வந்திறங்கிய சூட்கேசுகளை தலையில் சுமந்து வந்து தந்தாயா? அட்லீஸ்ட், போயஸ் தோட்டத்தில் கொஞ்சி விளையாடும் என் உடன்பிறவா குடும்பத்திற்கு குற்றேவல் புரிந்தாயா? யார் நீ? உடன்பிறவா சோதரனா, அல்லது என் உடன்பிறவா சோதரியின் மாமனா, மச்சானா, மருமகனா? பணம் பொழிந்தது, பெட்டி நிரம்பியது. உனக்கேன் தரவேண்டும் தண்டம்? அசிட் வீசி முகம் பொசுக்கும் என் தொண்டர் கூட்டம், உன் முறுக்கு மீசை முதக்கையும் பொசுக்கிப் போட்டுவிடும் ஜாக்கிரதை! சசி! ஹௌ இஸ் இட் கண்ணு ?"

"சூப்பர், உங்கள் நாவன்மை சொல்லியா தெரியவேண்டும்?"

ஜெயிலர் ஆடிப்போகிறார்.

ஜெயா வெற்றிப் புன்னகையோடு சசியை ஆரத்தழுவி ஆறுதல் சொல்ல ஆரம்பிக்கிறார்.

**யாவும் கற்பனை**



படிப்பகம்

... Paper at the G.P.O.(QD/24/NEWS/96)

www.padippakam.com

அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
436331
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

# சாதனை நாயகி



ஸ்ரீ கல்யாணி ஜுவலஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
3236557
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

← டென்னிஸ் வீராங்கனைகளுக்கிடையே விளையாட்டில் மட்டுமல்ல, உடல் கவர்ச்சியிலும் போட்டிதான்!

ஸ்டெபி கிராபுக்கு அடுத்தபடியாக டென்னிஸ் ரசிகர்களின் கனவுக்கன்னி சான்செஸ், இவர் ஸ்பெயின் நாட்டுப்புயல்.

குள்ளமான தோற்றம். திடமான உடல்வாகு. குறைந்த உயரமான ஆடையோடு களத்தில் இறங்கிவிட்டார் என்றால் ரசிகர்களின் பார்வை அங்கே இங்கே நகராது.

மார்ட்டினா நவரட்டிலோவாதான் கோடிக்கணக்காக சம்பாதித்துள்ள டென்னிஸ் வீராங்கனை. ஆனால் இந்த சான்செஸ் இருக்கிறாரே. யப்பா! இரண்டே இரண்டு போட்டிகள் மூலம் அதிக வருவாய் சம்பாதித்த முதலாவது வீராங்கனை என்ற சாதனையைப் படைத்துவிட்டார்.

1994ம் ஆண்டு ஃபிரான்ஸ் ஓபன் டென்னிஸ், அமெரிக்க ஓப்பன் டென்னிஸ் இரண்டிலும் வெற்றிவாகை சூடினார். இரண்டிலும் கிடைத்த மொத்த பரிசுத் தொகை, 29 இலட்சத்து 43 ஆயிரத்து 665 அமெரிக்க டொலர்கள். நம்மூர் பெறுமதிப்படி கிட்டத்தட்ட 16 1/4 ரூபாய். இது ஒரு உலக சாதனை.

கிரிக்கெட், டென்னிஸ் இரண்டுமே பணம் காய்க்கும் விளையாட்டுக்களாகி விட்டன. முன்னணி வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் வேட்டைதான்.

டென்னிஸ் வீரர்களில் அதிகம் சம்பாதித்துள்ள வீரர் பீற்றெ சாம்ராஸ். 1994 இல் கலந்துகொண்ட போட்டிகளில் மட்டும் அவர் சம்பாதித்த பரிசுத்தொகை; 48 இலட்சத்து 57 ஆயிரத்து 818. நம்மூர் பெறுமதியில் கிட்டத்தட்ட 26 3/4கோடி ரூபாய்.

# கடிகார அதிசயம்




↑ பலப் பல ரகங்களில், பல்வேறு விலைகளில் கைக்கடிகாரங்கள் வந்துவிட்டன. ஆனால் படத்தில் இருக்கும் கைக்கடிகாரம்தான் உலகில் முதலாவது மிகச் சிறிய கைக்கடிகாரம். அதன் அளவை காண்பிக்க பக்கத்தில் ஒரு தீக்குச்சியை வைத்துள்ளார்கள். ஒரு தீக்குச்சியின் உயரத்தைவிட சற்றுப் பெரியது இக் கடிகாரம்.

கடிகாரம் சிறியதாக இருந்தாலும், கடிகாரத்தில் இரத்தினக் கற்கள் பொறிக்கப்பட்டுள்ளன. (உள்ளங்கையில் மறைத்து கருட்டிச் சென்றால் போதும் பல இலட்சங்கள் தேறும்) சுவிற்ஸர்லாந்தில் உள்ள 'ஜாகெர் லி கொல்ட்ரெ' நிறுவனத்தினரால் இது தயாரிக்கப்பட்டது. கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் உலகில் மிகச் சிறிய மற்றும் சிறியதில் விலை உயர்ந்த கைக்கடிகாரமாக அங்கீகாரம் பெற்றுள்ளது.

# என்ன இது தெரியுமா?

→ படத்தில் இருப்பது என்னவென்று ஊகிக்க முடிகிறதா? வைரம்! இதிலுள்ள விசேஷம் யாதெனில் பெரிய பட்டைகளாகத் தீட்டப்பட்டிருப்பதுதான். மேற்பரப்பில் வெட்டப்பட்டுத் தெரிவதுதான் பட்டை தீட்டல். இந்த வைரம் 545.67 கரட்.

தென்னாபிரிக்காவில் உள்ள வைரச் சுரங்கம் ஒன்றில் எடுக்கப் பட்டது. காபிரொல்கேவ்ஸ்கி என்னும் ரசியரால் பட்டை தீட்டப்பட்டது. உலகில் பெரிசு பெரிசாக பட்டை தீட்டப்பட்ட வைரம் இதுதான்.





← கீழே கையில் வைத்து ரசித்து மீட்டு கிறார் பாருங்கள் அதுதான் சாதாரண வயலின். அவருக்கு பின்னால் இருப்பது தான் உலக சாதனைக்காக உருவாக்கப் பட்ட மகா பெரிய வயலின். கையில் வைத் தெல்லாம் மீட்டமுடியாது. ஏணிவைத்து ஏறித்தான் மீட்டிப் பார்த்து நாத சுகம் அறியமுடியும்.

இந்த ஆச்சரிய வயலினின் உயரம் 24.4 அடி. சாதாரணமாக அணைத்துத் தூக்கவும் முடியாது. அகலம் 8.8 அடி. இதனை உரு வாக்க ஆயிரம் மணிநேரங்கள் தேவைப்பட்ட தாம்.

ஃபிரான்சிலுள்ள செயின்ற் எல்போய் பட்டறையில் வயலின்களை உருவாக்குவதில் கைதேர்ந்தவரான கிறிஸ்டியன் உர்பிஸ்டா என்பவரால் செய்யப்பட்டது. உலகில் மிகப்பெரிய வயலின் இதுதான். கின்னஸ் சாதனை!

# மீட்டக் கை போதாது

# எப்போது தூங்கினாய்?



→ பார்க்கவே பயங்கரமாக இருக்கிறதல்லவா. விஷயத்தையும் கேளுங்கள். இந்த உடலுக்கு வயது 5 ஆயிரம் வருடங்கள்!

ஒஸ்ரியா-இத்தாலி நாடுகளுக்கிடையில் உள்ள எல்லைப் புற மலைத்தொடருக்குப் பெயர், 'ரிறோலியன் ஆல்ப்ஸ்'. அந்த மலைத்தொடரில் பல்லாயிரம் ஆண்டுகள் உறைந்திருந்த நதியொன்று உருகத் தொடங்கியிருந்தது. அப்போதுதான் இந்த உடலும் வெளியே தெரிந்தது.

பிரபலமான மலை ஏறும் வீரரான றெயினோல்ட் என்பவரது கண்ணில் இது பட்டுவிட்டது. உடனே தகவல் அனுப்பி ஆராய்ச்சி குழுவினரிடம் உடலை ஒப்படைத்தார். ஐரோப்பிய மூதாதைகளது உடல்தான் இது. சுமார் 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் நதி உறையத் தொடங்க முன்னர் இவர் நதியில் சிக்கியிருக்கலாம். நதி உறைந்து போனதால் இவரது உடல் குளிர்சாதனப் பெட்டிக்குள் இருப்பது போல பதமாக, பத்திரமாக இருந்திருக்கிறது என்று ஆராய்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

உலகில் கண்டெடுக்கப்பட்ட உடல்களில் மிக புராதனமான உடல் இதுதான் என்று 'கின்னஸ்' புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.



இப்பத்திரிகை கொழும்பு [illegible] 20, வெல்பார, [illegible] ஜுலை மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்